Registered as a News Paper

பக்கம் - 20

# ஈழநாதம்

விலை: 15.00

வெள்ளிநாதம் Weekly

நாதம் - 14 | வெள்ளி - 41 | 05 - 11 - டிசம்பர் - 2003



# ஈழநாதம்

வெள்ளிநாதம்

யாழ்சாலை, கிளிநொச்சி 05 .12. 2003

மின் அஞ்சல் : Ehatham@sltnet.lk


## தேசிய அரசுச்சூத்திரம்

தேசிய அரசமைப்புப் பற்றி ரணில் - சந்திரிகாவின் பிரதிநிதிகளான மலிக் - மனோ குழுவினரின் சந்திப்பு முடிவு எட்டப்படாமல் இழுபடுகிறது.

பௌத்த பிக்குமார்களிடமும் சிங்கள புத்திஜீவி இனவாதிகளிடமும், தேசிய அரசு ஒன்று அமைவதன் மூலம் சிங்கள மக்கள் புலிகளின் பேரம் பேசும் ஆற்றலை பலவீனப்படுத்தி அதிக நன்மை அடையலாம் என்ற கருத்து தீவிரமாக இருந்துவருகிறது.

ரணில் எதிர்க்கட்சியிலிருந்த போது தேசிய அரசுக்கு அழைப்பு விடுத்தாரே என்று சந்திரிகா இப்பொழுது கேள்வியெழுப்புகிறார்.மறுவளமாக நாம் கேட்டால் ரணில் அழைப்பு விடுத்த போது ஆளும் கட்சியாக இருந்த சந்திரிகா அதனை ஏற்கமறுத்தாரே. அவரே இப்பொழுது ஏன் அழைப்பு விடுக்கிறார். அதன் மர்மச் சூத்திரம் என்ன?

ஏனெனில் தேசிய அரசென்ற சந்திரிகாவின் முன்மொழிவு தேசிய அரசை அமைப்பதற்கானதல்ல. அது தேசிய அரசை ரணிலைப்புறக்கணிக்க வைப்பதானதே.

ரணிலையும் ரணிலது சமாதானத்தையும் இந்த வரவு செலவுதிட்டத்தின் பின்பும் புலிகளுடன் மீண்டும் பேச்சை ஆரம்பிப்பது பற்றிய சூழல் உருவாகிய பின்பும் தொடர்ந்தும் அனுமதித்தால் ரணிலுக்கு வந்து சேரக்கூடிய உதவிவழங்கும் நாடுகளின் வாக்களிக்கப்பட்ட நிதி சந்திரிகாவையும் அவரது கட்சியையும் இலங்கை அரசியலில் ஒரு பொருட்டாக இல்லாத அளவிற்கு மாற்றிவிடக் கூடும் என்று சந்திரிகாவும் அவரது ஆலோசகர்களும் கணிக்கின்றனர்.

ஜே.வி.பி. ,பொ.ஐ.மு கூட்டின் மூலம் ஒரு தேர்தலை சந்திப்பதே நம்பிக்கையீனங்களுக்கும் மத்தியில் இருக்கின்ற மிக அரிதான தெரிவாக சந்திரிகாவிற்கு இப்பொழுது இருக்கின்றது.

தேர்தலை சந்திக்க நேரிடும் முன்பு சமாதானத்தை குழப்பிய பழியிலிருந்தும் தன்னை பாமர சிங்கள மக்கள் மத்தியில் இருந்தும் விடுவித்துக் கொள்ளவேண்டியிருக்கிறது. அதற்காக சமாதானத்தை மேலும் பலமாக்கிக் கொள்ள இரு வேறு துருவங்களாக இருக்கும் அதிகார மையங்களை ஒன்று சேர்த்து ஒத்துழைப்போடு சமாதானத்தை முன்னெடுக்க தன்னாலான முயற்சிகள் எடுக்கப்பட்டதென்று காட்டவும், ரணில் அதற்கு ஒத்துழைக்கவில்லையென்று சொல்லவும் மிக அருமையான ஆயுதமாகச் சந்திரிகா இந்த தேசிய அரசு முன்மொழிதலை பயன்படுத்திக் கொள்கிறார்.

அதற்கு வலுச்சேர்க்கவே ஊடகத்துறை அமைச்சு தனக்கு இன்றியமையாததெனக் கருதுகின்றார். தமிழரின் பேரம் பேசும் ஆற்றலை பலவீனப்படுத்தி சிங்க மக்களின் நலன்களை உறுதிப்படுத்தலாம் என்ற கருத்தை விதைக்கவும், அந்த கருத்துடையவர்களை திரட்டவும் சந்திரிகா இந்த அவகாசத்தை பயன்படுத்தலாம்.

இரு கட்சிகள் வந்து போவதால் அரசமைப்பதற்காக சிறுபான்மைக்கட்சிகளுடன் அவற்றின் பேரம் பேசுவதற்கு அடிபணிந்து போகும் நிலையை தவிர்க்க முடியும் என்றும் புலிகளுடன் உறுதியாக பேரம் பேச அரச தரப்பை தன்னுடையதாக்கும் என்றும் ஏற்கவே விதைக்கப்பட்டு சிங்கள மக்கள் மத்தியில் நிலவி வரும் இக்கருத்தை தூண்டி வளர்த்தெடுப்பதன் மூலம் இனித்து வரக்கூடிய சந்தர்ப்பத்தில் தேர்தலை சந்திக்க வாய்ப்பாக இருக்கும் என நம்பினார்.

இந்நிலையை அடைவதற்கு ஊடகங்களினதும், பௌத்த சங்கங்களினதும் இனவாத புத்திஜீவிகளினதும் சக்தி தனக்கு பக்கபலமாக இருக்கவில்லை எனவும் நம்பினார். அதனாலேயே இவற்றின் மீது அதிக சிரத்தை எடுக்கப்படுகிறது.

இந்த உள்நோக்கம் விளக்கப்பட்டதனாலேயே ரணில் சந்திரிகாவின் முன்மொழிவை மறுக்காமலும், அதேநேரம் ஏற்காமலும் ஆலோசித்து முடிவுகாண ஒரு குழுவை அமைக்கலாமென குண்டைத் தூக்கிப் போட்டார்.

இவ்விடயத்தில் ரணிலின் அணுகுமுறையென்பது சந்திரிகாவின் தேசிய அரசு முன்மொழிவை, ஒப்புக்கொள்ளாமல் ஆனால் ஒத்துழைப்பதாகக் காட்டி ஒத்துழைக்கவில்லையென்ற பழியை தான் ஒத்துக்கொள்ள வேண்டிய கட்டம் வராமல் பார்த்துக்கொள்வதாக ஒரு ஒப்புக்கு பேச்சை நடத்துவதே.

இதனால் மலிக்-மனோ குழுக்களின் பேச்சுக்கள் முடிவின்றி முற்றுப்பெறாது தொடரும்..... முற்றுப்பெறாது தொடர்ந்தாலும் அது முடிவை எடுக்காது.

சிங்கள மக்கள் தம்மை வழிநடத்தும் தலைமைத்துவங்களை புரிந்துகொள்வாரா? சமாதானத்தை இவர்களிடம் இருந்து மீட்டெடுப்பரா?

## தூரனின் பார்வையில்

# வரலாற்றுத்தவறுகளை சுமக்கப்போகும் இஸ்லாமிய தமிழ் தலைவர்கள்...!

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகாவின் அதிரடி அரசியல் நடவடிக்கைகளின் காரணமாக ஏற்பட்ட அரசியல் கொந்தளிப்பு நிலை, சமாதான நடவடிக்கைகளை புறந்தள்ளியுள்ள நிலையில் அதனை மேலும் குழப்பத்துக்குள்ளாக்கி, முற்றாகவே அமைதி நடவடிக்கைகள் யாவற்றையும் செயலிழக்க வைக்கும் தனது அரசியல் மூலோபாயத்தை சனாதிபதி மிகவும் கச்சிதமாக திட்டமிட்டு செயற்படுத்திவருகிறார் என்பதையே அவரது அண்மைக்கால நடவடிக்கைகள் யாவும் நிரூபித்து வருகின்றன.

மூன்று பிரதான அமைச்சுக்களை சந்திரிகா தன் வசப்படுத்திக்கொண்டதையடுத்து சிறிலங்காவின் நாடாளுமன்றத்தை பொறுப்பேற்று நாட்டை நிர்வகிக்கும் ஐ.தே.முன்னணி அரசு பெரும்பாலும் முற்றாகவே அதிகார வலுவற்ற பொம்மை அமைச்சரவை ஒன்றைக் கொண்டதாக மாறிவிட்டது.

இந்த நிலையில் ரணில் வெறுமனே ஒரு 'றப்பர் முத்திரை' பிரதமராக எத்தனை நாளைக்குத்தான் பதவியில் இருக்கமுடியும். இத்தகைய ஒரு நிலை அவரது அரசியல் ஆளுமைக்கு தகுந்த ஒன்றாக அமையாது என்பதுடன் அவரது எதிர்கால அரசியல் வாழ்வையும் மிக மோசமாகப் பாதிக்கும் என்பதும் உண்மையே.

இதை ரணில் நன்கு அறிவார்.

அதேசமயம் சந்திரிகாவின் இலக்கும் அதுவேயாகும்.

ரணிலின் அரசியல் ஸ்திரத்தன்மையை, அரசியல் செல்வாக்கை எத்தகைய ராஜதந்திரத்தை அல்லது சட்டபூர்வ அரசியல் சதியை, பயன்படுத்தியேனும் சிதைப்பது சந்திரிகாவின் முக்கிய நோக்கமாக இருந்த அதேசமயம், விடுதலைப் புலிகளுடனான சமாதானப்பேச்சுவார்த்தையை ஆதரிப்பதுபோல் காட்டிக்கொண்டு, அதனை நிரந்தரமாக ஒரு ஸ்தம்பித நிலைக்கு கொண்டு செல்வதும் அவரின் திட்டமாகவும் இருந்தது.

இத்திட்டத்தின் மற்றொரு பக்கம் இன்னொரு அரசியல் சதியை இனவாத இலக்குடன் மேற்கொள்வதாகவும் உள்ளதை உணர்ந்து கொள்ளுதலும் அவசியமாகும்.

அதாவது கிழக்கில் தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகத்தவர்களிடையே பகைமை மற்றும் மோதல் உணர்வை, சமூக விரோத சக்திகளையும், தேசவிரோத தமிழ்க் குழுக்களையும் பேரினவாத வெறியர்களின் வழிகாட்டலில் செயற்படவைத்து அதிகரிப்பதும் சனாதிபதியின் தலைமையிலான பொ.ஐ. முன்னணியினரின் மறைமுகமான திட்டமுமாகும்.

தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகத்தவரிடையேயான நட்புறவும், பாரம்பரியப் புரிந்துணர்வும், பேரினவாதத் தலைமைகளின் மித்திரபேதத் தந்திரோபாயங்களால் கடந்த மூன்று தசாப்தங்களாக பெருமளவு சிதைவடைந்து இருதரப்பினருக்குமிடையே ஒரு விதமான பகையுணர்வு வளர சிங்களத் தலைமைகள் கையாண்ட யுக்திகள் பலவாகும். வடக்கிலும் கிழக்கிலும் இஸ்லாமியத் தமிழர்களுக்கும், ஏனைய மதங்களை பின்பற்றும் தமிழர்களுக்குமிடையே மதரீதியிலான முரண்பாடுகள் என எதுவுமே தலைதூக்கியதில்லை. இருதரப்பினிடையே தாய்மொழியும் தமிழாக அமைந்திருந்தமையானது மதவேறுபாடுகளுக்கப்பால் இரு இனத்தவரிடையேயும் பரஸ்பர நல்லுறவு ஏற்படக் காரணமாகவும் இருந்தது.

வடக்கிலும் கிழக்கிலும் இந்துக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் என அனைத்து மதங்களைச் சார்ந்தவர்களும் தமிழ் என்ற மொழியால் இறுக்கமான உறவு - உணர்வுகளைப் பேணிவருவது பௌத்த சிங்கள பேரினவாத அரசியல் தலைமைகளுக்கு ஒரு போதுமே உடன்பாடாக இருந்தது கிடையாது.

இந்த உறவு இறுக்கமானால் சிறுபான்மையினரான தமிழ் பேசும் இனத்தவர்கள் அனைவருமே ஒன்றிணைந்து ஒரு பெரிய வலிமையான சக்தியாகி சிங்களபேரினவாத ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு எதிரானதும் ஆபத்தானதுமான ஒரு நிலையை ஏற்படுத்தி விடுவார்கள் என்ற அச்சம் சிங்கள அரசியல் தலைமைகளுக்கு சிலதசாப்தங்களின் முன்னரே ஏற்பட்டுவிட்டது.

பண்டாரநாயக்கா முதல் - சந்திரிகாவரை சிங்களத் தீவிரவாத தலைவர்களும் காலத்திற்கு காலம் அவர்களின் அரசியல் மற்றும் ஏனைய தேவைகளின் அவசியத்தின் நிமித்தம் தமிழ் அரசியல்வாதிகளிடையே - அவர்களின் பலவீனங்களைப் பயன்படுத்தி. பிளவுகளை ஏற்படுத்தி, முரண்பாடுகளை வளர்த்ததன் மூலம் சிறுபான்மையின் ஒருமித்த உரிமைக்கான போராட்ட உணர்வை நன்கு திட்டமிட்ட வகையில் சிதைத்தனர்.

குறிப்பாக முஸ்லிம் மக்களின் தலைமைகளுக்கிடையே பதவிப் போட்டியை ஊக்குவித்து மோதல்களை உருவாக்கியதன் பின்னணியில் சிங்களப் பேரினவாதத்தின் பயங்கரமான கைகள் இருந்தன.

இவையொன்றும் அந்தத் தலைமைகளுக்கு தெரியாத விடயமல்ல. ஆனால் பதவி வெறியும், போட்டியுணர்வும் இன ஒருமைப்பாட்டையே சிதைத்து தங்களுக்குள்ளேயே சந்தி சிரிக்கும் அளவுக்கு அவமானகரமான வகையில் மோதிக்கொள்ளவே வழிவகுத்தது.

இஸ்லாமியத் தமிழ் தலைமைக்குள் எப்படி பேதங்களை உருவாக்கினார்களோ அதே வழியில் தமிழ் தலைமைகளுக்கும் அதாவது தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இஸ்லாமியத் தலைவர்களுக்குமிடையே எத்தகைய நல்லுறவும் ஏற்படவிடாதும் பார்த்துக் கொண்டார்கள்.

நாட்டின் இனப்பிரச்சினையை இதற்கு அவர்கள் பயன்படுத்திய விதம் ஒரு துரோகத்தனமான சதியாகும்.

முஸ்லிம் மக்களுக்கும் தமிழ் மக்களுக்குமிடையே இனத்துவ முரண்பாடுகளையும் மோதல்களையும், சமூக விரோத சக்திகளையும், கூலிப்படைகளையும் பயன்படுத்தி, சர்வதேச உளவு அமைப்புக்களின் ஆலோசனைகளுக்கிணங்க சிங்கள அரசியல்வாதிகள், பேரினவாத அமைப்புகளின் அனுசரணையுடன், ஏற்படுத்திய விதம் இரு தரப்பினரிடையேயும் நிரந்தரமான பகைமையுணர்வை விதைப்பதையே இலக்காகக்கொண்டதாகும்.

இஸ்லாமியத் தமிழ் தலைமைகள் இதற்கு பலியானவிதம் மிகவும் பரிதாபகரமானதாகும்.

தமிழ் மக்கள் எவ்வாறு திட்டமிட்டு அடக்கி ஒடுக்கப்பட்டார்களோ அதேபோல் ஒரு கட்டம் வரும் போது, இஸ்லாமியத் தமிழர்களையும், மலையகத் தமிழர்களையும் அரசு ஒடுக்கவே செய்யும் என்ற சிந்தனையோட்டமும் தொலைநோக்கு யோசனையும் இரு தரப்பு தலைமைகளுக்கும் இருந்தது கிடையாது.

தமிழ் மக்களின் விடுதலைக்கான போராட்டம் என்பது இஸ்லாமியத் தமிழர்களின் உரிமைகளுக்குமான போராட்டம் தான் என்பதை அவர்கள் புரிந்து கொள்ளவிடாது சிங்கள பேரினவாதம் அவர்களை பதவிப்பதர்களாக்கிவிட்டது துயரமான விடயமே.

இன்று கிழக்கில் நடைபெறும் வன்முறைகளின் பின்னணியில் இயங்கும் அரச சார்பு, சமூக விரோத சக்திகள் தமிழ் முஸ்லிம் மக்களிடையே நல்லுறவு ஏற்படுவதை சிதைப்பதையே ஒரே இலக்காகக் கொண்டுள்ளனர் என்பதை இஸ்லாமியத் தலைமைகளும், அடிப்படை மதவாத அமைப்புகளும் சிந்திக்க தவறிவிட்டன.

கிழக்கின் அசம்பாவிதங்களுக்கு விடுதலைப்புலிகளைக் காரணம் காட்டும் சந்திரிகாவின் இரத்தக் கறை படிந்த கரங்களின் கொடூரத்தினை உடத்தலவின்ன படுகொலைகளின் போதாவது முஸ்லிம் மக்கள் புரிந்து கொண்டிருக்க வேண்டும்.

இன்று நடைபெறும் வன்முறைகளின் பின்னாலும் சிங்கள அரச பயங்கரவாதத்தின் மறை கரம் ஒன்று வேறு சில வெளிச்சக்திகளின் அனுசரணை மற்றும் ஆலோசனையுடன் செயல்படுகிறது என்பது உண்மையாகும்.

இந்த மறைகரம் இனம் காணப்படவேண்டும் என்பது காலத்தின் கட்டாயமாகும். இந்தநாட்டின் சமாதான முயற்சிகளைச் சிதைப்பதும், விடுதலைப்புலிகளை மீண்டும் பயங்கரவாதிகளாக சித்தரிக்க முயல்வதும், தமிழ் - இஸ்லாமியத் தமிழ் மக்களிடையேயான உறவுகளைத் தகர்ப்பதும் தான் இந்த பேரினவாத வழிகாட்டலுடனான மறைகரத்தின் 'திருப்பணி' என்பதை இஸ்லாமியத் தமிழ் தலைமைகள் தமது பதவிப் பற்றின் காரணமாக இனங் காணத் தவறின் -

இஸ்லாமியத் தமிழர்களை பெரும் அவலங்களுக்குள் தள்ளி விடும் வரலாற்றுத் தவறை புரிந்த குற்றம் அவர்களுக்குரியதேயாகும்.

# சமாதானத்தை உடனடியாகப் பாதுகாப்பது எப்படி?

நிலாந்தன்



கொழும்பில் சமாதானம் அதிகம் சோதனைக்குள்ளாகியிருக்கும் ஒரு சூழலில் சமாதானத்தை மெய்யாகவே பாதுகாப்பது யார் என்ற கேள்வி முன்னெப்பொழுதையும் விட வலிமையானதாக மாறிவருகிறது.

கடந்த சில வாரங்களாகக் களநிலவரங்களைக் கூர்ந்து கவனித்துவரும் எவருக்கும் தெரியும் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகியபின் யுத்த நிறுத்தம் ஒப்பீட்டளவில் அதிக சிரத்தையோடு கடைப்பிடிக்கப்படும் காலம் கடந்த சில வாரங்கள்தான் என்பது.

யுத்த நிறுத்தம் முறிக்கப்பட்டதற்கான பழியை ஏற்க ஒருவரும் தயாரில்லை என்பதால் முன்னெப்பொழுதையும்விட அதிக விழிப்போடு யுத்த நிறுத்தம் அனுஷ்டிக்கப்பட்டுவருகிறது.

யுத்த நிறுத்தம் உடைக்கப்பட்டதற்கான பழியை ஏற்க ஏன் ஒருவரும் தயாரில்லை என்ற கேள்விக்கான விடையே, சமாதானத்தை யார் மெய்யாகவே பாதுகாக்கிறார்கள் என்ற கேள்விக்கான விடையையும் தரக்கூடியதாயிருக்கும்.

மெய்யாகவே, இன்று இலங்கைத்தீவின் சமாதானத்தைப் பாதுகாத்துக்கொண்டிருப்பது மேற்கு நாடுகளே.

இதில் அவர்களிடம் ஒரு முக்கோண அணுகுமுறை உண்டு.

இதில் ஒரு கோணம், சமாதானத்தின் நண்பனைப் போலத்தோன்றும் ரணில் விக்கிரமசிங்களைப் பாதுகாப்பது.



இரண்டாவது கோணம், சமாதானத்தின் எதிரிகளின் மீது அழுத்தங்களைப் பிரயோகிப்பது.

மூன்றாவது கோணம், சமாதானத்தின் பங்காளிகளாயிருக்கும் புலிகளை அரவணைப்பது.

இந்த மூன்று கோணங்களுக்குமிடையிலான வலுச்சமநிலையைக் குலையவிடாது பேணுவதன் மூலம்தான் இலங்கைத்தீவின் சமாதானத்தைப் பாதுகாக்கமுடியும்.

ஆனால் சனாதிபதி சந்திரிகா சில வாரங்களுக்குமுன்பு ரணிலின் அமைச்சரவையில் கைவைத்தபின் இநத முககோண அணுகுமுறையின் சமநிலை தளம்பத்தொடங்கிவிட்டது.

ரணிலுக்கும், சந்திரிகாவுக்கும் இடையிலான வலுச்சமநிலையைக் குலையவிடாது பேணுவதில் மேற்கு நாடுகள் தோல்வியடைந்ததின் விளைவே சந்திரிகா சமாதானத்தில் கைவைத்தது என்பது.

இங்கே அவர் சமாதானத்தில் கைவைத்தார் என்பதை விடவும் ரணில் செய்த சமாதானத்தில் கைவைத்தார் என்பதே பொருத்தமாயிருக்கும்.

இலங்கைத்தீவுக்குச் சமாதானத்தைத் தவிர வேறெந்தத் தெரிவையும் விட்டுவைக்க மேற்குநாடுகள் தயாரில்லை என்பது சந்திரிகாவுக்கும் நன்கு தெரியும். எனவே அவர் தன்னை சமாதானத்தின் எதிரியாக வெளிக்காட்டுவதன் மூலம் மேற்கு நாடுகளுடன் நேரடியாக மோதத்தயாரில்லை.

இது மேற்கு நாடுகளைப் பொறுத்தவரை சாதகமான ஓரம்சம். மற்றது புலிகள் சமாதானத்துக்கான தமது பொறுப்பை மதித்து நடப்பது.

இந்த இரண்டு அம்சங்களும்தான் சமாதானம் இன்னமும் உடைந்துவிடாமல் பாதுகாத்துக்கொண்டிருப்பவை.

இந்த இரண்டு அம்சங்களையும் பேணவும், பாதுகாக்கவும் மேற்குநாடுகள் விரும்புகின்றன.

அண்மையில் கிறிஸ் பற்றனின் வன்னி விஜயம் கொண்டு வந்த செய்தியும் இதுதான்.



கிறிஸ் பற்றனின் வன்னி விஜயம் கொழும்பில் கடும் எதிர்ப்பைப் பெற்றிருந்தது. புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின் வன்னிக்கு வந்த வேறெந்த மேற்கத்தைய ராஜதந்திரிக்கும் இப்படியொரு எதிர்ப்புக் காட்டப்பட்டதில்லை.

ஆனால் கிறிஸ் பற்றன் எதையும் பொருட்படுத்தவில்லை. வன்னிக்கு அவர் கொண்டுவந்த பிறந்தநாள் பரிசு சந்திரிகாவுக்கும் ஏனையோருக்கும் ஒரு செய்தியைத் திட்டவட்டமாகத்தெரிவித்திருக்கிறது. அதாவது சமாதானத்தின் நண்பர்களாயிருக்கும் புலிகளை மேற்கு நாடுகள் எதுவரை மதித்து நடக்கத்தயார் என்பது.

அவருடைய வன்னி விஜயம் செப்ரம்பர் மாதமே தீமானிக்கப்பட்ட ஒன்று. ஆனாலும் கடந்த சில வாரங்களாகக் கொழும்பில் தோன்றியுள்ள தலைமைத்துவ வெற்றிடத்தின் பின்னணியில் அவருடைய விஜயம் புதிய சில செய்திகளையும் கொண்டுவந்திருக்கும் என்று நம்ப இடமுண்டு.

அது கொழும்பில் சில இரசாயன மாற்றங்களைக்கொண்டு வந்திருப்பது போலவும் தோன்றுகிறது. சந்திரிகா இப்பொழுது சிறிது இறங்கிவருவதுபோலத்தோன்றுகிறார்.

**நிலாந்தன்**

ஆனாலும் அவரை நம்பமுடியாது. மேற்கு நாடுகளின் முக்கோண அணுகுமுறையின் சமநிலையைக் குலைக்கும் விதத்தில் ஒரு கோணத்தை உடைத்தவர் அவரே.

கடந்த சில வாரங்களாக அவர் மிகவும் குழம்பிப்போய்க்காணப்படுகிறார். முன்பின் முரணாகக் கதைத்துவருகிறார். அவரை நம்பி காரியத்தில் இறங்கமுடியாத அளவுக்கு அவருடைய நிதானம் கேள்விக்குள்ளாகியிருக்கிறது.

எனவே மேற்கு நாடுகள் தமது முக்கோண அணுகுமுறையில் சில மாற்றங்களைச் செய்யவேண்டியுள்ளது. குறிப்பாக, இந்த முக்கோணத்தில் இதுவரையும் தளம்பாதிருக்கும் ஒரு கோணம் புலிகளின் தரப்பே.

புலிகளைக் கையாள்வதில் மேற்கு நாடுகள் ஒருவித இரட்டை அணுகுமுறையைத் தான் இதுவரை கடைப்பிடித்துவருகின்றன.

இது இப்பத்தியில் ஏற்கனவே பல தடவைகள் கூறப்பட்டிருக்கின்றன.

அதாவது ஒரு புறம் சமாதானத்தின் பங்காளிகளாயிருக்கும் புலிகளை அரவணைப்பது, இன்னொருபுறம் புலிகளின் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்கும் விதத்தில் சில நாடுகளில் புலிகளின் மீதான தடையை விலக்காது வைத்திருப்பது.

இதில் அமெரிக்கா, பிரிட்டன் போன்ற பிரதான நாடுகள் புலிகளின் விசயத்தில் கண்டிப்பாக நடந்துகொள்வது போல ஒரு தோற்றத்தைக் காட்டிக்கொண்டிருக்க ஏனைய ஐரோப்பிய நாடுகள் புலிகளின் விசயத்தில் அதிகம் மென்மையாக நடந்துவருகின்றன.

கிறிஸ் பற்றனின் வன்னி வருகை இந்த அணுகுமுறையில் சில புதிய திருப்பங்களைக் காட்டுவது போலிருக்கிறது. அவருடைய வருகை இதுவரை வன்னிக்கு வந்த எல்லா மேற்கத்தைய ராஜதந்திரிகளினதும் விஜயங்களுடன் ஒப்பிடுகையில் அதிக முக்கியத்துவமுடையது.

கிறிஸ் பற்றன் முன்பு கொங்கொங்கின் ஆளுநராயிருந்தவர், அதாவது ஆசியாவில் பிரிட்டனின் கடைசிக் கொலனியின் கடைசி ஆளுநரவர். கொங்கொங் பிரிட்டனிடமிருந்து சீனாவுக்கு கைமாற்றப்பட்ட வரலாற்று முக்கியத்துவம் மிக்க ஒரு காலகட்டத்தில் அவருடைய பாத்திரம் மிகவும் நேர்த்தியானதாகவும் நிதானமானதாகவும் தூரநோக்குடையதாகவுமிருந்ததாகக் கூறப்படுகிறது. இப்பொழுது ஐரோப்பிய யூனியனின் வெளிவிவகார ஆணையாளராக அவருடைய வருகை அதுவும் சமாதானம் தளம்பிக்கொண்டிருக்கும் ஒரு தருணத்தில் அவர் வன்னிக்கு வந்தமை என்பது மேற்கு நாடுகள் புலிகளை கூடுதலாக அரவணைக்கத் தயார் என்ற செய்தியையும் சொல்லாமல் சொல்லுகிறது.



தமது முக்கோண அணுகுமுறையின் தோல்வியே அண்மை வாரங்களில் கொழும்பில் தோன்றியுள்ள தலைமைத்துவ வெற்றிடம் என்பது மேற்கு நாடுகளுக்கும் தெரியும்.

இதில் சந்திரிகாவைக் கையாள்வதில் உள்ள சிக்கல்களையும் அவர்கள் விளங்கிவைத்திருக்கக்கூடும்.

எனவே முக்கோண அணுகுமுறையில் உண்டாகிய தடங்கல்கள் அதன் அடுத்த கட்டமாக அந்த முக்கோணத்தின் ஒரு கோணமாயுள்ள புலிகளைக் கையாள்வதற்குரிய இரட்டை அணுகுமுறையிலும் மாற்றங்களைக் கோரி நிற்கிறது.

அதாவது புலிகள் தொடர்பான மேற்கு நாடுகளின் இரட்டை அணுகுமுறையில் இனியினி மாற்றங்கள் தோன்றக்கூடிய வாய்ப்புக்களை கிறிஸ் பற்றனின் வன்னி விஜயம் முன்னறிவித்திருக்கிறது.

இப்பொழுது இலங்கைத்தீவில் சமாதானத்தைப் பாதுகாப்பதென்றால், முதலாவதாகச் சந்திரிகாவைச் சமாளிக்கவேண்டும். இதை இன்னொருவிதமாகச் சொன்னால் ரணிலைப் பாதுகாக்கவேண்டும். அடுத்ததாகப் புலிகளின் பொறுமையைப் பாதுகாக்கவேண்டும்.

சந்திரிகாவை நம்பிக் காய்களை நகர்த்த முடியாத அளவுக்கு அவருடைய கட்சி நலன்களும் அவருடைய தனிப்பட்ட நலன்களும் முக்கியமாக அவருடைய தனி மனித ஆளுமையும் இடறலாயிருக்கின்றன. இது தவிர பிராந்திய மட்டத்தில் அவர் உருவாக்கமுயலும் "பாதுகாப்பு வலையும்" ஓரளவுக்கு இடறல்தான்.

இந்நிலையில் இப்போதைக்கு உடனடியாகச் சமாதானத்தைப் பாதுகாப்பதென்றால், புலிகளைத்தான் வெற்றிகரமாகக் கையாள வேண்டியிருக்கிறது. கடந்த 21 மாதகால · சமாதான முயற்சிகளின்போது புலிகளுக்கும் மேற்கு நாடுகளுக்கும் இடையிலான உறவில் ஒரு சீரானநிதானமான வளர்ச்சி அவதானிக்கப்பட்டு வருகிறது.

இம்முறை சமாதானம் செய்வதில் புலிகளுக்குள்ள மிகவும் வாய்ப்பான அம்சம் அவர்களுடைய சர்வதேச அந்தஸ்து ஒப்பீட்டளவில் உயர்ந்துவருவதே.

எனவே புலிகளை சர்வதேச அரங்கில் உயர்த்துவதன் மூலம்தான் இலங்கைத்தீவின் சமாதானத்தை இப்போதைக்கு உடனடியாகப் பாதுகாக்கமுடியும்.

அதாவது புலிகளின் பொறுமையைப் பாதுகாத்தால்தான் யுத்த நிறுத்தத்தை ஸ்திரமான விதங்களில் பாதுகாக்கலாம். அதற்குப் புலிகளை சர்வதேச சமூகத்துக்கு மேலும் பொறுப்புக் கூறவல்ல ஒரு அமைப்பாக மாற்றவேண்டும். இதற்கு புலிகளை இன்னுமின்னும் அங்கீகரிக்கவேண்டியிருக்கும்.

அதாவது புலிகள் பற்றி இதுவரையிலுமிருந்துவந்த இரட்டைஅணுகுமுறையில் மாற்றங்களைச் செய்யவேண்டியிருக்கும்.

அப்படியேதும் செய்தால்தான் முக்கோண அணுகுமுறையில் குறைந்தபட்சம் தற்காலிகச் சமநிலையையாவது பேணமுடியும்.

மேற்கு நாடுகள் அப்படிச்செய்யக்கூடும் என்று ஊகிக்கத்தக்கவிதத்தில் சில சமிக்ஞைகள் ஏற்கனவே தெரியத்தொடங்கிவிட்டன. இத்தகைய சமிக்ஞைகளில் மிகப் பிரகாசமான ஒன்றே கிறிஸ் பற்றனின் வன்னிவருகை.

இப்படிப் பார்த்தால் சந்திரிகா கடந்த சில வாரங்களாகச் செய்துவருபவை புலிகளை சர்வதேச அரங்கில் பலப்படுத்திவருகின்றன என்றே சொல்லவேண்டும்.

அவர் புலிகளை மட்டும் அல்ல, ரணில் விக்கிரமசிங்கவையும்தான் பலப்படுத்தி வருகிறார்.

அண்மைக்காலங்களில் தனது எதிரிகளைப் பலப்படுத்தும் விதத்தில் முடிவுகளை எடுத்த ஒரு தலைவியென்று அவரைத்தான் சொல்லவேண்டியிருக்கும். ●

# நறுக்கென...

## அடம்பிடிக்கும் சங்கரியார்...



**முதல் நாள்** தான் தொலைக்காட்சியில் தோன்றி என்னை அசைக்கமுடியாது நாளை மத்திய குழு கூடும்போது என்ன நடக்கிறதென்று பார்ப்போம். என்மீது கொண்டுவரப்போவதாகக் கூறப்படும் நம்பிக்கையில்லாத்தீர்மானம் தோல்வியடையும்... தர்மமும், நியாயமும் வெல்லும் என்றெல்லாம் விலாசமாக அறிக்கைவிட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரியார் மறுநாள் மத்திய குழு கூடி அவர்மேல் நம்பிக்கையில்லை என வாக்களிப்பு முடிவில் அறிவித்த போதும் ஆள் அசைவதாக இல்லை.

முன்பு பிராந்திய கிளைகள் பல்வேறு மாவட்டங்களிலும் கூடி அவரைப்பதவி விலக வேண்டும். அல்லது விலக்கவேண்டும். கூட்டணித் தலைமைக்குழுவுக்கு கோரிக்கைகள் விடுத்தபோதும், என்னைப்பதவியில் அமர்த்தியது மத்தியகுழு தான், எனவே அது தான் எனது பதவியைப்பற்றி தீர்மானிக்கவேண்டும் என்றார். கூட்டணியை உருவாக்கியவர் களில் தானும் ஒருவர் என்றும் தான் கட்சிக்கு விசுவாசமாகவே இருப்பதாகவும் சுயபுராணமும் பாடினார்.. ஆனால் அவர் கட்சியின் கொள்கை கோட்பாடுகளுக்கு விரோதமாக நடப்பதாகவும் கட்சிக்குள் குழப்பங்கள் பிளவுகளை ஏற்படுத்த முயல்வதாகவும் கூறி வேறு சில குற்றச்சாட்டுக் களையும் முன்வைத்து அவரை நாகரிகமாக தாமாகவே பதவி விலகுமாறு கூறப்பட்டபோது அவர் திருவிளையாடல் படத்தருமியாக நடித்த நாகேஷ் அவர்களின் பாணியில் 'முடியாது நான் போகமாட்டேன்... போகப் போவது கிடையாது' என அடம் பண்ணிக் கலாட்டா பண்ணிய செய்திகள் அரசியல் கோமாளித்தனத்திற்கு நல்ல உதாரணமாகும்.

இப்போது பகிரங்கமாக மத்திய குழுவே நம்பிக்கையில்லை போகலாம் என்று முடிவு எடுத்த பிறகும், மாட்டேன்... நான் இருப்பதா? போவதா? 'என்பதை மத்திய குழுவால் தீர்மானிக்கமுடியாது... பொதுக்குழுதான் கூடி முடிவெடுக்க வேண்டுமென்கிறார்...

நான் தான் இன்னமும் தலைவர் என்கிறார் சங்கரியார்...

இல்லை இனி அவர் தலைவர் இல்லை என்கிறார் பொதுச் செயலாளர் சம்பந்தன். சரி பொதுக்குழு நம்பிக்கையில்லையென்றால்...?

பொதுசன வாக்கெடுப்புத்தான் தீர்மானிக்கமுடியும். மக்கள்தான் 36000 வாக்குகளை அளித்து என்னைத் தெரிவுசெய்தார்கள் என்பார்.

மக்களும் வேண்டாம் போங்கள் என்று சொல்லிவிட்டால்?

இருக்கவே இருக்கிறார் சனாதிபதி... அவர்தான் நிறைவேற்று அதிகாரம் உள்ளவர். அவரால் தான் என்னை பதவிவிலகுமாறு அழுத்தம் கொடுக்க முடியும் என்றும் கூறுவார்... சனாதிபதி மீது எல்லோரிலும் பார்க்க நம்பிக்கையும் பற்றும் அவருக்கு அதிகம்தான்...

சில அரசியல் தேவைகளுக்காக சந்திரிகாவும் சங்கரியாரை பதவி விலகுமாறு கூறிவிட்டால்...?

அவருக்கு வழியில்லை என்றா நினைக்கிறீர்கள்... இருக்கவே இருக்கிறது 'ஆபத்துக்கு உதவும் நண்பனாக இந்தியா... இரு என்றால் இருக்கவும் (அசையாது இருக்கவும்) எழும்பு என்றால் எழுந்து (அசையாமல் நிற்கவும்) ஓடு என்றால் (திரும்பிப்பார்க்காது) ஓடவும் சங்கரியாரை இயக்க இந்தியாவால் முடியும்.

இந்தியா அதைச் செய்யாது என்பதில் சங்கரியாருக்கு நம்பிக்கை எனவே.. எங்கள் பிரச்சினையில் பொறுப்பும் அக்கறையும் கொண்டது இந்தியாதான். இந்தியா எனது தலைமையை ஏற்றுக்கொண்டுள்ளது... எனவே இந்தியா சொன்னால் தான் பதவிவிலகுவேன் என மிரட்டவும் செய்வார்...

இதனால் தான் விழுந்தாலும்... இல்லையில்லை விழுத்தினாலும் மீசையில் (அதுவும் சாயம் பூசிய மீசையில்) மண்படவில்லை, எனக்கே தான் வெற்றி என்று துணிந்து பிரகடனம் செய்கிறார் சங்கரியார்...

சிலர் தாம் வகிக்கும் பதவிக்கும் இருக்கும் கதிரைக்கும் பெருமை சேர்ப்பார்கள். சிலருக்கு அவர்கள் வகிக்கும் பதவியாலும், இருக்கும் கதிரையாலும் மட்டுமே பெருமை. சங்கரியார் எந்த ரகம் என்று நான் சொல்லாமலேயே உங்களுக்கு புரியும் தானே!

## சிங்கள இனப்பற்றும் பிக்குமார் தொலைக்காட்சியும்



'பிக்குமாா தொலைக்காட்சி நிலையம் ஒன்றை நடத்த உத்தேசித்துள்ளார்களாம்'

'நல்லது பௌத்த தர்மத்தை இருபத்திநாலுமணிநேரமும் இடைவிடாது நிகழ்ச்சிகளாக ஒளிபரப்பினால் சிங்கள இனவாதிகளிடையே இனவெறி குறையும் போர் வெறிதணியும்'

'ஐயோ..ஐயோ... அவர்கள் தொலைக்காட்சி நிலையம் ஆரம்பிப்பது சிங்கள பௌத்த கலாச்சாரத்தை, தர்மத்தை பாதுகாக்கவோ பராமரிக்கவோ மட்டுமல்ல... இனவாத அரசியலை வளர்க்கவும்தான்'

'சொஞ்சநாட்களுக்குமுந்தி, புலிகளின் குரல் வானொலிக்கு நவீன இயந்திர சாதனங்களை இறக்குமதி செய்ய அரசும் நோர்வேயும் உதவியதாகத் துள்ளிய சில பிக்குகளும், சிகல உறுமய கும்பலும் தமக்கும் வானொலி நிலையம் அமைக்க அனுமதி தருமாறு அரசிடம் கோரியது தெரியும் தானே... ஏன் தலதா மாளிகையும் ஒரு வானொலி நிலையம் அமைக்க அனுமதி கோரியது. அனுமதி வழங்க அரசு முன்வந்ததும் கூட தெரிந்த விடயமே...பிறகு அதைப் பற்றிய கதைகளே இல்லை...'

'இப்ப திடீரென தொலைக்காட்சி நிலையம் அமைக்க யோசனை ஏற்பட்டது. என்ன காரணத்தால்..?

'வேறையென்ன நாட்டில் சிங்கள இனப்பற்றும், சிங்களதேசப்பற்றும் பௌத்த மதப்பற்றையும் வளர்க்கத்தானாம்....

'ஏற்கனவே உள்ள அரசாங்க அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களும் அதைத்தானே செய்கின்றன....'

'அவை செய்யிறது போதாதாம் அதைவிடக் கடுமையாக மக்களிடையே பௌத்த சிங்கள உணர்வுகளைப் பரப்பவேண்டுமாம்...

'அப்படியானால் அவர்களின் நோக்கம்..'

'விளங்கவில்லை, சமாதானத்திற்கான யுத்த தர்மத்தை, பௌத்த சிங்கள இன உணர்வை ஏற்படுத்தி பரப்புவதாகத்தான் இருக்கும்..'


'ஓமோம் முந்தியும் ஒருக்கா, ஒரு பிக்குதானே, தென்பகுதியில் உள்ள இலத்திரனியல் ஊடகங்கள் அனைத்தும் இருபத்து நான்குமணிநேரமும் ஒலி ஒளிபரப்பு நிகழ்ச்சிகளை பொழுதுபோக்கு என்ற வகையில் அளித்து சிங்களமக்களின் இன,மத, மொழி உணர்வைத் திசை திருப்புவதாக குற்றம் சாட்டியதுடன், அவற்றையெல்லாம் நாட்டின் வடக்கு கிழக்கு நோக்கி திருப்பவேண்டுமென்றும் அதன் மூலம் தமிழ் மக்களின் உணர்வுகளை, எண்ணங்களை மழுங்கடித்து அவர்களை விடுதலைப்போராட்டத்தின் பக்கம் செல்ல விடாது திசை திருப்ப வேண்டுமென்றும் பகிரங்கமாகவே கூறியிருந்தாரல்லவா?

'இப்ப விளங்குது தானே அவர்களின் நோக்கம், எந்தவகையிலும் தமிழ்மக்களின் உணர்வுகளை சிதைப்பதும், சிங்கள பொதுமக்களின் மத்தியில் இனவாத சிந்தனையை மேலோங்கப்பண்ணுவதும் தான் அவர்களின் திட்டமெல்லாம்...'

'அதுமட்டுமில்லை.. எத்தனை நாளைக்குத்தான் புத்தவிக்கிரகங்களை கடத்தி விற்பதும் கள்ளநோட்டு அடிப்பதும்... இப்படி ஒரு வித்தியாசமான தொழிலையும் மேற்கொண்டால் நல்லதென சில பிக்குகள் நினைக்கவும் கூடும்...

'ஆரம்பத்தில் புத்தம் சரணம் என்று சொல்லிக் கொண்டு விகாரைக்குள் நுழைந்தவர்கள்... இப்ப புத்தம் மரணம் என்று சொல்லிக்கொண்டு தொலைக்காட்சி நிலையத்துள் நுழைந்து கொள்ளப்போகிறார்கள் போலும்...

## நாட்டுப்பற்று என்றால் என்ன? நாட்டுப்பற்றாளர்கள் என்றால் யார்?



**சிங்கள** இனவாதிகள் இவற்றிற்கு எவ்வாறு விளக்கம் கொடுக்கிறார்கள் தெரியுமா?

நாட்டுப்பற்று என்றால், புலிகளை எதிர்த்தல், தமிழர்கள் அனைவரையும் புலிகளாகப் பார்த்தல் - நாட்டுப்பற்றாளர்கள் என்றால் தமிழர்களின் பாரம்பரிய வாழ்விடங்களை ஆக்கிரமித்து, தமிழர்களின் தனித்துவ தேசியத்தன்மையை சிதைத்து நிற்பவர்கள் - என்பதே அவர்கள் கொடுக்கும் விளக்கமாகும்.

சிறிலங்காவில் நாட்டுப்பற்றினைப்பற்றி வாய்கிழியப்பேசும் - நாட்டுப்பற்றாளர்கள் எனத் தம்மைத் தாமே பிரகடனப்படுத்திக்கொள்வோர் யார் தெரியுமா?

ஜே.வி.பியினர், சிகல உறுமயவினர், சிங்கள பூமிபுத்திர கட்சியினர், பிக்கு பெரமுனவைச் சேர்ந்தவர்கள், மகாசங்கத்தினர்.... இப்படிப்பட்ட வகையினரே ஆவர். இவர்கள் அனைவரும் சிங்கள தேசிய வாதிகள் மட்டுமல்லாது தமிழ் மக்களின் தேசியத் தனித்துவத்தை நிராகரிப்பவர் களும் ஆவர்.

அண்மையில் சந்திரிகா ஏற்படுத்திய அரசியல் அதிரடி குழப்ப நடவடிக்கைகளின் பின்னர் இந்த நாட்டுப்பற்றாளர்கள் சுறுசுறுப்படைந்துள்ளார்கள்.

இன்றைய நிலையில் ஒரு தேசிய அரசு அமையவேண்டியதன் அவசியம் குறித்து தென்பகுதி அரசியல் தலைமைகளுக்கு ஒரு தவிர்க்கமுடியாத புற அழுத்தம் ஏற்பட்டுள்ள நிலையில், அப்படி ஒன்று அமைய வேண்டிய சூழலோ, அமைக்கவேண்டிய நிர்ப்பந்தமோ தற்போதைய சனாதிபதிக்கும் பிரதமருக்கும் ஏற்படின், அதைக்குழப்ப தமது அரசியல் மூலோபாயங்களை இந்த நாட்டுப்பற்றாளர்கள் வகித்து வருகிறார்கள் என்பது தெளிவாகிவருகிறது.

அண்மையில் ஒரு ஊடகவியலாளர் மாநாட்டில் பேசிய சிகல உறுமயத் தலைவர் திலக்கருணாரட்ண 'நாட்டுப்பற்றுள்ளவர்களைச் சேர்க்காத தேசிய அரசு என்ற ஒன்று ஒருபோதுமே வெற்றியடையாது'- என்றுள்ளார்.

தேசிய அரசு ஒன்றை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் எதுவுமே தென்படாத நிலையில் அதற்குள் எப்படியாவது தங்களையும் நுழைத்து விட முனையும் தன்மையே அவரது இந்த கூற்றினுள் தெரிகிறது.

தங்களைத் தாங்களே தேச பக்தர்கள் எனக்கூறிக்கொள்ளும் இவர்கள், தங்களின் தேசத்திற்கு தற்போது மிகவும் அவசியமான சமாதான முயற்சிகளை முற்றாக நிராகரிப்பவர்கள். அது மட்டுமல்லாது யுத்தத்தின் மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணவேண்டும் என்றும் வலியுறுத்துபவர்கள். யுத்தம் ஒரு நாட்டை சகல வழிகளிலும் சிதைக்கும் என அறிந்திருந்தும் தமது அரசியல் சுயலாபங்களுக்காக அதை வலியுறுத்துபவர்கள், தம்மை தேசபக்தர்கள் எனக் கூறுவது தான் முரண்நகையான விடயமாகும்.

தேசபக்தர்களும், அவர்களின் தேசபற்றும் சிறிலங்காவில் பேரினவாத சிந்தனைக் கோட்பாடுகளின் அடித்தளத்தைக் கொண்ட அரசியல் தத்துவத்தில் இயங்குவது தான் சிறிலங்காவின் அழிவுக்கு காரணமாகவுள்ளது.

## கொத்தடிமைக்குக் கொடுக்கும் பரிசு



**முன்னாள்** வெளிவிவகார அமைச்சரும், விடுதலைப்புலிகளுக்கு எதிராக சர்வதேச ரீதியில் பிரச்சாரங்களை மேற்கொண்டதன் மூலமும், தமிழ்மக்களின் விடுதலைப்போராட்டத்தை 'பயங்கரவாதம்' என உண்மைக்கு புறம்பாக, எஜமானி விசுவாசத்துடன் உலகறிய உளறித்திரிந்தவரும், தற்கால, சனாதிபதியின் அரசியல் வெளிவிவகார ஆலோசகரும், இவையனைத்திற்கும் மேலாக தமிழ்மக்களுக்கு விரோதமான தனது எட்டப்பத்தனத்திற்காக இனவாதிகளினால் பெரிதும் பாராட்டப்படுபவருமான... பெயர் சொல்லித் தெரியவேண்டியிராத அந்த பிரமுகரின் பெயரை பொதுநலவாய அமைப்பு நாடுகளின் பொதுச் செயலாளர் பதவிக்கு போட்டியிட பிரேரிக்கப்போகிறார்களாம்.

விசுவாசமான சேவைக்கு சிங்கள அரசு கொடுக்கும் மிகப்பெரிய கௌரவம் அல்லது கொத்தடிமைச் சேவகத்திற்கு கொடுக்கும் எலும்புத்துண்டுப் பிச்சை என எப்படி வேண்டுமானாலும் இதனை உங்கள் விருப்பப்படி நீங்கள் கருதிக் கொள்ளமுடியும். கதிர்காமரின் விருப்பத்திற்கு சந்திரிகா மட்டுமல்ல ரணிலும் ஆதரவு தெரிவிப்பதானது சிங்கள பெரும்பான்மை இனத்தவரிடையேயும், பிரதான கட்சிகளிடையேயும் இவர்களிற்கிருக்கும் செல்வாக்கைக் காட்டுவதாக உள்ளது. இவரது நியமனத்திற்கு ஆதரவு வழங்குமாறு பொதுநலவாய அமைப்பில் அங்கம் வகிக்கும் சகல நாடுகளின் தலைவர்களுக்கும் ஆதரவு கோரி சனாதிபதி சந்திரிகா கடிதங்களையும் எழுதியுள்ளாராம்.

இந்தப் பதவி இன்னமும் அவருக்கு கிடைக்காத வேளையில் அது கிடைத்தால் என்னென்ன செய்யவேண்டும் என்றெல்லாம் பேட்டியளிக்க ஆரம்பித்துவிட்டார்.

தான் செயளாலர் நாயகமானால் இன நிற மோதல்களைச் சகித்துக் கொண்டிருக் கமாட்டேன் என்று அறிக்கைவிட்டுள்ளார்.

சிறிலங்காவின் இனங்களுக்கிடையே பெரும்யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையில், தமிழ் மக்களுக்கு எதிரான அந்த போரை கட்டவிழ்த்து விட்ட சந்திரிகாவின் அரசுக்கு ஆதரவு வழங்கி அதன் இன ஒடுக்குமுறைக்கு ஆதரவாக சர்வதேச அளவில் பிரச்சாரம் செய்த கதிர்காமர் இப்போது இன்னமும் கிடைக்காத ஒரு பதவிக் கனவில் மேற்கண்டவாறு தத்துவம் கூறுகிறார்.

தன் சொந்த நாட்டில் சொந்த இனத்திற்கு எதிரான ஒடுக்குமுறைக்கு நியாயமற்ற முறையில் வெறும் பதவி ஆசை காரணமாக துணைபோன கதிர்காமர் சர்வதேச அமைப்பொன்றில் செயலாளரானால் 'இன வேறுபாடு பார்க்கமாட்டேன், இன ஒடுக்குமுறையை சகிக்கமாட்டேன் எனக் கூறுவது தான் எல்லோர் காதிலும் கதிர்காமர் பூவைக்கும் விடயமாகும்

**செங்குட்டுவன்**

# சமாதானம் அச்சத்தின் பிடியில் ரெலிவ்சன் வருவாரா...?

சிறி. இந்திரகுமார்



சமாதானக் குழந்தையின் பெற்றோர் புலிகளும், அரசும் என்றால் சமாதானக் குழந்தையின் பாதுகாவலர் இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு என்பதில் மறுப்பேதும் இருக்காது.

இப்போது இந்தச் சமாதானக் குழந்தையின் பாதுகாவலர் அச்சத்தின் பிடியில் இருக்கிறார்கள். சமாதானக் குழந்தையின் பாதுகாவலர் அச்சத்தின் பிடியில் இருக்கிறார்கள் என்றால் சமாதானம் அச்சத்தின் பிடியில் இருக்கிறது என்பதே உண்மை.

அப்படியானால் இலங்கையில் சமாதானம் அச்சத்தின் பிடியில் இருக்கிறது என்பது மெய்யாகிறதல்லவா?

சமாதானத்தின பாதுகாவலர் அச்சத்தின் பிடியில் இருந்த போதும் சமாதானக் குழந்தையின் பாதுகாப்பில் இதுவரை ஊறு விளைவிக்கும் எந்த சச்சரவும் ஏற்பட அனுமதிக்கவில்லை என்பது பெருமளவு உண்மை.

இங்கு சமாதானக் குழந்தையின் பாதுகாப்பில் இதுவரை ஊறு ஏற்படவில்லை என்பது சமாதானக் குழந்தையின் பெற்றோர்களுக்கிடையில் இதுவரை எந்த பிணக்கும் ஏற்படவில்லை என்பதே கருத்து.

பிணக்கு ஏற்பட்ட போதும் ஓரளவு சமாளித்து போகின்ற தன்மை காணப்பட்டது. அதாவது புலிகள் காட்டிய பொறுமையைக் குறிக்கிறது.

இந்த நிலையில் யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவிற்கு சமாதானப் பேச்சுக்கள் தொங்கி நிற்கும் ஒரு நிலையில் யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவிற்கு வழிகாட்ட வேண்டிய சமாதான அனுசரணையாளரான நோர்வே வெளியேறியிருக்கும் நிலையில் இதுவரையும் பாதுகாத்த, பாரிய முரண்நிலை ஏதுமற்று பாதுகாத்துவிட்ட சமாதானக் குழந்தைக்கான பாதுகாப்பை தொடர்ந்தும் வழங்குவதில் ஏதும் பாதகம் ஏற்படலாம் என அஞ்சுவது போல யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவின் செயற்பாடுகளும் அதன் கருத்துகளும் இருக்கிறது.

இவ்வாறு கண்காணிப்புக் குழு அஞ்சுவதற்கு காரணங்கள் இல்லாமல் இல்லை. இதற்கு பல காரணங்கள் உண்டு.

முதலாவது, களத்திலிருக்கும் கண்காணிப்புக் குழுவைப் பொறுத்தவரை அது ஒரு தலையில்லா முண்டம்போலவே இப்போது செயற்படுகிறது.

ஏனென்றால் கண்காணிப்புக்குழுவுக்கு இப்போது ஒரு தலைவர் இல்லை.

இலங்கையின் சனாதிபதி சந்திரிகா திருகோணமலை கடற்பரப்பில் புலிகளின் ஆயுதக் கப்பல் ஒன்று தப்பிச்செல்வதற்கு கண்காணிப்புக்குழுவின் தலைவராக இருந்த ரெலிவ்சன் காரணமாக இருந்துள்ளார் என குற்றம் சுமத்தி நோர்வே பிரதமர் பொண்டவிக்கிற்கு எழுதிய ஒரு கடிதத்தையடுத்து நோர்வேக்கு அழைக்கப்பட்ட ரெலிவ்சன் இன்னமும் இலங்கை திரும்பவில்லை. இனியும் திரும்புவாரா என்பது தெரியவில்லை.

இந்த நிலையில்தான் கண்காணிப்புக்குழு போர் நிறுத்த கண்காணிப்புக்குழுவுக்கு ஒரு தலைவரை நியமிக்குமாறு நோர்வேயை கோரியுள்ளது.

அத்தோடு தற்போது கண்காணிப்புக்குழுவுக்கு தலைவராக செயற்படும் கண்காணிப்புக்குழுவின் பிரதித்தலைவர் ஹக்ரல் ஹொக்லண்ட் தற்போதைய நிலை தொடர்பாக கூறும்போது,

தற்போது நிலமை அவ்வளவு மகிழ்ச்சியானதாய் இல்லை..... தற்போதைய நிலையில் நாம் என்ன செய்ய போகிறோமெனத்தெரியவில்லை என தெரிவித்துள்ளார். இது கண்காணிப்புக்குழு அச்சமுறுவதையே காட்டுகிறது. அத்தோடு தங்களால இதுவரை வழங்கிய கண்காணிப்புக்கு இடையூறுகள் ஏற்படலாம் என அஞ்சுவதும் தெரிகிறது.

இரண்டாவது, சமாதான முயற்சிக்கு தென்னிலங்கை அரசியலில் சனாதிபதி சந்திரிகாவின் திடீர் நடவடிக்கையால் சமாதான முயற்சி பாதிக்கப்பட்டிருப்பது போல கண்காணிப்புக்குழு அதன் ஆரம்ப செயற்பாடுகளிலிருந்து சனாதிபதி சந்திரிகாவிடமிருந்து அதிகம் பாதிக்கப்பட ஒரு தரப்பாகவும் இருக்கிறது.

இந்த நிலையில் கண்காணிப்புக்குழு அதிகம் யாரிடமிருந்து சிரமங்களை எதிர்கொண்டதோ அவரோடு இணைந்து சமாதானக் குழந்தையை பாதுகாப்பது என்பது நடைமுறைக்கு அதிகம் சாத்தியப்படாத ஒன்று.

அப்படி பாதுகாக்க வேண்டுமானால் சந்திரிகா கண்காணிப்புக் குழுவுக்கு அதிக நம்பிக்கை தரும் காரியங்களை செய்தாக வேண்டும். ஆனால் இது வரை அப்படி எந்தக் காரியங்களிலும் சந்திரிகா ஈடுபட்டதாயில்லை.

ஆனால் கண்காணிப்புக் குழு அச்சமுறும் வகையிலேயே



செயற்பட்டு வருகிறார்.

மூன்றாவது, ரணிலின் அரசு சமாதான முயற்சியையும் சமாதானக் குழந்தையின் பாதுகாப்பையும் சனாதிபதியின் தலையில் தள்ளிவிட முயலும் ஒரு நிலையில் அரசியல் இலாபம் கருதி அவர் கூட யுத்தத்தை தூண்டிவிடும் சக்திகளுக்கு உயிர் கொடுக்கமாட்டார் என கண்காணிப்புக் குழுவால் நம்பமுடியாத ஒருநிலை.

ஏனென்றால் ரணிலுக்கு இப்போது புலிகளால் யுத்தம் தோன்றியது என்ற ஒரு நிலை ஏற்படுவதை விட சனாதிபதி சந்திரிகாவாலேயே யுத்தம் தோன்றியது என்ற ஒரு நிலை தோன்றுவதே அதிக அனுகூலங்களை ஏற்படுத்த வல்லன என்கின்ற ஒரு நிலை.

நான்காவது சந்திரிகா பாதுகாப்பு அமைச்சை பொறுப்பேற்றதன் பின்னர் படைத்துறைக் கட்டமைப்பில் தொடர்ந்து அவர் மேற்கொள்ளும் மாற்றங்கள்.

இவை கடின போக்குடைய இலங்கை படைத்துறைத்தளபதிகளை நம்பியோ அனுசரித்தோ சமாதானத்தை பாதுகாக்க முடியாத ஒரு நிலை.

மேலும் கிழக்கில் அண்மையில் அதிகரித்துவரும் தமிழ் முஸ்லிம் மக்களுக்கிடையிலான முரண்பாடும் அதை சாட்டாகக் கொண்டு மேலதிக படைக்குவிப்பும் கண்காணிப்புக்குழுவுக்கு அச்சத்தை ஏற்படுத்தியிருக் கலாம்.

இந்த நிலையில் கண்காணிப்புக்குழு தனித்து அதுவும் ஒரு தலைவர் இல்லாத நிலையில் கண்காணிப்புக்குழுவால் சமாதானக் குழந்தையை பாதுகாக்க முடியுமா என்பது தெளிவில்லை என்பதே உண்மை.

இந்த நிலையில் கண்காணிப்புக்குழுவுக்கு ஆறுதல் தரக்கூடியது புலிகள் காட்டும் அசாதாரண பொறுமையும், சமாதானத்தைக் கட்டிக்காப்பதில் காட்டும் அனுசரணையுமே.

இந்த வகையில் கண்காணிப்புக்குழுவுக்கு ஒரு சோர்வு ஏற்பட்டிருக்கக்கூடும்.

அந்த வகையில் புலிகளுக்கும் ஒரு சோர்வு ஏற்பட்டுவிட்டால் என்கிற ஒரு ஐயமும் எழுந்திருக்கக்கூடும்.

இந்த நிலையில்தான் சமாதானம் அச்சத்தின் பிடியிலிருக்கிறது. இந்த நிலையில்தான் ரெலிவ்சன் வருவாரா? என கண்காணிப்புக்குழு நோர்வேக்கு கோரிக்கை விடுத்திருக்கிறது.

இந்த நிலையில் கண்காணிப்புக்குழுவுக்கு எந்தத்தரப்பிலிருந்து சமாதானத்துக்கு பாதகம் ஏற்பட்டுவிடும் என்ற அச்சத்தில் விழித்திருக்கவேண்டிய நிலை.

முரண்பாடுகள் நிலவும் நாடுகளில் யுத்த நிறுத்தத்தை கட்டிக்காப்பதில் அதிக வெற்றியை அளித்திருப்பது இலங்கையில்தான் என நோர்வேயே கருத்து வெளியிட்டுள்ளது.

இதற்கு அரசின் பங்கு என்பதைவிட புலிகளின் பங்கு அதிக பங்கு வகித்துள்ளது என்பதே உண்மை.

ஏனென்றால் எல்லா விடுதலை அமைப்புக்களிலிருந்தும் புலிகள் இராணுவ ரீதியாக இருந்தாலும் சரிதான் அரசியல் ரீதியாக இருந்தாலும் சரிதான் முன்னுதாரணமாக செயற்படுவதற்கு கிடைத்த வெற்றியாக அமைந்துவிட்டது.

இந்த நிலையில் புலிகள் சர்வதேச ரீதியில் பெற்றுவரும் நற்பெயரும் சமாதானக் குழந்தைக்கான அதிக எதிரிகளை தோற்றுவிக்கவே



செய்யும்.

இப்போது இலங்கைக்கு அடுத்தது யுத்தமா? சமாதானமா? என்ற கேள்வியோடு, அடுத்தது தேர்தலா? என்ற கேள்வியும் சேர்ந்துள்ளது.

அந்தவகையில் இந்த தேர்தலுக்கான கள ஆயுதமாக தென்னிலங்கை அரசியல் கட்சிகள் எப்போது யுத்தம் அன்றேல் சமாதானம் என்ற கோசங்களோடுதான் களத்தில் இறங்குவது வழமை.

இந்தமுறை சமாதானத்திலிருந்து யுத்தத்தை நோக்கி தென்னிலங்கைக்குள்ளேயே குழப்பங்களோடு, குழப்பங்களாக தூண்டிவிட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்பதால் கண்காணிப்புக் குழு செயற்படத்தொடங்கியிருக் கிறது போலத்தெரிகிறது.

ஏனென்றால் சமாதானத்துக்கு அதிக ஆபத்து தென்னிலங்கையிலேயே தோன்றக்கூடும் என்றகள யதார்த்தமே அதிகமாக இருக்கிறது.

---

## மதவடி மயிலர்



**செய்தி:** *டான்ஸி நிலபேர ஊழல் வழக்கிலிருந்து ஜெயலலிதா விடுதலையானதற்கு ரணில் வாழ்த்து.*

**மயிலர்:** தேர்தலிலை வென்றதற்கு வாழ்த்து சொன்னாலும் பரவாயில்லை.... ஊழல் வழக்கிலை வென்றதற்கெல்லே வாழ்த்துச் சொல்லியிருக்கிறார்....! அது சரி. அருமை தங்கையின் ஊழல் வழக்கு வெற்றிக்கு அருமை அக்கா சந்திரிகா ஏன் வாழ்த்தனுப்ப தவறிவிட்டாராம்? ரணில் வாழ்த்துபவரை சந்திரிகா வாழ்த்தலாமோ.... அவரின் கௌரவம் என்னவாகும் பாருங்கோ!

**செய்தி:** *ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் மிகச்சிலரே; எரித்த கொடும்பாவி அழகாக இருந்தது என கிறிஸ் பற்றன் தெரிவிப்பு.!*

**மயிலர்:** ஆர்ப்பாட்டம் செய்து கொடும்பாவி எரித்தவர்களுக்கு இதைவிட அவமானம் வேறை என்ன வேண்டுமாம்? காகம் கத்தி மாடு சாகுமா? சொல்லுங்கோ....! ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு கொடும்பாவி எரிப்பதைத் தவிர வேறு ஒன்றும் தெரியாமல் இருப்பதுதான் வேதனை....

**செய்தி:** *சங்கரி நியமித்த மத்தியகுழுவே.... அவரைப் பதவியிலிருந்தும் நீக்கியது.*

**மயிலர்:** அவற்றை ஆக்களுக்குத்தானே அவரைப் பற்றித் தெரியும். இனியென்ன.... கொடுத்தவனே பறித்துக்கொண்டாண்டி மானே..... வளர்த்தவனே எடுத்துக்கொண்டாண்டி என்று பாடிக்கொண்டு போக வேண்டியதுதானே.

**செய்தி:** *சனாதிபதி சந்திரிகாவின் கரங்களை முஸ்லிம்கள் பலப்படுத்த வேண்டும் என்கிறார் பேரியல் அஷ்ரப்.*

**மயிலர்:** பிரதமரின் கரங்களை முஸ்லிம்கள் பலப்படுத்த வேண்டும் என்று ரவுப் ஹக்கீம் சொன்னால் என்ன செய்வது என்று கேட்கிறார் பஷீர் நானா.... அதோடை பேரியல் அஷ்ரப்பும். ரவுப் ஹக்கீமும் சேர்ந்து முஸ்லிம்களைப் பலப்படுத்தவேண்டும் என்றெல்லே அவர் சொல்கிறார்.....

**செய்தி:** *பேச்சுக்கான தடைகளை பிரபாகரன் அகற்றிவிட்டார் என்கிறார் அமைச்சர் ரவி கருணாநாயக்கா.*

**மயிலர்:** சந்திரிகாதான் தடையை போட்டுக்கொண்டே வருகிறார் என்றும் சொல்லியிருந்தால் நல்லா இருக்கும் பாருங்கோ..... அதுவும் படையைத் தன்கையில் வைத்துக்கொண்டெல்லே தடையைப்போடுறா......?

**செய்தி:** *விக்கிரகத் திருட்டு குடாநாட்டில் அதிகரித்து வருகிறது.....*

**மயிலர்:** பக்தி முத்தினா இப்பிடித்தான் பாருங்கோ கடவுளையே சொந்தமாக்கிக் கொள்ளும் மனப்பக்குவம் வந்திடும் போல..... இதனைத் திருட்டென்று சொன்னால் எப்படி..... உண்டியலை உடைச்சால் அது திருட்டு..... இது கடவுள் தன்னை காப்பாற்றுவார் என்ற நம்பிக்கையிலை தானே விக்கிரகத்தை எடுத்திருப்பான்..... எடுக்கும்போது கடவுளே ஐயோ திருடன்...... திருடன்.... என்று கத்தாமல் இருக்க.... மற்றவை கத்தி என்ன பயன்?

---

துன்பம், தீய ஒழுக்கத்தின் காரணமாய் இருக்க முடியாது, தீய ஒழுக்கத்தின் விளைவு தான் துன்பம் - தாமஸ் கார்லைல்.

நேர்நோக்கு

# சிகல உறுமயவின் சிங்களப்படை

சிங்கள மக்களைப் பாதுகாக்க சிங்களப்படை ஒன்றை அமைக்கப்போவதாக சிகல உறுமய உயர்பீடம் தீர்மானித்திருக்கிறது. இதன் முதற்கட்டமாக 100 யுவதிகளை இணைத்து அவர்களுக்கு அரசியல் கற்றுத்தர இருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

"சிங்கள மக்களைப் பாதுகாக்க" என்னும் பெயரில் சிகல உறுமய கூறும் அல்லது நடைமுறைப்படுத்த முயலும் முதல் ஆயத்தமான காரியம் இது வல்ல. கடந்தசிலவருடங்களுக்கு முன் சிங்கள ஆணைக்குழு ஒன்றை அமைத்து அதிலே சுதந்திரத்திற்குப் பின் சிங்கள மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் குறித்து ஆராயப்பட்ட நடவடிக்கையிலும் சிகல உறுமயவின் கரங்கள் இருந்திருக்கின்றன.

இந்தக்குழு தனது இடைக்கால அறிக்கை ஒன்றையும் வெளியிட்டது. இக்குழுவில் அங்கம் வகித்தவர்கள் சாதாரண சிங்கள மக்கள் அல்ல. புத்திஜீவிகளும், அரச, படை அதிகாரிகளும் ஆவர். இந்த ஆணைக் குழுவுக்கு சாட்சியம் அளித்தவர்களும் அவ்வாறானவர்களே.

இந்த ஆணைக்குழு இயங்கி செயற்பட்டுக் கொண்டிருந்த வேளை தமிழ் மக்கள் மீது சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் தீவிர போர் தொடுத்திருந்தது. தமிழ் மக்கள் இடப்பெயர்வு அவல வாழ்க்கையில் சிக்கியிருந்தனர். அவ்வாறிருந்த வேளையிலும் - அதாவது தமிழ் மக்களின் உரிமைப்போரைத் துடைத்தழிக்கச் சபதம் பூண்டு அம்மக்கள் மீதுபோர் நடத்தப்பட்ட வேளையிலேயே, சிகல உறுமய "சிங்கள மக்கள் மீதான அநீதி"குறித்து ஆராய்ந்து கொண்டி ருந்தது.

இவ்வாறானதொரு காலத்தில் நடைபெற்ற தேர்தலில் இலங்கை முழுவதும் தமக்குள்ள உரிமையை நிலைநாட்டுவதற்காக அனைத்துத் தேர்தல் மாவட்டங்களிலும் போட்டியிட்டு திரட்டிய வாக்குகளின் அடிப்படையில் ஒரேயொரு தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரைப் பெற்றுக் கொண்டது. அவ்வேளையில் தான் அவ் அமைப்பின் தலைமைத்துவத்தின் பதவிப் போட்டியை சிங்கள மக்களே அறிந்து கொண்டனர்.



பின்னர் யுத்த மூலம் தீர்வுகாண முடியாது, சமாதான முயற்சிகளே சிறிலங்காவைக் காக்கும் ஒரே வழியென சிங்களமக்கள் உணர்ந்து கொண்ட வேளையில் பொதுசன ஐக்கிய முன்னணி பதவி இறக்கப்பட்டது மட்டுமல்ல சிகல உறுமயவும் ஓரம் கட்டப்பட்டது.

சிகல உறுமயவை முன்னர் சந்திரிகா குமாரதுங்க நடத்திய "சமாதானத்திற்கான யுத்தம்" எவ்வாறு வளர்ந்ததோ அவ்வாறே இன்று சமாதானப்பேச்சு வார்த்தைகளின் தேக்க நிலையும் வளர்ந்துக்கொண்டிருக்கிறது. இப்பொழுது சமாதான முயற்சியில் ஏற்பட்டுள்ள தேக்க நிலையானது ஜே.வி.பியை ஒரு முக்கியமான அரசியல் சக்தியாக வளர்த்து வருவது வெளிப்படை. அது போன்றே சிகல உறுமயவையும் அது வளர்த்து விடுவதற்கான சந்தர்ப்பமும் உண்டு.

ஆனால் அண்மையில் சிகல உறுமய நடத்திய இருபோராட்டங்களுக்குக் கிடைத்த தோல்வியானது, அதனது வளர்ச்சியை பாதிக்கக்கூடியதாக அமைந்து விட்டதை அவ்அமைப்பு உணர்ந்து கொண்டிருக்கக்கூடும். முதலாவது குரங்குப் பாஞ்சானுக்கான பாதயாத்திரை இடையில் நிறுத்தப்பட்டமை, இரண்டாவது கொழும்பில் நடைபெற்ற சிங்கள - தமிழ்க் கலாச்சார விழாவில் வாங்கியஅடி. இவற்றில் இரண்டாவதில் கிடைத்தது சிகல உறுமயவின் "வீர உறுமலுக்குக்" கிடைத்த தலையடி என்றே கூறவேண்டும். அங்கே அடித்தது "சிங்களப்புலிகள்" என அவர்களால் வர்ணிக்கப்படுபவர்கள் என்பது அது எதிர்பாராத ஒன்றே.

இச்சம்பவம் சிகல உறுமயவை சிந்திக்க வைத்திருக்கிறது என்பதையே "சிங்களப்படை" அமைக்கும் அதன் திட்டம் வெளிப்படுத்துகிறது. இந்தச் சிங்களப்படை "தமிழ்ப் புலிகளுக்கு" எதிரான சிகல உறுமயவின் போராட்டத்தில் எவ்வாறு பங்களிக்கும்? அல்லது எத்தகைய தாக்கத்தை விளைவிக்கும் என்பதை விட அவ்வாறான ஒரு முயற்சிக்கு சிங்கள இளைஞர்கள் மத்தியில் ஆதரவு கிட்டுமா? என்பதும் கேள்வியே.

ஏனெனில் படைக்கு ஆட்திரட்ட பொதுசன ஐக்கிய முன்னணி எடுத்த முயற்சிக்கு கிடைத்த தோல்வி இதற்கு முன்னுதாரணமாக உள்ளது. அதன் பிரதமர் 10 ஆயிரம் பேரை படைக்கு மட்டுமல்ல, பௌத்தத்தைக்காக்க 10 ஆயிரம் பிக்குகளை திரட்டும் முயற்சி கூட தோல்வியையே தழுவிக் கொண்டது. இந்நிலையில் சிகல உறுமயவை நம்பி சிங்கள இளைஞர், யுவதிகள் இணைவார்கள் என்பது சந்தேகமே.

ஆனால் சிறிலங்காவின் தலைநகர் கொழும்பிலே தமிழ்க் கலைஞர்களைப் பாதுகாக்க "சிங்களப் புலிகள்" நடத்திய தாக்குதலிருந்து கற்ற பாடம்மூலம் "சிங்களச் சிங்கங்களைத்" திரட்ட வேண்டிய தேவை சிகல உறுமயவுக்கு உருவாகியிருக்கக்கூடும். எங்கு வைத்து அடித்தாலும் கேட்க நாதியற்றிருந்த தமிழருக்கு இப்படி ஒரு பாதுகாப்பு உருவாகியிருப்பது சிகல உறுமயவிற்கு அதிர்ச்சியளித்திருப்பதன் காரணமாகவே இவ்வாறான ஒரு படைத் திரட்டலுக்கு அது முயற்சியெடுத்திருக்கிறது.

அதாவது சிகல உறுமய இப்போது "சிங்கள புலிகளுக்கு" எதிராக போராட வேண்டிய நிலைக்குத்தள்ளப் பட்டிருக்கிறது. அவ் அமைப்பானது தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் எதிரான இனவாதத்தின் அடிப்படையிலேயே கட்டியெழுப்பப்பட்டது. அதிலும் சிங்கள பௌத்தரின் நலன்களையே அது முதன்மைப்படுத்தி வருகிறது. ஆனால் இப்பொழுது சூழ்நிலை மாறிவருகின்றது என்பதை சிகல உறுமய உணரமறுத்தால், மேலும் தோல்விகளைச் சந்தித்துச் செல் வதுடன் "சிங்கள மக்களால் சிங்கள மக்களுக்கு (சிகல உறுமயவுக்கு) இழைக்கப்பட்ட அநீதிகுறித்து விசாரிக்க ஆணைக் குழு நியமிக்கவேண்டிய நிலையும் ஏற்படலாம்.

வேலவன்

# கிழக்கு அசம்பாவிதங்களின் பின்னணி வெளிப்படுமா?

கிழக்கில் தமிழ் - முஸ்லிம் மக்களுக் கிடையில் அண்மைக் காலமாக ஏற்படும் நல்லுறவை சீர்குலைக்கும் வகையில் திட்டமிட்ட ரீதியில் பல அசம்பாவிதங்கள் மேற்கொள்ளப்படுவதை அறியக்கூடியதாகவுள்ளது.

மட்டக்களப்பு, அம்பாறை, திருமலை என தமிழ் மக்களையும் முஸ்லிம் மக்களையும் படுகொலை செய்யும் ஒருவித திட்டமிட்ட நடவடிக்கைகள் அரங்கேறி வருகின்றன.

இத்திட்டமிட்ட நடவடிக்கைகளை பெருமளவில் புலிகள் மீது பழி சுமத்தும் ஒரு ஆபத்தான செயற்பாடும் வெளிப்படுத்தப்படுகிறது.

இந்த நிலையில் திருமலையில் ஒரு கைக்குண்டுத் தாக்குதலில் இரண்டு முஸ்லிம்களும், கிண்ணியாவில் வயற்காவலுக்குச் சென்ற மூன்று முஸ்லிம்களும் கிழக்கு மாகாணத்தில் கொல்லப்பட்டதையடுத்து அங்கு பெரும் பதட்ட நிலை காணப்பட்டது.

இது இவ்வாறு இருக்க, இதற்கு முன்னரும் பல சந்தர்ப்பங்களில் முஸ்லிம் பொதுமக்களை குறிவைத்து பல்வேறு தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதையும் நாம் நினைவில் கொள்ளலாம்.

இவ்வாறான படுகொலை செயற்பாட்டை மேற்கொள்ளும் குழு யார் என்பதை இதுவரை இனம் காணமுடியாத ஒரு நிலை காணப்படுகிறது.

ஆனால் இந்த செயற்பாடுகளையடுத்து முஸ்லிம் காடையர்களில் சிலரை ஏவி தமிழ் மக்களை தாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதனை அவதானிக்கும் போது தமிழ் - முஸ்லிம் மக்களுக்கிடையில் ஒரு மோதலை தூண்டும் ஒரு குழுவின் செயற்பாடு என்பதையும் அந்த குழுவிற்கு இன்னும் இந்த செயற்பாட்டில் வெற்றி கிட்டவில்லை என்பதையும் எவரும் இலகுவில் புரிந்துகொள்ளலாம்.

இந்த நிலையில் கிழக்கு மாகாணத்தில் வாழும் முஸ்லிம் மக்களே பரவலாக பேசிக் கொள்ளும் அளவிற்கு முஸ்லிம் குழுவொன்றே இத்தாக்குதல்களின் பின்னணியில் இருப்பதாகவும் அந்த குழுவிற்கு முஸ்லிம் அரசியற் கட்சிகளின் ஆதரவும், அனுசரணையும் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த முஸ்லிம் கட்சியும் அந்த கட்சியில் இருக்கும் சில அரசியல் தலைவர்களும் இந்த மோதலைத் தூண்டிவிட்டு பின்னர் தாங்கள் முன்வந்து அதனைத் தங்களது தலையீட்டின் மூலமே தணிக்கப்பட்டது போன்ற தோற்றப்பாடுகளைக்காட்டி அரசியல் இலாபம் தேட முயல்கின்றனர்.

ஆனால் இந்த ஆபத்தான அரசியல் நாடகத்தில் அப்பாவி முஸ்லிம் மக்களும், தமிழ் மக்களுமே கொல்லப்படுகின்றனர்.

இதனை முஸ்லிம் மக்கள் சரியான வகையில் இனம் கண்டு கொள்ளாதபட்சத்தில் அவர்கள் பெரும் ஆபத்தை எதிர் கொள்ளப்போவதோடு கிழக்கு



மாகாணத்தில் அமைதி என்பது கானல் நீராகவே இருக்கப் போகிறது.

இந்த நிலையில் அண்மைக்காலமாக முஸ்லிம் இளைஞர்கள் தமது சுயபாதுகாப்பிற்காக துப்பாக்கி ஏந்தவேண்டும் என்ற கருத்து வெளிப்படுத்தப் படுகிறது.

இதனை குறிப்பிட்ட முஸ்லிம் கட்சியும் அதில் உள்ள குறிப்பிட்ட அரசியல் தலைவர்களுமே இதனை வெளிப்படுத்துகின்றனர். இவையெல்லாம் கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்படுகின்ற தாக்குதல்களின் பின்னணியோடு தொடர்புபட்டதாக இருக்குமோ என்ற ஐயமும் பரவலாக பல்வேறு தரப்பினரிடமிருந்து எழுப்பப்படுகிறது.

இவை கிழக்கு மாகாணத்தை பல்வேறு துண்டுகளாக கூறு போடத்துடிக்கும் சிங்கள பேரினவாதிகளின் செயற்பாடுகளை அங்கீகரிப்பவர்களின் வேலையென்பதை முஸ்லிம் மக்களும் தமிழ் மக்களும் தெளிவாகவே கிழக்கில் புரிந்து வைத்துள்ளனர்.

இந்த நிலையில் தமிழ் - முஸ்லிம் மக்கள் மத்தியில் அண்மைக்காலமாக ஏற்பட்டு வரும் நல்லுறவை சீர்குலைக்கும் குழுக்களை இனம் கண்டு கிழக்கு மாகாணத்தில் அமைதிநிலை ஏற்பட தமிழ் மக்களோடு சேர்ந்து முஸ்லிம் மக்கள் பாடுபடவேண்டியதேவை உள்ளது.

ஏனென்றால் புலிகளால் அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் புலிகள் முஸ்லிம் கட்சிகளோடு மட்டுமல்லாது, முஸ்லிம் மதத்தலைவர்களோடும் முஸ்லிம் பிரமுகர்களோடும் பல சந்திப்புக்களை மேற்கொண்டு ஏற்படுகின்ற சிற்சில பிணக்குகளும் தீர்வு கண்டு வருகின்றனர்.

இவ்வாறான சந்திப்புக்களின் போது புலிகள் முஸ்லிம் அரசியல் கட்சி பிரமுகர்களோடு நடத்திய சந்திப்புக்களில் காணப்பட்ட இணக்கப்பாடுகளை விட முஸ்லிம் மதத்தலைவர்களோடும் பிரமுகர்களோடுடனானதுமான சந்திப்புக்களின்போது ஏற்படுகின்ற இணக்கப்பாடுகள் நல்ல விளைவுகளை ஏற்படுத்தியிருந்தன. இவையெல்லாம் கிழக்கு மாகாணத்தில் பல தாக்கங்களை வைத்துக்கொண்டு, அரசியல் நடத்துபவர்களால் சகித்துக் கொள்ள முடியவில்லை. இவையும் கிழக்கு மாகாணத்தில் நடைபெறும் அனர்த்தங்களுக்கு காரணம்.

இவ்வாறுதான் முன்னர் இரண்டு முஸ்லிம் இளைஞர்கள் அம்பாறையில் இனம்தெரியாதோரால் கடத்தப்பட்ட போது அதனை புலிகள் மீது குற்றம் சுமத்தப்பட்டதோடு, பல்வேறு எதிர்ப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

ஆனால் பின்னர் அந்த கடத்தல் பின்னணியில் முஸ்லிம் குழுவினரின் சம்மந்தம் இருப்பதாக புலன் விசாரணைகளில் தெரியவர அப்படியே அந்த கடத்தல் நாடகம் கைவிடப்பட்டது.

இவ்வாறு கிழக்கு மாகாணத்தில் நடைபெறும் அசம்பாவிதங்களின் பின்னணியில் பெருமளவு முஸ்லிம் குழுக்களும், அதனை ஊக்குவித்தவாறு சிங்கள பேரினவாதிகளும் இருப்பதும் பலமுறை வெளிச்சத்துக்கு வந்துள்ளது.


இதனை சரியாக புரிந்து கொள்ளாது தமிழ் மக்கள் மீதும், புலிகள் மீதும் குற்றம் சுமத்துபவர்கள் உண்மைகளை புரிந்து கொள்ளவேண்டும், புரிந்து கொள்வார்களா?

நக்கீரர்

# ரஜீவ் - பிரபா சந்திப்பு
# எழுதப்படாத ஒரு ஒப்பந்தம்

**கலாநிதி அன்ரன் பாலசிங்கம்**





1987ம் ஆண்டு ஜூலை மாதம் 29ம் திகதி இந்திய இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. பாரதப் பிரதமர் ரஜீவ்காந்தியும் இலங்கை அரசஅதிபர் ஜே.ஆர் ஜெயவர்த்தனாவும் கொழும்பில் நிகழ்ந்த விசேடவைபவ மொன்றின்போது இவ்வுடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர். இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட தினத்திற்கு முதல்நாள், அதாவது 1987ம் ஆண்டு ஜூலை மாதம் 28ம் திகதி புதுடில்லியில் இந்தியப் பிரதமர் ரஜீவ் காந்திக்கும், விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கும் மத்தியில் ஒரு இரகசிய ஒப்பந்தம் மேற்கொள் ளப்பட்டது. கைச்சாத்து இடப்படாத அந்த இரகசிய உடன்பாடு பற்றி அனேகருக்குத் தெரியாது. அக்காலகட்டத்தில் ரஜீவின் நிர்வாக ஆட்சிபீடம் மூடி மறைத்த உண்மை களில் இதுவும் ஒன்று. ரஜீவ் - பிரபா உடன்பாட்டில் சம்பந்தப்பட்டவர்களில் நானும் ஒருவன் என்பதால் அந்த வரலாற்று நிகழ்வை இங்கு பதிவு செய்வது முக்கியமெனக்கருதுகிறேன்.

தலைவர் பிரபாகரனும், நானும் யோகியும், திலீபனும் புதுடில்லிக்கு அழைத்துவரப்பட்டு அசோக்கா விடுதியில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டது பற்றியும், இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை எம் மீது திணித்து விட எடுக்கப்பட்ட முயற்சிகள் பற்றியும் முந்திய கட்டுரையில் விபரித்தேன். தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் விடுதலைப்புலிகளுக்கு சார்பான நிலை எடுத்துக்கொண்டதால் இந்திய அரசுக்கு சங்கடமான நிலை எழுந்தது. கொழும்பு சென்று ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு முன்பாக எப்படியாவது விடுதலைப் புலிகளை வழிக்கு கொண்டுவரவேண்டும் என ரஜீவ்காந்தி விரும்பினார். அவருக்கு ஒரேயொரு மார்க்கம்தான் தென்பட்டது. புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனை நேரடியாகச் சந்தித்து, ஒப்பந்தம் பற்றி அவரது கருத்துக்களை கேட்டறிந்து, அவருடன் ஒரு இணக்கப்பாட்டிற்கு வருவதுதான் காலச்சிறந்த வழி என ரஜீவ் காந்தி முடிவு எடுத்தார்.

1987ம் ஆண்டு ஜூலை மாதம் 28ம் திகதி நள்ளிரவு. அசோக்கா விடுதியில் ஆழ்ந்த தூக்கத்திலிருந்த என்னையும் பிரபாகரனையும் அவசர அவசரமாக எழுப்பினார்கள் இந்தியப்புலனாய்வு அதிகாரிகள். பிரதமர் ரஜீவ் காந்தி மிகவும் அவசரமாக எம்மைச்சந்திக்க விரும்புவதாகவும் உடனே புறப்படுமாறும் பணித்தார்கள். ஆயுதம் தரித்த கரும்பூனைகளின் வாகன அணி பின்தொடர பிரதமமந்திரியின் இருப்பிடத்திற்கு அழைத்துச்செல்லப்பட்டோம். வீட்டு வாசலில் எமக்காக காத்துநின்றார் பிரதமர். ரஜீவ் காந்தியுடன் உள்ளக புலனாய்வுத் துறையின் அதிபர் திரு.எம்.கே. நாராயணனும் நின்றுகொண்டிருந்தார்.

புன்முறுவல் பூத்தபடி மனமுவந்து எம்மை வரவேற்றார் பிரதமர், பிரபாகரனைப்பார்த்து "உங்களைப் பற்றி நிறையக்கேள்விப்பட்டிருக்கிறேன். உங்களை நேரில் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்" என்றார். அங்கு தமிழக அமைச்சர் பண்டுருட்டி இராமச்சந்திரனும் எமக்காக காத்து நின்றார். கலந்து ரையாடல் உடனேயே ஆரம்பித்தது. "இந்த ஒப்பந்தம் குறித்து நீங்கள் அதிருப்தி அடைந்திருப்பதாக அறிந் தேன். ஒப்பந்தத்தில் உள்ள குறைபாடுகள் பற்றி விபரமாக கூறுவீர்களா?" என்று கேட்டார் ரஜீவ்காந்தி. எமது கருத்துக்களை விபரமாக விளக்கும்படி பிரபாகரன் என்னைப் பணித்தார். ஒப்பந்தத்திலுள்ள குறைபாடுகளை ஒவ்வொன்றாக விளக்கினேன்.

இனப்பிரச்சினையைப் பொறுத்தவரை தமிழரின் நில உரிமை மிக முக்கியமானது. இலங்கையில் வடகிழக்கு மாகாணங்களைக்கொண்ட நிலப்பரப்பில் தமிழர்களும்,தமிழ்பேசும் முஸ்லிம் மக்களும் வரலாற்று ரீதியாக வாழ்ந்து வருகிறார்கள். இந்த நிலம் அவர்களது சொந்த நிலம். அவர்களது தாயகநிலம். இந்த தாயக நிலத்தைப் பிரிக்கும் எந்தத் திட்டத்தையும் தமிழ்மக்கள் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை. வட- கிழக்கு மாகாணங்களைக்கொண்ட நிலப்பரப்பு தமிழ் பேசும் மக்களின் தாயகமாக இந்திய -இலங்கை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டபோதும், இந்த தாயக நிலத்தின் பிரதேச ஒருமைப்பாட்டை கருத்துவாக்கெடுப்பிற்கு விடுவது என்ற தீர்மானத்தை நாம் ஏற்றுக் கொள்ளமுடியாது. இது தமிழர் தாயகத்தை கூறுபோடவழிவகுக்கும் என்று விளக்கினேன். அடுத்ததாக, மாகாண சபைக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரபரவலாக்கம் வரையறுக்கப்பட்டது என்றும் அது தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை பூர்த்தி செய்யவில்லை என்பதையும் விளக்கினேன். எல்லாவற்றிற்கும் மேலாக, வட-கிழக்கு மாகாண சபையை கலைத்துவிடும் அதிகாரம் இலங்கையின் அரசஅதிபர் ஜெயவர்த்தனாவுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இவர் ஒரு சிங்கள இனவெறியர். தமிழ் மக்களுக்கு விரோதமானவர். இவர் தமிழ் மக்களுக்கு நீதி வழங்குவாரென நாம் நம்பவில்லை என்று கூறினார் பிரபாகரன். அடுத்ததாக ஆயுதக் கையளிப்பு பற்றிய விடத்தை எடுத் துக் கொண்டோம். ஒப்பந்தம் கைச்சாத்தாகிய 72 மணிநேரத்திற்குள் ஆயுதங்களை ஒப்படைக்குமாறு கூறுவது அநீதியானது. எத்தனையோ ஆண்டுகளாக இரத்தம் சிந்திப் போராடிப் பெற்ற ஆயுதங்களை நான்கு நாட்களுக்குள், அதுவும் தமிழரின் தேசியப்பிரச்சினைக்கு இறுதித்தீர்வு கிட்டுவதற்கு முன்பாக கையளிக்கும்படி வற்புறுத்துவது எவ்வகையிலும் நியாயமாகாது என்றார் பிரபாகரன். நாம் சொல்வதையெல்லாம் ஆர்வமாகவும், பொறுமையாகவும் கேட்டபடி குறிப்பு எடுத்துக்கொண்டிருந்தார் ரஜீவ் காந்தி.

நாம் எமது நிலைப்பாட்டைக் கூறிமுடித்ததும் ரஜீவ்காந்தி சொன்னார். "உங்களின் மக்களின் பிரச்சினைக்கு ஒரு நீதியான தீர்வு காண வேண்டும் என்பதில் எனது அரசாங்கம் கடும் முயற்சிகளை எடுத்து வருகிறது. இந்த விடயத்தில் உங்களது ஒத்துழைப்பு எமக்கு அவசியம். நீங்கள் சொல்வது போல இந்த ஒப்பந்தத்தில் குறைபாடுகள் இருக்கத்தான் செய்கிறது. இந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட மாகாண சபைத் திட்டம் ஒரு தற்காலிக ஒழுங்குதான். அதிலுள்ள குறைபாடுகளை பின்பு நான் ஜெயவர்த்தனாவுடன் பேசி நிவர்த்திசெய்யமுயற்சிப்பேன். தமிழர் தாயகம் பற்றி நீங்கள் எழுப்பிய ஆட்சேபனையை நான் கவனத்தில் எடுத்துள்ளேன். இது பற்றி நான் ஜெயவர்த்தனாவுடன் பேசுவேன். கருத்துவாக்கெடுப்பு நடத்தாமல் அதனை ஒத்திவைக்குமாறு சொல்லுவேன். எதற்கும் நீங்கள் இந்திய அரசை நம்பவேண்டும். தமிழரின் நலன் மீது தான் நாம் அக்கறை கொண்டு செயற்படுகின்றோம். எனவே உங்களது ஆதரவு எமக்குத்தேவை. தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுத்து, அவர்களது பாதுகாப்பை இந்த ஒப்பந்தம் உறுதிப்படுத்தும். ஒப்பந்தத்தை நீங்கள் ஆதரித்தால் எமது கையைப்பலப் படுத்துவதாக அமையும்" என்றார்.

இந்தியப் பிரதமர் கூறியவற்றை தமிழில் மொழிபெயர்த்து பிரபாகரனுக்கு விளக்கமளித்தார் அமைச்சர் பண்டுருட்டி. "இந்த ஒப்பந்தம் தமிழ் மக்களின் நலனைப் பேணவில்லை. மாறாக, தமிழ் மக்களின் நலனைப் பாதிக்கிறது. ஆகவே, இந்த உடன்படிக்கையை நாம் ஏற்றுக் கொள்ளமுடியாது." என்றும் அழுத்தம் திருத்தமாகச் சொன்னார் பிரபாகரன். ரஜீவ் காந்திக்கு நிலமை புரிந்தது. பிரபாகரன் தனது நிலைபபாட்டில் உறுதியாக நிற்கிறார் என்பதையும் அவர் உணர்ந்து கொண்டார். விடுதலைப் புலிகளுடன் முரண்பட்டு காரியத்தைக் கெடுக்க அவர் விரும்பவில்லை. ஆகவே, தனது அணுகுமுறையைத் திடீரென மாற்றிக் கொண்டார்.

"உங்களது நிலைப்பாடு எனக்குப்புரிகிறது. நீங்கள் எடுத்தமுடிவையோ, கொள்கையையோ மாற்றச்சொல்லி நான் கேட்கவில்லை. நீங்கள் இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ளத் தேவையில்லை. ஆனால் அதற்கு எதிர்ப்புத்தெரிவிக்காமல் இருந்தால் போதும்." என்றார் ரஜீவ்காந்தி. "பார்த்தீர்களா?" பிரதமமந்திரியே உங்களது வழிக்கு வந்துவிட்டார். ஒப்பந்தத்தை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டாம். அது உங்கள் நிலைப்பாடு அதை நீங்கள் ஏற்கத் தேவையில்லை. ஆனால் அதற்குத் எதிர்ப்புத்தெரிவிக்கவேண்டாம் என்று மட்டும் பிரதமர் கேட்கிறார். இந்தச்சிறிய ஒத்துழைப்பையாவது நீங்கள் இந்திய அரசுக்காக செய்யலாம் அல்லவா?" என்று ரஜீவிற்காக வக்காலத்து வாங்கினார் பண்டுருட்டியார். இந்தச் சந்திப்பில் அவர் எதற்காக அழைக்கப்பட்டார் என்பது இப்பொழுது புலனாகியது. ரஜீவ் கொடுத்த விளக்கமும் அதற்குப் பண்டுருட்டியார் அளித்த வியாக்கியானமும் பிரபாகரனுக்கும் எனக்கும் திருப்தியை அளிக்கவில்லை. "ஒரு விடயத்தை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் அதனை நாம் எதிர்க்கின்றோம் என்றுதானே அர்த்தம்." என்று எனது காதோடு குசுகுசுத்தார் பிரபாகரன். ஏற்றுக்கொள்ளா ததற்கும் எதிர்ப்புத் தெரிவிப்பதற்கும் இடையில் வேறுபாடு காட்டி எம்மைத் திருப்திபடுத்தமுடியாது என்பதை ரஜீவ் உணர்ந்துகொண்டார். அதனால் பிரச்சினையை வேறுதிசைக்கு எடுத்துச்சென்றார்.

நன்றி: விடுதலை

(அடுத்தவாரம் முடிவுறும்...)



# இரவு ஏன் இருளாக இருக்கிறது?

மிகவும் சின்ன, எளிமையான கேள்வியாக இருந்தாலும் பதில் சொல்லச் சிரமமான கேள்வி இது. இன்னும் குறிப்பாகச் சொன்னால் அமாவாசை 'ஏன் கடும் இருளாக இருக்கிறது? சூரியவெளிச்சம் நேரடியாகப் பாய்வதால் பகற்காலம் இருப்பதைப் போலவே சூரிய ஒளி பட்டுத் தெறிப்பதால் நிலவு ஒளிர்ந்து இரவு வேளைகளில் வெளிச்சம் கிடைப்பதைப்போல கோடிக்கணக்கான நட்சத்திரங்களில் இருந்து புறப்பட்டு வரும் நட்சத்திர ஒளி ஏன் நமது இரவுகளைப் பகல்களாக்குவதில்லை. நியாயமான கேள்வி அல்லவா? சரியாகச்சொன்னால் இரவுகள் வெளிச்சம் மிகுந்து மிக உஷ்ணமாக இருந்திருக்க வேண்டும். ஆனால் அப்படி இல்லையே ஏன்?

இப் பிரபஞ்சம் மென்மேலும் விரிவடைந்து கொண்டிருப்பதால்தான் நட்சத்திர வெளிச்சம் பூமியை எட்டாமல் இருக்கிறது என்று ஒரு விளக்கம் முன்வைக்கப்படுகிறது. நமது பால்வெளி நட்சத்திர மண்டலமும் நமக்கு வெளியே அமைந்திருக்கும் எண்ணற்ற நட்சத்திர மண்டலங்களும், பல்வேறு திசைகளில் (உண்மையில் விண்வெளியில் திசைகள் எல்லாம் கிடையாது!) விரைந்தோடிச் சென்றுகொண்டிருக்கின்றன. இப்பிரபஞ்சம் இவ்வாறு விரிந்துகொண்டிருப்பதால் ஒரு நட்சத்திரத்தில் இருந்து புறப்படும் வெளிச்சம் பூமியை வந்து சேர முடியாமல் போகிறது. ஒரு நட்சத்திரத்தின் அளவையும், அது வெளியிடும் ஒளியையும் இப்பேரண்டத்தின் எல்லையில்லா விசாலத்துடன் ஒப்பிடும்போது ஒரு மிகப்பெரும் மைதானத்தில் ஒளிரும் மின்மினிப் பூச்சிகளின் வெளிச்சத்தைப் போன்றதே நட்சத்திரவெளிச்சமாகிறது. ஒளிரும் மின்மினி வெளிச்சத்தைத்தான் தூரத்தில் இருக்கும் ஒருவரால் அவதானிக்க முடியுமே தவிர, அம் மைதானத்தை வெளிச்சமுள்ளதாக்க அவற்றினால் முடியாது. இது இன்னொரு விளக்கம்.

ஆனால் பல இலட்சம் ஆண்டுகளுக்கு முன்னர் உலகில் காணப்பட்ட இரவுகள் இன்றைய இரவுகளை விடக் கருமையாக இருந்திருக்க வேண்டும் என்று சொல்கிறார்கள் விண்வெளி ஆய்வாளர்கள். நட்சத்திர வெளிச்சத்தால் நமது இரவுகள் கொஞ்சமாக வெளிச்சம் கண்டிருப்பதாகவும் மிகக்குறைவான வெப்ப அதிகரிப்புக் காணப்படுவதாகவும் ஆய்வாளர்கள் கண்டறிந்திருக் கிறார்கள். விண்வெளி ஆய்வில் டொப்லர் எஃபெக்ட் என்ற ஒரு கோட்பாடு உண்டு. சில நட்சத்திரங்களை அவதானிக்கும் போது அவை சிவப்பு நிறஒளியை வெளிவிடுவதைக் காணலாம். அவை நம்மை விட்டு விலகிச் செல்லும் நட்சத்திரங்கள். இதனாலேயே சிவப்பு நிறத்தை நாம் காண்கிறோம். இப்படிச் சகலதும் சகல பக்கங்களிலும் விரைந்து ஓடிக் கொண்டிருந்தால் கடைசியில் என்னவாகும்? இதற்கான பதில் எவருக்குமே தெரியாது. சுமார் ஆயிரம் கோடி ஆண்டுகளுக்கு முன்னர் என்ன நடந்திருக்கமுடியும் என்பதை அனுமானிக்கத்தான் முடியுமே தவிர அடித்துச்சொல்லமுடியாது.

கலைஞன் கனவு காண்பவன்; ஆனால், அவன் காணும் கனவு, தன்னெதிரே உள்ள உலகே. - ஜார்ஜ் ஸாந்தாயனா

# விடுதலை வரலாற்றில் இசையின் பங்களிப்பு

மனிதக் குரலின் முக்கிய வெளிப்பாடாகப் பேச்சும் அதற்கு அடுத்த இடத்தில் இசையும் இடம்பெற்றன. மனிதக்குரலின் கொண்டாட்டமாக இசை மதிப்பிடப்படுகிறது. பேச்சும் இசையும் மனிதக் குரலின் இருப்பை நியாயப்படுத்துகின்றன. கவர்ச்சியான இனிமை ததும்பும் பேச்சு இசைக்கு நிகராக விளங்குகின்றது. சீரான ஒழுங்கில் மனிதக் குரல் வெளிவரும்போது. அது இசையாகப் பரிணமிக்கிறது. கலைகளில் மிகப்பழமை வாய்ந்ததாக இசை மதிப்பிடப்படுகிறது. அது எப்போது, எவ்வாறு ஆரம்பித்தது என்று கூறமுடிவதில்லை.

இசைக்கருவிகள் தோன்ற முன்பே மனிதன் பாடத்தொடங்கி விட்டான். என்று நிச்சயமாகக் கூறலாம். தனது குரலுக்குப் பக்கபலமாக குறைகள் இருப்பின் அதை நிரவல் செய்வதற்காக ஆதி மனிதன் இசைக் கருவிகளை நாடியிருக்கலாம். தனது வாழ்விடத்திலுள்ள மூலப் பொருள்களை இசைக்கருவிகளை உருவாக்குவதற்கு பயன்படுத்தியிருக்கலாம். உணவாக்கியபின் எஞ்சிய விலங்கினத் தோலைத்தாளக் கருவியாக்கியிருக்கலாம். வண்டினம் துளையிட்ட குழாய்கள் ஊதும் இசைக் கருவியைத்தோற்றுவித்திருக்கலாம். இவ்வாறு தட்டும், மீட் டும், ஊதும் இசைக் கருவிகள் பிறப்பெடுத்திருக்கலாம்.

ஏதோவொரு இசைப் பாரம்பரியத்தை கொண்டிராத மனித நாகரிகத்தையோ, சமூகத்தையோ காண்பதரிது. தமது நாளாந்திர வாழ்வில் அன்றும், இன்றும் மனித சமுதாயம் இசையைப் பயன்படுத்துகின்றது. சந்தம், ஓசையொழுங்கு, தாளலயக் கூறு, ஒத்திசைவு நயம் என்பன காலப்போக்கில் தோன்றின. ஒரே சங்கதியை குரல் ஏற்றத் தாழ்வுடன் கூறுவதை இசையின் ஆரம்பக் கட்டமாகக் கொள்ளலாம் பாட்டிலக்கணம், அணியிலக்கணம், கவியுரிமை போன்றவை மிகப் பிற்காலத்தில் தோன்றியவையாகும். இசையின் பயன்பாடுகள் வேறுபடுகின்றன.

ஆடிப்பாடி வேலை செய்தால் அலுப்பிருக்காது என்ற பாட்டுவரிக்கு அமைவாக ஆதி மனிதர்கள் ஏதோ வாய்க்கு வந்த ஒலிகளைக் கிளப்பிக்கொண்டு வேட்டைக்குப் போயிருக்கலாம் அல்லது விவசாயத்தில் ஈடுபட்டிருக்கலாம் இன்றும் அறுவடையின்போது பாடும் பாடல்கள் பிரபலமாகியுள்ளன. ஓய்வு நேரப் பொழுதுபோக்காக இசை நன்கு பயன்படுகிறது. போர்க்களம் செல்லும் வீரர்கள் ஒரே குரலில் பாடிக்கொண்டு செல்வதை நாம் பன்னாட்டு இலக்கியங்களில் பார்க்கலாம்.வன் கொடுமைகளுக்கு எதிராக நசுக்கப்பட்ட மக்கள் கிளர்ந்தெழும்போது உணர்வுப்பூர்வமான மிகச் சிறந்த இசை வடிவங்கள் தோன்றுகின்றன.

'விடுதலை நோக்கிய நீண்ட பயணம்' (**LONG WALK TO FREEDOM**) என்ற தனது வாழ்க்கை நூலில் தென் ஆபிரிக்கத் தலைவர் நெல்சன் மண்டேலா தனது மக்கள் பற்றிக் கூறுகிறார், "பொலிசாரினால் கைது செய்யப்படும்போது அவர்கள் பாடுகிறார்கள். நீதி மன்றத்திற்கு வெளியிலே இருந்து அவர்கள் பாடுகிறார்கள். இசை தான் அவர்கள் உணவும் நீரும்" ஆபிரிக்கர்கள் எல்லாவகை இசைவடிவங்களையும் அனுபவித்து மகிழ்கிறார்கள். ஆனால் அவர்களின் குருதியும் தசையோடும் இணைந்த அவர்களுக்குச் சொந்தமான இசை அவர்கள் இதயத்தை நேராகச் சென்றடைகின்றன என்கிறார் மண்டேலா. சோகமான பாட்டிற்கும் உற்சாகமளிக்கும் சிறப்பு இருப்பதாக அவர் இடித்துக் கூறுகிறார். ஆபிரிக்க அரசியலோடு இசை இரண்டறக் கலந்திருந்தாலும் அதற்குத் தனித்தியங்கும்





வலிமையுண்டு என்பது ஆய்வோர் முடிவு.

அண்மையில் வெளிவந்த 'அமன்டிலா'(**AMANDLA**) என்ற தென் ஆபிரிக்கா விடுதலைப் போர் சம்பந்தமான விவரணம் சார்ந்த திரைப்படம் (**DOCUMENTRY FILM**) விடுதலைப்போரில் இசையின் பங்களிப்பு பற்றிய செய்திகளைக் கூறுகின்றது. அமன்டிலா என்றால் விடுதலை என்று பொருள் தென் ஆபிரிக்க ஒலிபரப்புக் கூட்டுத் தாபனமும் போட் நிதியமும் (**FORD FOUNDTION**) இணைந்து இத்திரைப்படத்தைத் தயாரித் தார்கள். படப்பிடிப்பு பத்து வருடகாலம் எடுத்தது.

"வெள்ளை நிற வெறிக்கு எதிராக தென் ஆபிரிக்க மக்கள் நடத்திய போரின் நாற்பது வருடகாலத்தில் எதிர்ப்பின் கருவியாகவும் பின்னடைவுகளைத் தாங்க உதவும் வலுவான சக்தியாகவும் இசையும் பாட்டும் இடம்பெற்றன. இந்த வரலாற்றைக் கூறுவதே இப்படத்தின் முக்கிய நோக்கம்" என்று விமர்சகர்கள் தீர்ப்பு வழங்கியுள்ளனர். மக்களின் இசையுணர்வை வெள்ளை நிறவெறி அரசால் பறிக்க முடியவில்லை, இந்தளவில் அரசுக்கு பெரும் தோல்விதான் என்கிறார் இப்படத்தின் இயக்குநர் லீ கீர்ஷ் (**LEE HIRSH**). இதை இவ்வுலகம் மறந்து விடக்கூடாது என்பதற்காகவே இப்படம் தயாரிக்கப்பட்டது என்கிறார் கீர்ஷ்.

தென் ஆபிரிக்க மக்கள் தமது விடுதலைப் போரின்போது பாடிய பாட்டுக்களையும் இசை வடிவங்களையும் இப்படம் மூன்றாக வகுத்துள்ளது. தோல்வியில் துவண்டு செய்வதறியாது தவிக்கும் இசை: எதிர்ப்புணர்வை வெளிப்படுத்தும் இசை: மக்களை ஒன்று கூட்டி ஒத்துழையாமைக்கு வலுச்சேர்த்து அரசை ஸ்தம்பிதமடையச்செய்ய உதவும் இசை, பாரம்பரிய இசைவடிவங்கள் மற்றும் பாட்டுக்களோடு போராட்டத்தில் ஈடுபட்ட கலைஞர்கள் எழுச்சிப் பாடல்களையும் உருவாக்கி வழங்கினர். இவை புதியனவாக இருப்பினும் பாரம்பரியத்தை மீறும் வகையில் அமையாத காரணத்தால் பேராதரவைப் பெற்றன.

**'விடுதலை நோக்கிய நீண்ட பயணம்' (LONG WALK TO FREEDOM) என்ற தனது வாழ்க்கை நூலில் தென் ஆபிரிக்கத் தலைவர் நெல்சன் மண்டேலா தனது மக்கள் பற்றிக் கூறுகிறார், "பொலிசாரினால் கைது செய்யப்படும் போது அவர்கள் பாடுகிறார்கள். நீதி மன்றத்திற்கு வெளியிலே இருந்துஅவர்கள் பாடுகிறார் கள். இசைதான் அவர்கள் உணவும் நீரும்'' ஆபிரிக்கர்கள் எல்லாவகை இசைவடிவங்களையும் அனுபவித்து மகிழ்கிறார்கள். ஆனால் அவர்களின் குருதியும் தசையோடும் இணைந்த அவர்களுக்குச் சொந்தமான இசை அவர்கள் இதயத்தை நேராகச் சென்றடை கின்றன என்கிறார் மண்டேலா.**

கறுப்பர்கள் மத்தியில் தோன்றிய மிகச் சிறந்த கவிஞரான வியூசிலே மினி (**VUYISILE MINI**) என்ற விடுதலை வீரன் பற்றிய வாழ்க்கைக் குறிப்புக்களையும் இப்படம் தருகின்றது. வெள்ளையர்களையும் அவர்கள் அரசையும் அவமதித்தார் என்ற குற்றச்சாட்டுடன் வியூசிலே மினி கைது செய்யப்பட்டு விசாரணையின்றித் தூக்கிலிடப்பட்டார். பாட்டியியற்றுவது தேசத்துரோகக் குற்றம் என்று வெள்ளையர்கள் விதண்டாவாதம் புரிந்தனர். இவரைப்போன்ற வேறு கலைஞர்களும் இவ்வாறு கொல்லப்பட்டனர். இவர்களுடைய உடல் அடையாளம் இடப்படாத இடுகுழிகளில் புதைக்கப்பட்டன. நாடு விடுதலை பெற்றபின் இவர்கள் எச்சங்கள் அரச மரியாதையுடன் தியாகிகள் இடு நிலத்தில் அடக்கம் செய்யப்பட்டன.(1998)

தென் ஆபிரிக்கர்களுக்கு நிகரான விடுதலை இசை வடிவங்களை நாம் ஆரம்பகாலம் தொட்டு வெளியிடுகிறோம். தற்போது உலக மட்டத்தில் இயங்கிக்கொண்டிருக்கும் விடுதலை இயக்கங்களுடன் ஒப்பிடும்போது எமது இத்துறைசார் தனித்துவம் நன்கு புலப்படும். எமது மெட்டுக்கள் எமக்குச் சொந்தமானவை. எமது பாடல்கள் எமது விடுதலைப் போருக்கு உரமூட்டுகின்றன. எமது தேசிய வானொலி, எமது விடுதலைப் போருடன் தொடர்புடைய எழுச்சிப் பாடல்களையன்றி வேறொன்றையும் ஒலிபரப்புவதில்லை. இப்போது ஒலிபரப்புத்துறையில் பண்பலை ஒலிபரப்பின் காலம். பண்பலைவானொலிகள் யாவும் இலாப நோக்கில் இயங்குகின்றன. ஒலிபரப்புச் சேவையை முதலீடாக்கி இலாப மீட்டுவதையே குறியாகக் கொண்டுள்ளன. மக்களைத் தம் பக்கம் இழுப்பதற்கும் கேட்போரின் எண்ணிக்கையைக் கூட்டுவதற்குமாகப் பற்பலகேள்விக்குரிய உபாயங்களைப் பண்பலை வானொலிகள் யாவும் கைக்கொள்கின்றன. ஆனால் நாம் தனித்து நிற்கிறோம், எமது இலக்கு வித்தியாசமானது.

இசை என்பது தேசிய அடையாளம். ஒரு இனத் தின் குணாம்சங்களை அது வெளிப்படுத்தவேண்டும். இசையில் இணைந்த மொழி கலப்பற்றதாக இருத்தல் வேண்டும். மண்ணும் மொழியும் நிரந்தர அடையாளங்கள். இதில் விட்டுக்கொடுப்பிற்கு இடமில்லை. எதிர்ப்பின் குரலாக கலப்பற்ற மொழியால் மாத்திரம் ஒலிக்கமுடியும். காலனித்துவம் என்பது மண் பறிப்பை மாத்திரம் குறிப்பிடவில்லை. ஆங்கிலம் உள்ளிட்ட பிறமொழிக் கலப்பால் மொழிக் காலனித்துவம் முன்னெடுக்கப்படுகின்றது. எமது இயக்கம் மொழியை எதிர்ப்புக் கருவியாக, அதாவது கலப்பு மூலமாக வரும் சிதைவுக்கு எதிரான கருவியாகப் பயன்படுத்துகின்றது. எமது வானொலி வாயிலாக வெளிவரும் பாடல்களும் பிற நிகழ்ச்சிகளும் இச் செய்தியைக் கூறி நிற்கின்றன. எமது விடுதலைப்போரின் முக்கிய அங்கமாக வானொலி செயற்படுகின்றது.

உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் எழுதி, தேனிசைச் செல்லப்பா பாடிய 'தமிழா நீ பேசுவது தமிழா' என்று தொடங்கும் பாடல் எமது எழுச்சிப் பாடல் வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்தது. விடுதலைப்போர் முரசு என்று தலைப்பில் வெளிவந்த பன்னிரு பாடல்களின் தொகுப்பில் ஒன்றாக இப்பாடல் விளங்குகின்றது. எமது மொழியின் வரலாற்றுத்தொன்மை மொழியும் மண்ணுக்குமான எமது விடுதலைப்போர், எமது இசை வடிவத்தின் தனித்துவம் என்பன இப்பாடலூடாகச் சொல்லப்படுகின்றன.

உலகின் போராட்ட இலக்கியப்பரப்பில் தமிழீழத்தின் எழுச்சிப் பாடல்கள் தனியிடம் வகிக்கின்றன. இவை காலப் பதிவை எடுத்துக் கூறும் கானப் பதிவுகளாக இடம்பெறுகின்றன. கவி நயத்தோடு கருத்தாழமிக்க கவிதைகளைத் தரும் கவிஞர் புதுவை இரத்தினதுரையின் படைப்புக்கள் எமது போராட்ட வரலாற்றின் ஆவண வடிவமாகத் திகழ்கின்றன. பதின்மூன்று வருடங்களுக்குமுன் அவர் பாடிய (1990)

'இந்த மண் எங்களின் சொந்த மண்
இதன் எல்லைகள் மீறி யார் வந்தவன்' என்ற வரிகளுடன் தொடங்கும் பாடல் என்றும் சீரிளமையுடன் விளங்கும். குடியேற்றத்தினால் சுருங்கிய எமது தாயக மண்மீட்பிற்கான குரலாக இப்பாடல்ஓசை நயத்துடன் ஒலிக்கின்றது. இசை ஒருபோராட்ட வடிவம் என்பதை இப்பாடல் நிருபிக்கின்றது. இக் கவிஞர் தனக்குச் சூட்டியுள்ள வியாசன் என்ற புனைபெயருக்கு அர்த்தமுண்டு. கவிதை வடிவில் எமது போராட்ட வரலாற்றை ஆவணப்படுத்தும் அவருடைய நோக்கம் புலப்படுகின்றது.

இசைக்கு எதிர்வு கூறும் திறன் இருப்பதாக 'இசையின் அரசியல் பொருளாதாரம்' (**THE POLITICAL ECONOMY OF MUSIC**) என்ற நூலில் போராசிரியர் ஷக்ஸ் அற்றாலி (**JACQUES ATTALI**) கூறுகிறார். இந்தியா சுதந்திரமடையமுன்பே ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோம் என்று பாடிய பாரதியைப்போல் புதுவை இரத்தினதுரை,

'குயிலே பாடு, காலை விடிந்ததென்று குயிலே பாடு,
எங்கள் கவலை முடிந்ததென்று பாடு' என்று பாடியுள்ளார்.

வானொலியில் திரைப் படப் பாடல்களைப் பயன்படுத்தலாமே என்று கூறப்படும் ஆலோசனை மிகவும் ஆபத்தானது. இது கண்ணை விற்றுச் சித்திரம் வாங்கியதற்கு ஒப்பானதாகும். போராட்டப் பாடல்கள் ஒரு சமூகத்தின் விடிவுக்கான பாடல் களாகும். திரைப்படப்பாடல்கள் புற்றீசல்கள் போல் தோன்றி மறையும் தன்மை வாய்ந்தவை. இந்தியத் திரைப்படங்கள் அண்மைக்காலமாகத் தமிழ் மொழியையும் த்மிழர் பண்பாட்டையும் கொச்சைப் படுத்துகின்றன. தமிழர்கள் அல்லாதோர் தமிழ்ப் படங்களை வியாபார நோக்கில் தயாரிக்கின்றனர். சமூக நலன் நோக்கத்தையோ, விடிவையோ அவர்களிடம் எதிர்பார்க்க முடியாது. நாம் நாமாகவே இருப்போம், அதுவொன்றே போதும்.


**அன்பரசு**

உடலுக்கு உடல் நலம் போன்றதே, ஆன்மாவுக்கு, ஞானம். – லா ரோஷ்ஃபுக்கோ

# தொடர்கதை

## பகுதி — 03

# தாமரைச்செல்வியின் பச்சைவயல் கனவு



## அத்தியாயம்-05

அந்த வருடம் சித்திராவின் கல்யாணம் நிச்சயமாயிற்று. மாப்பிள்ளை வெளிநாட்டில் மகேந்திரனுடன் வேலை செய்பவன். மகேந்திரன் சித்திரவைக் கூப்பிட்டு தன்னோடு வைத்திருந்து திருமணம் செய்துவைக்கும் ஒழுங்குகளைச் செய்தான். கொழும்பு சென்று சித்திராவை அனுப்பிவிட்டு வந்த கையுடன் வயலில் அரிவு வெட்டு ஆரம்பமாகி விட்டது.

அந்தப் தடவை சூடடித்து நெல்லை வீட்டுக்குள் கொண்டு வரவதற்குள் போதும் போதும் என்றாகிவிட்டது. பரவிப்பாஞ்சானை சுற்றியிருந்த வயல்களில் சூடு வைக்கப்பட்டிருந்த நெற்கதிர்களை அப்படியே ராணுவம் எரித்து விட்டதில் எல்லோரும் கலங்கிப போயிருந்தார்கள்.

சூட்டுக்குப்போய் நெருப்பு வைத்தார்களே என்று வயிறு எரிந்தது. ஒருமாதமாய் சரியான அலைச்சல். எல்லாவற்றையும் தாண்டி நெல் மூட்டைகளை வீட்டுக்குள் கொண்டு வந்து அடுக்கிய பின்னும் கலக்கம் தீரவில்லை.

வடபகுதியிலிருந்து லொறிகள் நெல் ஏற்ற வரவில்லை.

"ஆனையிறவுக்கு அங்கால ஒரு மைல் நீளத்துக்கு இப்ப ஒரு கிழமைக்கு மேலாய் எத்தினையோ லொறிகள் நிற்குதாம்." என்றார் தருமலிங்கம்.

சங்கங்களுக்கு முன்னால் நான் நீ என்று போட்டி போட்டுக் கொண்டு சனங்கள் மொய்த்துக் கொண்டார்கள்.

அவசரமாக கொடுக்க வேண்டிய கடன் இருக்கிறது. என்ன செய்வதென்று தெரியவில்லை. சிதம்பரியும் பியோன் ஏரம்புவும் நெல்லு விற்க ஓடித்திரிந்த கதைகளைகேட்க பயமாய் இருந்தது.

"மனிசியின்ர தோடு கூட அடைவு அண்ணை. நெல்லை வித்திட்டால் அவள் பாவியின்ர நகையை எடுத்துக் குடுத்திடலாம்."

பரமு கலக்கத்தோடு அலைந்து கொண்டிருந்தான்.

சுந்தரமூர்த்தி வாத்தியார் தனது நெல்லு மூட்டைகளை வீட்டுக்குள் அடுக்கிவிட்டு ஏதோ நடக்கிறபடி நடக்கட்டும் என்று இருந்து விட்டார்.

"வாத்தியார் மாதச்சம்பளக் காரன்.ஏதோ நெல்லு விற்காட்டிலும் சீவித்துக்கொள்ளுவார். நாங்கள் அப்பிடியே..... நெல்லு வித்தாத் தான் அடுப்பில உலை ஏத்தலாம்."

சிதம்பரி கவலையோடு சொன்னார்.

வீட்டில் இருக்க ஒரே யோசனை என்று கார்த்திகேசுவிடம் போனார்.

கார்த்திகேசுவும் அறை நிறைய நெல்லு மூட்டைகளை அடுக்கி வைத்துக்கொண்டு யோசித்துக் கொண்டிருந்தார்.

"வர வர நிலமை மோசமாய்த்தான் வருகுது. மூல்லைத் தீவுப்பக்கம் சரியான பிரச்சினையாம். இந்திய ஆமிக்காரங்கள் காடுகளுக்க உள்ளிட்டு தேடுதல் நடவடிக்கை செய்யுதாம். செய்தியள் சொல்லறதைக் கேட்டனியே."

"அவங்கள் சொல்லுறதில முக்கால் வாசி பொய்தானே."

"அளம்பில் நாயாறு பக்கம் கடும் பிடிதான் பிடிக்கிறாங்கள் போல கிடக்கு. இருபதாயிரத்துக்கும் மேற்பட்ட ராணுவத்தினர் இரவு பகல் தேடுதல் வேட்டை எண்டு இந்தியா ஆகாசவாணி சொல்லுது. காடுகளெல்லாம் பத்தி எரியுதாம். இதுதானாம் இறுதித் தாக்குதலாம். எப்படி இருக்குது கதை. அவங்களுக்குப் புதை குழி எங்கட வன்னிக் காட்டுக்குள்ளதான். அவங்கள் துவக்கை நீட்டிக்கொண்டு உலகத்துக்கு லெக்ஷன் நடத்திக் காட்டிப்போட்டாங்கள். இங்க சனம் உவங்களால படுறபாடு உலகத்துக்குத் தெரியப்போகுதே. சீவிக்க வழியில்லாமல் பண்ணிப்போட்டாங்கள்."

யாரிடம் போனாலும் இதே பேச்சுத்தான். இதே கவலைதான்.

அன்று வெள்ளிக்கிழமை. முருகன் கோவிலில் மத்தியானப் பூசை நேரம், தீபாராதனை பார்த்து எல்லோரும் கும்பிட்டுக்கொண்டிருந்த நேரம். பரந்தன் சந்திப்பக்கமிருந்து அடுத் தடுத்து வெடிச்சத்தங்கள் கேட்டன.

"பரந்தன் சந்தியில காலமையிலயிருந்து ஆமி நிற்குது. என்ன கரைச்சலுக்கோ தெரியாது."

கும்பிட்ட கை நடுங்க சுந்தரமூர்த்தி வாத்தியார் சொன்னார்.

பூசை முடியுமட்டும் சனங்கள் பதட்டத்தோடுதான் நின்றார்கள். திருநீறு வாங்கியதும் எல்லோரும் அவசர அவசரமாக வீடுகளுக்குப்போனார்கள். அவர் வீட்டுக்கு வந்தபோது பராசத்தியும் வாணி பிள்ளைகளும் முற்றத்தில் நின்றார்கள்.

"ஏன் இதில நிற்கிறீங்கள் உள்ள வந்து வீட்டுக்குள்ள நில்லுங்கோவன்."

"பரந்தன் சந்திக்குப்போன சனத்துக்கு சரியான அடியாம். பரமுவின்ர தம்பிப்பெடியனுக்கு மண்டை உடைஞ்சு ரத்தம் வருகுதாம். அவனை தூக்கப்போன யோகனையும் மகேசனையும் அடிச்சு இருத்திப்போட்டாங்களாம். பரமுன்ர தாய் மனிசி குளறிக்கொண்டு ஓடுது."பராசத்தி கலக்கத்தோடு சொன்னாள்.

"ஐயோ அம்மா இங்கயும் ஆமி வருவானே..."

முகம் வெளிற பயத்தோடு கேட்ட சாந்தனை அணைத்துக் கொண்டார்.

"இங்க வரமாட்டான். பயப்பிடக்கூடாதப்பன்."

தெருவில் எந்த நடமாட்டமும் இல்லை. எதிரே பாடசாலையிலும் பயம் கலந்த அமைதி நிலவியது.

"நீங்களும் விரதத்தோட இருக்கிறீங்கள். வாருங்கோவன் சாப்பிட..."

"கொஞ்சம் பொறுத்து சாப்பிடுவம். எனக்கும் மனம் சரியில்லை. கொஞ்சம் பொறு."

அந்தநேரம் படபடவென்று ஏழெட்டு ராணுவத்தினர் வீட்டுக்குள் நுழைந்தார்கள். என்ன ஏதென்று நிதானிக்கும் முன்பாக ஆளுக்கொருவரை பிடித்துக்கொண்டு உலுப்பினார்கள். சாந்தன் "அயோ ஆமிக்காரன் அடிக்கிறான்"என்று கத்தியபடி அவரை இறுகப் பிடித்துக்கொண்டான்.

"ஏய் சொல்லு, புலி எங்க ஓடினது."

தாடிக்காரன் அவர் கழுத்தை இறுக்க மூச்சு எடுக்க முடியாமல் திணறினார்.

துப்பாக்கியின் அடிப்பாகத்தால் நெஞ்சில் இடித்தான்.

அய்யோ என்று நெஞ்சைப் பிடித்துக்கொண்டு குனிந்தார். அவரிடம் ஓடிவந்த பராசத்தியின் தலைமயிரைப்பிடித்து இன்னொருவன் இழுத்தான். அய்யோ என்ற ஓலம் அங்கே எழுந்தது.

"யாரும் எதுவும் சொல்லுறதில்லை. உங்களையெல்லாம் சுடணும். இந்தபக்கமாதான் அவன் ஓடி வந்திருக்கிறான். எங்கே என்றால் தெரியாது. தெரியாதா உங்களுக்கு" கேட்டுக்கேட்டு அடித்தார்கள்.

"எல்லாம் நட. வீதிக்குப்போ"

முதுகில் கை வைத்து தள்ளினார்கள்.

பராசத்தி சுசீலனை வாணியிடம் கொடுத்தாள்.

"கையில தூக்கி வைச்சிரு பிள்ளை"

குழந்தையை கையில் வைத்திருந்தால் அவர்கள் அடிக்காமல். விடுவார்கள் என்ற நினைப்பு. நாலு வயது சுசீலன் வாணியின் கழுத்தை இறுக கட்டிக்கொண்டான். பராசத்தியினதும் வாணியினதும் கண்களில் நீர் தழும்பிக் கொண்டிருந்தது.

வெய்யில் சுள்ளென்று எரித்த அந்த மத்தியானப்பொழுதில் வீதியில் வந்து நின்றார்கள். அப்போது தான் பார்த்தார்கள், பாடசாலையின் அதிபர் ஆசிரியர்கள் உயர்வகுப்பு மாணவர்களும் தெருவில் நின்றிருந்தார்கள். முருகானந்தனும் கதிரவன் மாஸ்டரும் அவர்களிடம் வர அழுகை பொங்கிக்கொண்டு வந்தது.

"எல்லாம் பரந்தன் சந்திக்குப்போ..."

அவர்கள் பரந்தன் சந்தியை நோக்கி நடந்தார்கள். மற்றைய வீடுகளுக்கும் நுழைந்து ஆட்களை வெளியேற்றினார்கள்.

'படுபாவியள் அடிச்சுப் போட்டாங்கள். தள்ளி விழுத்தி காலால உதைஞ்சாங்கள்." ஆளுக்காள் புலம்பினார்கள்.

இந்த அவமானம் தங்களுக்கு மட்டுமல்ல என்பது புரிந்தது. பரந்தன் சந்தியில் ஊரே வெய்யிலுக்குள் அமர்ந்திருந்தது. கடைகள் எல்லாம் சாத்தப்பட்டிருந்தன. விநாசியின் உதட்டோரம் ரத்தம் வழிந்து கொண்டிருந்தது. அருகில் அமர்ந்திருந்த யோகனின் முகத்தில் கொதிப்பு இருந்தது.

"இவங்கள் ஆர் எங்களை அடிக்க...."

"ஆரடா அவன் முணுமுணுக்கிறது..."

சப்பாத்துக் காலால் யோகனின் முகத்தில் உதைத்தார்கள். மூக்கிலிருந்து ரத்தம் கொப்பளித்து வழிந்தது. சுற்றிலும் வாகன இரைச்சல்களுக்கு நடுவே பல மொழிகளிலும் பேசிக்கொண்டே தங்கள் கோபத்தைக் காட்டிக் கொள்ளும் ராணுவத்தினரைப் பார்க்க அடிவயிறு கலங்கியது. அவர் மெல்ல தலையை நிமிர்த்தி சுற்றிலும் பார்த்தார்.

ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என்று அத்தனைபேரும் முகத்தில் பய உணர்வுடன் அமர்ந திருந்தார்கள். வெய்யில் வெக்கையுடன் பசியும் சேர்ந்துகொள்ள குழந்தைகள் அழத்தொடங்கினார்கள்.

அம்மா தண்ணி வேணும்..... என்று சுசீலன் சிணுங்க,

"கொஞ்சம் இரு. வீட்ட போய் குடிப்பம். என்ர செல்லம் அல்லே....."

வாணி அவன் வாயைப் பொத்தி சமாதானப்படுத்தினாள்.

அவருக்கு தாங்க முடியவில்லை. நெஞ்சுக்குள் எதுவோ புரண்டு எழுந்தது. மரியக்கண்டுவின் முகம் வீங்கிப்போய் இருந்தது.

"காலையில சந்தைக்கு வந்த நேரம் மறிச்சு இருத்திப் போட்டாங்கள். ஏன்னு கேட்டதுக்கு அடிச்சிட்டாங்க"

"என்னடா அங்க பேச்சு"

மரியக்கண்டுவின் முகத்தில் இடித்தான் ஒரு நெட்டையன்.

"ஐயா நானும் இந்திய ஆள்தாங்க. இப்படி அடிக்கிறீங்களே....."

"இந்திய ஆளா... அப்ப இன்னும் உதைக்கணும், நீங்க கூட காட்டித்தர மாட்டீங்க."

அய்யோ என்று கைகளால் முகம்பொத்தி அழுதான் மரியக்கண்டு.

தோளில் சிவப்பு பட்டியுடன் அதிகாரிபோல் நின்றவன் முகம் சிவக்க ஆங்கிலத்தில் கத்தினான்.

"உங்கள் எல்லோரையும் சுட்டுத்தள்ளினால் என்ன உலக சனத்தொகை குறைந்தாபோகும்."

"இவர் களுக்கு பயம், அது தான் இத்தினை கோபம் வருகுது. போய் தங்கட நாட்டு எல்லையில நிற்கிறதுக்கு."

"பேசாமலிருயோகன். பிறகும் அடிவாங்கப் போறாய்."

மாலை ஐந்து மணிக்கு மேலே எல்லோரையும் போகச்சொன்னார்கள். சாந்தனை ஒரு கையிலும் சுசீலனை மறுகையிலும் பிடித்துக் கொண்டு அவர் நடந்தார். பசி உணர்வு மறைந்துவிட்டது. நெஞ்சில் இன்னமும் வலி இருந்தது.

"எவ்வளவு மரியாதை கேடு. இவங்களிட்ட அடி வாங்கிக்கொண்டு." வாய்விட்டுச் சொன்னார்.

"இவங்களிட்ட அடிவாங்காட்டித்தான் அதிசயம். விடுங்கோ அண்ணை. உதுக்கெல்லாம் கவலைப்படக்கூடாது." சிதம்பரி சொன்னார்.

இது என்ன பெரிய விடயம் என்பது போலத்தான் தொடர்ந்த நாட்களில் பல நிகழ்வுகள் நடந்தன. ஆனையிறவு தடை முகாமில் கெடுபிடிகள் இறுக்கமாயின. லொறிகளை குறிப்பிட்ட அளவில்தான் வர அனுமதித்தார்கள். இங்குள்ள சங்கங்களும் மில்களும் பாதுகாப்பற்ற சூழ்நிலையால் மிக குறைந்த அளவிலேயே கொள்வனவு செய்தன. நெல்லை விற்றுக்கொள்ள வழியில்லையே என்ற கவலையுடன் இருந்தவர்களை சுற்றிவளைப்பு, தேடுதல் நடவடிக்கை என்ற ராணுவத்தின் செய்கை மேலும் நோக வைத்தது.

கண்ணாடி சந்திரனும் இளங்கோவும் கோவில் வாசலில் வைத்து ராணுவத்திடமிருந்து மயிரிழையில் தப்பிப் போயிருந்தார்கள். ஐந்து நிமிடங்களுக்கு ஓயாத வெடிச் சத்தங்களினால் கிராமமே அதிர்ந்தது.

மறுநாள் கதிரவன் மாஸ்டரும் யோகனும்தான் விபரம் சொன்னார்கள்.

"இளங்கோவுக்கு காலில சின்ன காயம், ரத்தம் வழிய ஓடித் தப்பியிட்டான். அவங்களைத் தேடிப்போன ஆமி பின் வயலில வரம்பு செதுக்கிக்கொண்டிருந்த ரெண்டு பேரை பிடிச்சுக்கொண்டு போட்டுதாம்."

கேட்க கேட்க கவலைதான் அதிகரித்தது.

அன்று லேசான தலையிடியும் காய்ச்சல் குணமுமாக இருந்தது. அவர் எங்கும் போகாமல் சாய்வு நாற்காலியில் சரிந்து படுத்திருந்தார். வானொலியில் ஒலிபரப்பாகிய இந்திய ஆகாசவாணி மாலைச்செய்தியில் பன்றிக்கெய்தகுளம் பகுதியில் ஒரு லொறியில் வந்த எட்டு புலிகளை இந்திய ராணுவம் சுற்றி வளைத்து சுட்டுக்கொன்றது என்றும் அதில் முக்கிய புலிகளின் தளபதியும் ஒருவர் என்றும் கூறப்பட்டது. செய்தி உண்மையா? பொய்யா? என்று தெரியவில்லை. மனதுக்குள் பாரமாய் எதுவோ அழுத்தியது.

இரண்டாம் நாள் ஓவசியர் சந்தியில் விநியோகிக்கப்பட்ட துண்டுப்பிரசுரத்தை எல்லா சனமும் பேயறைந்த முகங்களுடன் பார்த்துக் கொண்டிருந்ததை கவனித்துவிட்டு அவரும் வாங்கிப்பார்த்தார். பன்றிக்கெய்த குளத்தில் வீரமரணமடைந்த நாலு பேரினது புகைப்படங்களுடன் கண்ணீர் அஞ்சலி தெரிவிக்கப்பட்டிருந்தது. மேலே முதலாவதாக மேஜர்-மாறன் என்று மாறனின் புகைப்படம், கூர்மையான கண்களும் புன்னகை முகமுமாக மாறன். அவருக்கு நெஞ்சை அடைத்துக்கொண்டு வந்தது.

(தொடரும்)

## சிறுகதை





# பல நாட்களும் ஒரு அதிகாலையும்


அமைதியால் உறைந்து கிடந்த குளக்கரையின் பகுதிகளில் எங்கும் பட்டுத்தெறிப்பதான இரைச்சலோடு அந்த உழவு இயந்திரம் குளக்கட்டில் ஏறியது. ஒரு நிறைமாதக் கன்றுத்தாச்சி மாட்டை போலவும், அப்பசு தன்கன்று ஈனும் வலியின் உச்சஓசை போலவும், பெட்டியில் நிறைந்த வழங்கல் பொருட்களோடு அது நகர்ந்தது. குளக்கட்டில் ஏறியதும் பழைய வேகமெடுத்து பறந்தது அது. அதன் வேகத்தில் சில்லிடும் காற்றுமுகத்தில் வந்தறைந்து, மக்காட்டில் அமர்ந்திருந்த காந்தனிடமும் பெட்டியில் இருந்த அருளனிடமும் வருகைக்கென விண்ணப்பித்திருந்த நித்திரையை நிராகரித்துச் சென்றன. நல்லோவியன் ஒருவன் வரையும் நேர்கோடு போல அந்த உழவு இயந்திரத்தின் சிற்கள் ஓடிக்கொண்டே இருந்தன. குளக்கட்டின் உயரத்தினையும், இயந்திரத்தின் வேகத்தையும் கண்டு முதன் முதலாய் இக் குளக்கட்டின் வழியே பயணிக்கும் ஒருவர் பயந்துதான் போவார். ஆனால் இவர்கள் மட்டும் ஒவ்வொரு நாளுமே தங்களுடைய நேரத்தை குளத்தோடு அதன் கரைகளோடும் கழித்தவர்கள் அல்லவா? எனவே அவர்கள் பயங்கொள்ளாது பயணம் செய்யும் குளக்கட்டு முடிவடைந்து காட்டினுள்ளே நுழையும் பாதை ஒன்றை குறிவைத்து உழவு இயந்திரம் நகர்ந்தது. காந்தன் தன் மணிக்கூட்டின் லைட்டை அழுத்த அது 1மணி24நிமிடம் எனக் காட்டியது. உழவு இயந்திரம் காட்டுப்பாதையால் நுழையவும், காந்தன் தன்னுடைய ரி56 - 2ரக துப்பாக்கியின் "பட்"டை நிமிர்த்தி அதை தயார் நிலைக்கு கொண்டுவந்தான். இனி காட்டுக்குள் உழவு இயந்திரத்தின் ஒளிக்கு தங்களுடைய கண்களை கொடுக்கப் போகின்ற மிருகங்களுக்காக காத்திருக்க ஆயத்தமாகும் நிலையே இது. உழவு இயந்திரத்தினை செலுத்திக்கொண்டிருந்த துமிலன் காந்தனை ஒரு முறை நிமிர்ந்து பார்த்துவிட்டு, பார்வையை நேராக்கினான். இரவில் காந்தன் மிருகம் சுடும் பாணியே அலாதியானது. மைக்ரோச் லைட் வெளிச்சத்தை முகத்திற்கு அடித்து மிருகத்தை அசையவிடாது பின்பு குறிகாட்டியை அதில் இணைத்து, ஒரு ரவையால் அதை விழுத்துவதில் அவன் வல்லவன். அது மட்டுமா? காட்டினுள் அவனோடு வேட்டைக்கு போவதற்கு வேறாக டிப்ளோமா முடிக்கவேண்டும். பிறந்த முதலே காட்டிலேயே வாழும் அந்த விலங்கே அறியாது. அதன் அருகே சென்று, சத்தமிடாது இருக்குமாறு பின்னால் வருபவர்களுக்கு சைகை காட்டுவான். பிறகென்ன பின்னால் வருபவர்கள் காவுதடியை தூக்குவதற்கு தங்களின் தோளை தயார் படுத்திக்கொள்ளவேண்டியதுதான். அவ்வாறு அவன் வேட்டையாடும் அழகை இன்று காணப் போகின்றேனே என்றுதான் துமிலன் பார்வையை காந்தனில் விழுத்தினான்.

● ● ●

பாந்த எங்கும் பற்றைகளுக்குள்ளும், மர அடிவாரங்களில் இருந்த சிறு, சிறு மிருக்ங்களின் கண்களில் உழவு இயந்திரத்தின் ஒளிபட்டு தெறிப்பதை பார்த்த காந்தனுக்கு ஒன்பதாம் ஆண்டில் படித்த Cats eyes என்ற பாடம்தான் ஞாபகத்தில் வந்தது. அன்று பிரேசிசோவ் அந்த பிரதிபலிப்பு கருவியை கண்டுபிடிக்காவிட்டால், துமிலன் இவ்வளவு வேகமாக உழவு இயந்திரத்தினை ஓட்டமுடியுமா என்ன? ஒளியள்ளிப் பாய்ச்சியபடி செல்லும் அந்த உழவு இயந்திரத்தினை வளைவுகள் நிறைந்த பாதைகளில் வேகம் குறைக்காது என்ன லாவகமாக திருப்புகிறான். புருஸ்லீ சண்டையிடும்போது அவனது நகர்வுகள் ஒளிப்பதிவு செய்யமுடியாத வேகத்துடன் இருக்குமாம். அதுபோல்தான் துமிலன் வாகனம் செலுத்துவது. எப்படி என்று பார்த்து புரிந்துகொள்ள முடியாவிட்டாலும் அதன் லாவகத்தை ரசிக்கலாம். இவ்வாறே காந்தனும் ரசித்துக்கொண்டான்.

பின் பெட்டியிலே அருளன் இருந்தான். அரிசி மூடைகளில் சாய்ந்த படியே தனக்கு மேலே மரக்கொப்புகளின் பனித்துளி விழுவதுகூட தெரியாது யோசித்த படியே இருந்தான். அவனுடைய மனதில் இந்த சண்டையில் கூட பங்குகொள்ள முடியவில்லையே என்ற கவலை நிறைந்திருந்தது. மிக அருகில் கேட்டுக்கொண்டிருந்த சத்தம் இப்போ மிகத்தொலைவிலே கேட்பதாய் ஆகிவிட்டது. நேற்றுக்கூட வீரச்சாவு அடைந்தவர்களின் பெயர்களிலே வீரப்பனும், மாயவன் அண்ணையும் அடங்கி இருந்தனர். இருவரும் இவனோடு பயிற்சி எடுத்திருந்தார்கள். வீரப்பனின் பெயருக்கே பொருந்தாத சிறிய தோற்றமும், மாயவன் அண் ணையின் பெயரைப்போன்ற மாயவேலைகளும்தான் எத்தனை. எல்லா நினைவுகளும் சங்கிலித்தொடராய் நினைவில் வந்தன. அவர்களோடு சேர்ந்து பயிற்சி எடுத்த நாட்கள் மட்டும் பசுமையான நினைவுகளாய் இருக்க, அவர்கள் மட்டும் இல்லை என்பதை மட்டும் அவனால் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்?

இந்த கேள்வியை எழுப்பும் அவனது மனதோ இதற்கான விடை களத்திலேயே இருப்பதாக கூறிக்கொண்டாலும், இப்போது அவர்கள் கொண்டு செல்லும் உணவுப்பொருட்களுக்காக, கஞ்சிகுடித்து "அந்த" பணியை செய்து கொண்டிருக்கும் அவர்கள் மனதில் வரவே, அவர்கள் செய்யப் போகும் பணியும் நினைவில் வந்தது. எனவே அவர்களுக்காகவென்றாலும் இவ்வுணவு கொண்டு செல்லும் பணியையே செய்யவேண்டும் என விரும்பினான். மூவரும், இரைச்சலோடு நகரும் இயந்திரத்தில் மௌனத்தோடு, இருந்து கொண்டு பல்வேறு எண்ணங்களை ஓடவிட்டாலும்,



பசி இப்போது அவர்களின் வயிற்றுக்குள் வேதனையை உண்டு பண்ணியது. இத்தோடு, இன்று மட்டும் நான்காவது தடவையாக இந்த பசிவலி கிளம்புகின்றது. வலி கிளம்பும் போதெல்லாம் கண்களை இறுகமூடி பற்களை நெருமி, பின் தண்ணீர் கிடைத்தால் அதைக்குடித்தால் மெல்ல அடங்கும். இந்தவலி பிறகு குறிப்பிட்ட நேர இடைவெளியில் மீண்டும் வரும்.

காந்தனுக்கு இம்முறை விரைவாகவே உணவுப்பொருள் பெற்றிருப்பது மகிழ்ச்சியாக இருந்தது. வியர்வையும், உப்பு நீரும், செங்குருதியும் சேர்ந்த தான அவ்வுணவுப்பொருள் அவர்களின் உறுதியை மட்டுமல்ல உணர்வையும் தானே வளர்த்து நின்றது.

● ● ●

இன்றோடு நான்கு நாளாகிறது இந்த உணவு தேடலுக்கு புறப்பட்டு, உணவு காத்திருந்த வேளைகளில் கிடைத்த செய்திகள் உணவைப் பற்றிய நம்பிக்கையை இழக்கவைத்தது. கடைசியாக அவர்கள் தங்கள் முகாமுக்கு தொடர்பெடுத்தபோது அங்கும் அன்று காலையுடன் எல்லா உணவுப் பொருட்களுமே முடிவதாக சொன்னார்கள். ஆனால் வழமைக்கு மாறாக அன்று மாலையே உணவுப் பொருட்கள் வந்து சேர்ந்தன.

உழவு இயந்திரம் முகாமை நெருங்கிக்கொண்டிருந்தது. சென்றியில் நிற்பவர்கள் தவிர, மிகுதி அனைவரும் நித்திரையில் ஆழ்ந்திருப்பார்கள். உழவு இயந்திரத்தை முகாமினுள் செலுத்தி,நிறுத்திய வேகத்தில் சமையல்கூடத்தை நோக்கி ஓடினார்கள். பெரிய கிடாரங்களையும், டாசர்களையும் மீண்டும், மீண்டும் பார்த்தாலும் கூட சுத்தமாக கழுவி வைக்கப்பட்டது போல் ஒரு

**தே. நிலவன்**

சோற்று பருக்கை கூட இல்லாது இருந்தது. மூவருமாக குடிநீரால் நிரப்பப்பட்டிருந்த லொக்ரியூப்பை நோக்கி நடந்தனர். அப்போது ரோச் வெளிச்சம் ஒன்று அவர்களை நோக்கி வருவது தெரிந்தது "என்ன அண்ணையாக்கள் சாப்பாடு முடிஞ்சுதுபோல" என கேட்டுக்கொண்டே வந்தான் செல்வன். அவன் இந்த முகாமின் பொறுப்பாளன். மிக இளையவன். இளையவன் என்று அவனது பணியில் குறைகண்டுபிடிக்க முடியாது. அவன் பணிசெய்யும் நேர்த்தி அசத்தும்படி இருக்கும். காந்தனுக்கு அவன் இயக்கத்தில் இணையும்போதே அவனைத் தெரியும். முதலாம் அணியின் தலைவனாக இருந்தாலும் பேய் என்றால் பயப்பிடும்படியாக இருந்தவன், இப்போது எந்த நட்டநடுராத்திரியிலும் சுற்று சென்றி பார்ப்பவனாக மாறி விட்டான். அவன் நித்திரையில் இருக்கும்போது தலைமாட்டில் இருக்கும் ரோச்சை எடுத்தாலே திக்குற்று விழிப்பான். இந்த இரைச்சலுடன் வந்த உழவு இயந்திரத்தினால் விழித்திருக்க மாட்டனா என்ன?

"அண்ணை நீங்கள் வருவீங்கள் என்று தெரிஞ்சுதான் கொஞ்சசோறு எடுத்துவைச்சிருக்கின்றன், கொஞ்ச எண்ணெயும் முட்டையும் கிடக்கு, பொரிச்சுத் தாறன், சாப்பிடுங்கோ" என்று சொல்லியவாறே கையில் எண்ணெய் போத்தலோடு நின்றவனைப் பார்க்க, இவர்களுக்கு கண்கள் பனித்தன. இன்று காலையுடன் இங்கு உணவு முடிந்திருந்தும் கூட தங்களுக்காக எங்கோ கிடைத்த எண்ணெய்யையும், அதுவும் ஒரு சோமாலிய குழந்தையின் வயிறுபோல போத்தலின் அடியோடு ஒட்டிக்கிடக்கும் சிறிதளவு எண்ணெய்யையும், சில முட்டைகளையும் பத்திரப்படுத்தி, இவர்களுக்காக காத்திருந்து, நட்டநடுராத்திரியில் அதை உணவாக்கி தருகின்றேன் என்று நிற்பவனை பார்த்து கண்கள் பனிக்கமால் இருந்துவிடுமா?

● ● ●

அது மழைக்காலம், என்பதினால் அன்று அவர்களின் முட்டை பொரிப்பதில் எதிரியாய் இருந்தது சக்கரப்பாண்டியன் மட்டுமே. முட்டைபொரிப்பதற்காக அடுப்பில் தாச்சிவைத்த சில நிமிடத்தில் இருந்து அதனுள் சக்கரபாண்டியன் விழுவதாய் இருக்கிறது. ஒரு மேற்கத்தைய சமையல்காரன் பாணியில் செல்வன்தான் முட்டைப்பொரியலை செய்து கொண்டிருந்தான். சக்கரப்பாண்டியன் உள்ளே நுழையாது இருப்பதற்காக தட்டு ஒன்றினால், தாச்சி மூடப்பட்டிருந்தது. எண்ணெயில் வதங்கி காற்றில் மிதக்கும் வாசம் அவர்களின் இரைப்பையை நிறைக்க முயற்சித்தது. நான்கு நாட்களுக்கு பின் தாங்கள் சாப்பிடப்போகும் சாப்பாட்டை நினைத்து நாவூறிக்கொண்டனர் மூவரும். முட்டை பொரித்து முடிந்ததும் சோறும், முட்டையும் ஒரு பெரிய தட்டிலே இடப்பட்டது. அந்த தட்டிற்கு அவர்கள் வைத்திருக்கும் பெயர் "பறக்கும் தட்டு" ஒரே நேரத்தில் நான்கு பெயர் அமர்ந்து சாப்பிடக்கூடிய டாசர் ஒன்றின் மூடி அது. அதை சுற்றி நால்வரும் அமரவும் நட்சத்திரங்கள் எதுவும் காணப்படாத வானத்தில் இருந்து மழைத்துளிகள் விழவும் தொடங்கின. தாங்கள் உழவு இயந்திரத்தில் கொண்டுவந்த உணவுப் பொருட்கள் நனையப்போகிறது, என்ற நினைப்பு வந்தவர்களாய் மூவரும் எழுந்து உழவு இயந்திரத்தை நோக்கி நனைந்தபடியே ஓட, கிழக்கே விடிந்துகொண்டிருந்தது.

ஒரு நாட்டின் தலைவர்கள் எப்படியோ, அப்படியே அந்நாடும் இருக்கும். - ஸ்ஸரோ

# வாழ்வு ஊற்றெடுக்கும் ஆழத்தை ஆராயவேண்டும்

## இளங்கவிஞனுக்கு ஒருகடிதம்.

நான் இயற்றிய செய்யுட்கள் நன்றா? என என்னைக் கேட்கின்றீர்? முன்பு மற்றவர்களை கேட்டீர். உமது படைப்புக்களைக் சஞ்சிகைகளுக்கு அனுப்புகின்றீர். வேறு கவிதைகளுடன் அவற்றை ஒப்பிட்டு, உமது முயற்சிகளைச் சில பத்திராதிபர்கள் ஏற்கமறுக்கும்போது கலங்குகின்றீர். உமக்கு ஆலோசனை கூற என்னை அனுமதித்திருப்பதால் இவையாவற்றையும் கைவிடும்படி உம்மை வேண்டுகிறேன். நீர் வெளிப்புறமாக நோக்குகின்றீர். எல்லாவற்றிலும் அதையே நீர் இப்பொழுது செய்யலாகாது. எவருமே உமக்கு ஆலோசனை கூறி உதவி புரிய முடியாது. ஒரே ஒரு வழிதான் உண்டு. உமது அகத்துக்குள்ளே செல்லும். உம்மை எழுதும்படி ஆணையிடும் உட்கோளைக் கண்டுணரும். உமது உள்ளத்தின் மிக ஆழமான மறைவிடங்களிளெல்லாம் அதுவேர் பாய்ச்சியிருக்கின்றதா எனக் கூர்ந்தாராயும். எழுதுதல் உமக்கு மறுக்கப்பட்டால் நீர் இறந்துவிடுவீரா என்பதை உமக்குள் தெளியும். எல்லாவற்றிற்கும் மேலாக இரவின் மோனத்திலே, ‘நான் எழுதவே வேண்டுமா?” என உம்மையே வினவும். ஆழ்ந்த விடையைப்பெற உமது அகத்தினுள் அகழ்ந்து செல்லும். ‘ஆம்’ என விடை அமைந்தால், பயபக்தி தோற்றுவிக்க வல்ல இவ்வினாவிற்கு ‘நான் எழுதியே ஆகவேண்டும் என திடமாகவும், ஐயத்துக்கிடமின்றியும் விடை தரமுடியுமென்றால், இவ்இன்றிய மையாமைக்கு ஏற்ப உமது வாழ்வை அமையும். இத்தூண்டுதலின் சின்னமாகவும் சான்றாகவும் - முக்கியத்துவமும் சிறப்புமற்ற நேரங்களிற்கூட - உமது வாழ்வு அமைதல் வேண்டும். இயற்கைக்குக் கிட்டச் செல்லும். முதற்றோன்றிய மனிதர்களில் ஒருவராக நினைத்து நீர் காண்பதையும், அனுபவிப்பதையும், அன்பு செலுத்துவதையும், இழப்பதையும் எடுத்தியம்புவதற்கு முயலும். காதல் கவிதைகளை புனையாதீர். தொடக்கத்திலே நன்கு தெரிந்தவழக்கமான உருவங்களைத் தவிர்த்துக்கொள்ளும். அவைதான் மிகக் கடினமானவை. ஏனெனில் நல்ல, சிறிதளவில் திறம் வாய்ந்த, மரபுகள் ஏராளமாக நிலவுகையில் தனித்துவம் வாய்ந்த பங்களிப்பிற்கு நன்கு முதிர்ந்த பேராற்றல் தேவை. ஆகையினால் வழக்கமான கவிப் பொருள்களை விட்டு உமது அன்றாட வாழ்க்கை அளிக்கும் பொருள்களை நாடும். உமது துயரங்களையும், ஆசைகளையும், விரைந்தோடும் உமது சிந்தனைகளையும் ஏதோ வகை அழகிலுள்ள உமது நம்பிக்கையையும் தீட்டிக் காட்டும். இவையாவற்றையும் மனமார்ந்த, அமைதியான, அடக்கமான வாய்மையோடு வரையும். உம்மை சூழ்ந்திருக்கும் பொருள்களையும், உமது கனவுகளில் தோன்றும் உருவங்களையும், உமது நினைவாற்றல் நாடும் பொருள்களையும் கையாண்டு உம்மை வெளிப்படுத்தும். உமது அன்றாட வாழ்க்கை வளமற்றதாய்க் காட்சியளிப்பின், அதனைப் பழி கூறாதீர். உம் மீதே குற்றத்தைச் சுமத்தும். அதன் செல்வவளத்தை வரவழைப்பதற்கு வேண்டிய கவியாற்றல் உம்மிடமில்லை என உமக்குச் சொல்லிக்கொள்ளும். ஏனெனில் படைப்பாளிக்கு வளமின்மையுமில்லை, முக்கியமற்ற இடமும் இல்லை. உலகத்தின் ஒலிகள் எதுவும் உமது புலன்களுக்கு எட்டாதபடி தடுக்கும் சுவர்களுள்ள ஓர் சிறைச்சாலையில் நீர் இருப்பினும் உமது குழந்தைப் பருவம் - அந்த உயர்ந்த, அருமந்த செல்வவளம், நினைவுகளின் களஞ்சியம் - உம் வசம் எப்பொழுதும் இருக்குந்தானே? உமது கவனத்தை அங்கு திருப்பும். அத்தொலைவான இறந்தகாலத்திற்குரிய அமிழ்ந்த உணர்வுகளை கிளர்ந்தெழச்செய்யும். உமது ஆளுமை மேலும் வலிமைவாய்ந்ததாகும். உமது தனிமை நீண்டு, மற்றவர்கள் எழுப்பும் இரைச்சல் தொலைவிலே தாண்டிச்செல்லும் மங்கலொளி நிறைந்த ஓர் வீடாக மாறும். இவ்வாறு உள்ளே செல்வதால், உமது தனிப்பட்ட அக உலகிற்குள் ஆழ்ந்து உட்செல்வதால், செய்யுட்கள் தோன்றின்,அவை நல்லவையா என யாரையும் கேட்க நீர் எண்ணமாட்டீர். இப் படைப்புகளிலே சஞ்சிகைகள் அக்கறை கொள்ளச் செய்ய முயலவும் மாட்டீர். ஏனெனில் இவையை உமது சொந்த, அருமையான, மெய்யான உடைமையாக, உமது வாழ்க்கையின் ஓர் பகுதியாகவும், குரலாகவும் காண்பீர். இன்றியமையாமையில் இருந்து ஓர் கலைப்படைப்பு தோன்றின் அது நல்லது. இவ்வாறான அதன் தோற்றுவாயிலேயே அதன் உண்மையான பெறுமதி தங்கியுள்ளது. வேறு பெறுமதியில்லை. எனவே அன்பரே, நான் உமக்கு நல்கக்கூடிய ஆலோசனை இதுவே. உமது அகத்தினுள் புகுந்து உமது வாழ்வு ஊற்றெடுக்கும் ஆழத்தை துருவி ஆராயும். நீர் படைத்தேயாகவேண்டுமா என்ற வினாவிற்கு அந்தத் தோற்றுவாயில் உமக்கு விடைகிடைக்கும். ஒவ்வொரு சொல்லாக துருவி ஆராயாது, அது தொனிப்பது போன்றே அவ்விடையை ஏற்றுக்கொள்ளும். நீர் ஓர் கலைஞனாக வாழ்வதற்கு அழைக்கப்பட்டிருக்கலாம். அப்படியாயின் உம் தலை விதியை ஏற்று அதன் சுமையையும் மேன்மையையும் தாங்கும். வெளியேயிருந்து வரக் கூடிய வெகுமதிகளை எப்பொழுதேனும் நாடாதீர். ஏனெனில் படைப்பாளிதானே தனக்கு உலகாய் இருத்தல் வேண்டும். எல்லாவற்றையும் தன்னுள்ளும் தான் பற்றிக்கொண்டுள்ள இயற்கையிலும் படைப்பாளி காண விழையவேண்டும்.



உமது அகத்தினுள்ளும் தனிமையினுள்ளும் நீர் இவ்வாறு இறங்கிச் சென்றதன் பின் நீர் கவிஞனாகும் எண்ணத்தை துறக்க வேண்டிய சில சமயம் நேரிடலாம். நான் கூறியிருப்பதுபோல, எழுதாமல் வாழ முடியுமென உணர்ந்தாலே எழுத முனையாதிருப்பதற்குப் போதும். ஆயினும் நான் உம்மிடம்வேண்டும் அகச் சிந்தனை நாட்டம் வீணாகப்போகாது. எப்படியாயிருந்தாலும் உமது வாழ்க்கை அக்காலம் முதற்கொண்டு தனது தனித்துவ மார்க்கங்களை நாட முற்படும். அவை சிறப்பாயும், வளம் மிக்கவையாயும்,பரந்து விரிந்தவையாயும் அமையவேண்டுமென நான் - சொல்லில் வடிக்கக்கூடியதற்கு மேலாக - விரும்புகிறேன்.

மேலும் உமக்கு நான் என்ன கூற? ஒவ்வொன்றிற்கும் அதற்குரிய அழுத்தம் உள்ளதாக எனக்குத் தோன்றுகிறது. அமைதியாகவும் கருத்தாழமுடையதாகவும் உமது வளர்ச்சி அமையவேண்டுமென நான் உமக்கு இறுதியாக ஆலோசனை கூற விரும்புகிறேன். வெளிப்புறமாக நோக்குவதும், உமது உள்ளார்ந்த உணர்ச்சியே மோனம் நிறைந்த நேரத்தில் விடை பகரவல்ல வினாக்களுக்கு வெளியே விடைகளை நாடுவதும் இவ்வளர்ச்சியை மிகவன்மையாக ஊறுபடுத்தும்.

*மூலம் ஜெர்மன் கவி (1875-1926)ரைனர் மாரியா ரில்கே.*

## கலையாத கனவு

நாம் பொறுத்திருந்தோம்
நீண்ட நெடு நாட்களாய்
நிலவு சுமந்த வானம்
இப்போது வெறுமையாகவே கிடக்கிறது.
யாருக்கும் தெரியாத
மௌனப் புலம்பல்
எனக்குள் மட்டும் அசரீதியாய்...
ஆனாலும் காத்திருக்கின்றேன்
எனக்குள் அந்தக் கனவு
கலையாமல் அப்படியே.....

வேழினி

## இடைவெளிகள்?

மௌன இரவுகளும்
மழைக்கால மூட்டங்களும்
தூறலுக்கு ஒதுங்கிய என்னை
நன்றாகவே நனைத்து விட்டன
என்னைப் பார்க்கிறேன்.
நான் நனைய வில்லை!

மின்னலொன்று முன்னைய
பிரளயத்தை வெளிச்சமாக்கியது.
ஆனாலும் அது என்னை
கருமை நிறமாக்கி விட்டிருந்தது

இப்போது தூவானம் தேவைப்பட்டது.
வெளியே வருகின்றேன்...
என்னைக் கருமையாக்கியது,
என்னால் கருமையாக்கப்பட்டிருந்தது.
காரணம் எனக்குத் தெரியவில்லை
கண்களில் வினாவுடன் நோக்குகின்றேன்
கேள்விக் குறிகள் தெரிந்தன!
சிந்தித்தேன்........


நான் ஒர்-------- என்பவன்
ஆனதனாலேயோ,

-சலங்கையன்-

## “முட்கள் முளைத்த மனங்கள்”

வீட்டுக்கு வராத உன்னோடு
தெருக்களில் கண்டு புன்னகைப்பதில்
என் மனசிற்கு விருப்பமில்லை
முப்பத்தியிரண்டு பற்களும்
தெரியச் சிரிப்பதில்
என்ன இருக்கிறது.
உனதுண்மையான உள்ளம்
வெளித்தெரியவில்லையே!
மயில்களும் குயில்களும்,
உனது “பொக்கெற்” ரை
நிறைத்திருக்கின்ற சுதியிலும்
அதிக்குதிக் கொட்டும் மிதப்பிலும்
உனது மண்டை வீங்கியிருக்கிறது.
உனது நெஞ்சு பெருத்திருக்கிறது.
உனது நாக்கு
நாகதாழியை ஒத்திருக்கிறது
பூக்களிற்கும் முட்களுண்டுதான்
அதனிதழ்களின் மென்மையில்
குற்றிய வலியும்
சுகமாகிப் போகிறது
ஒரு நேரம்
உணவு கொடாமல் விட்டாலுங்கூட
பிறத்தியாராரும் வந்தால்
வளர்ப்பு நாய் குரைக்காமல் விடுவதில்லை
மிக்க நன்றியுடையது நாய்.
மலர்களோடுரையாடவும்
பிராணிகளின் மீது
அன்பு செலுத்தவுமே
அலாதியாய்ப் பிரியப்படுகிறது
என் மனசு.

ஆவரங்கால் சுதன்





## குப்பைத் தொட்டி

அலுவலகத்தில்
இருக்கிறவனுக்கு
இது-
குப்பைத் தொட்டி.
குப்பை பொறுக்கி
வாழ்கிறவனுக்கு
இது-
அலுவலகம்.

## இலக்கியம்

களத்தில்
நிற்கிறேன்...

என்
இலக்கியத்தில்
அழகில்லை
என்கிறாய்.

தோரணம்
கட்டும்
தொழிலோ
எனக்கு?

வாளில்
அழகு தேடாதே
கூர்மை பார்.



# குழந்தைநாதம்

## கெட்டிக்காரச் சிறுவர்கள்



# தனக்கு வந்தால்தான் தெரியும்

தீபனும் குமாரும் நண்பர்கள். அவர்கள் இருவரும் ஒன்றாகவே திரிவார்கள். தீபன் கல்வியில் சிறந்து விளங்கினான். மற்றவர்களிடம் அன்பாகவும், பண்பாகவும் நடந்துகொள்வான். இதனால் அவனை எல்லோரும் பாராட்டினர். அவன் விளையாட்டிலும் கெட்டிக் காரன். பல போட்டிகளில் கலந்துகொண்டு பல பரிசில்களையும், பாராட்டுக்களையும் தட்டிக் கொண்டவன்.

குமார் தீப னுக்கு நேர்மாறானவன். எதிலும் அக்கறை அற்றவன். படிப்பதில் அவனுக்கு விருப்பமே இல்லை. விளையாட்டிலும் அவனால் எதையும் சாதிக்க முடியவில்லை. ஆனால் குறிபார்த்து இலக்கை விழுத்துவதில் வல்லவனாக இருந்தான்.

அவனுடைய கையில் எப்போதும் ஒரு கவன் இருக்கும். மரத்தில் தாவி விளையாடும் அணிலை தப்பாது அடித்து விழுத்துவான். அதை எடுத்துச்சென்று அதன் வயிற்றைக் கிழித்து உப்பு, வெங்காயம்,மிளகாய் போன்றவற்றை போட்டுத் தைத்து நெருப்பில் வாட்டி எடுத்து சுவைத்துச் சுவைத்து உண்பான்.

பனை மரத்தில் வந்து இருக்கும் கிளிகளுக்கும் இலக்குவைத்து விழுத்துவான். அவற்றையும் சுட்டுச் சாப்பிடுவான். தீபனுக்கும் பங்குகொடுப்பான். ஆனால் அவன் அதை உண்ண மறுத்துவிடுவான்.

அணில் மீதும் கிளி மீதும் விருப்பம் அதிகம் - அதுபோல்தான் ஏனைய பிராணிகள் மீதும் அன்பு வைத்திருந்தான்.

குமாரின் செயல்கள் அவனுக்குப் பிடிப்பதில்லை. ஆனாலும் அவன் நண்பன் என்பதால் பொறுத்துக்கொள்வான். குமாரை எப்படியாவது திருத்தி படிக்கவைக்கவேண்டும் என்பதில் தீபன் குறியாய் இருந்தான்.

"டேய் குமார் பாவமடா, அந்த அணில் சிறு பிராணி. அதுவும் வாழத்தானே விரும்புது. நீ இனி அதைக்கொல்லாதே" என்று கெஞ்சுவான்.

"போடா பேயா அந்த இறைச்சியைத் திண்டு பார்த்தால்தான் உனக்கு ருசி தெரியும். உனக்கு பிடியாட்டில் என்னோட வராத! என்பான்."

அணில் வேட்டையில் கைதேர்ந்த குமாருக்கு தீபனின் அறிவுரைகள் எதுவும் காதில் ஏறவில்லை. அவன் தொடர்ந்தும்அதையே செய்வான்.

குமாரை எப்படித்திருத்துவது? எப்படிப் படிக்கவைப்பது? என்று சிந்தித்தான். சதா நேரமும் அதற்கான வழியை ஆராய்ந்தான்.

குமாருக்கு அறிவு சொல்வதால் ஏதும் ஆகப்போவதில்லை என்பதை தீபன் புரிந்துகொண்டான். அவனுக்கு அந்த வழியிலேயே பாடம் புகட்ட எண்ணினான். ஒரு நாள் குமாருக்குத் தெரியாமலேயே அவனுடைய கவனை எடுத்து தோல் பக்கத்துக்கு அருகிலேயே அடையாளம் தெரியாமல் வெட்டிவிட்டான்.

அன்றும் வழமைபோல குமார் கவனை எடுத்துக்கொண்டு புறப்பட்டான். தீபனும் அவன் கூடவே சென்றான். குமார் தனது குறி தவறாத இலக்கைப் பற்றிச் சொல்லிக்கொண்டடே போனான்.

திடீர் என மரத்தில் பாய்ந்த அணிலைக் கண்ட குமார் சற்று நிதானமாக நின்று மடியில் கட்டி வைத்திருந்த குறுனிக் கல்லொன்றை எடுத்து கவனில் வைத்து, இலக்கை அணைத்து நாடாவை விசையுடன் இழுத்தான். அவன் இழுத்த விசையில் நாடா அறுந்து போகவே தோலில் இருந்த கல் இலக்கை நோக்கிச் செல்லாமல் அவனது நெற்றிப்பொட் டில் அடித்தது.

எதிர்பாராத இந்தத் தாக்கத்தால் நிலை குலைந்துபோன குமார் "அம்மா" என்று கல்லடிபட்ட இடத்தை கைகளால் பொத்தியபடி நிலத்தில் இருந்தான்.

அவனுக்கு விண் விண் என்று வலித்தது. அவனால் எழுந்து நிமிர முடியாமல் வேதனையைக் கொடுத்தது. நெற்றியில் இருந்து இரத்தம் பிசு பிசுத்தது. அவன் பயந்துபோனான். அப்படியே மரத்தோடு சாய்ந்து இருந்துகொண்டு முனகினான்.

தீபனுக்கு பார்க்கச் சகிக்க வில்லை. பக்கத்தில் இருந்த கிணற்றடிக்கு ஓடிப்போய் தண்ணீரை அள்ளி தனது கைக்குட்டையை நனைத்துக்கொண்டு வந்து அவனது காயம்பட்ட இடத்தைத் துடைத்து ஒத்தடம் கொடுத்தான்

குமாருக்கு சுகமாக இருந்தது. இரத்தக் கசிவு நின்றது. ஆனாலும் வலியின் வேதனை குறையவில்லை.

"பாத்தியாகுமார், உனக்கு ஒரு காயம் பட்ட உடன எப்படித் துடிக்கிறாய் அப்படித்தானே அந்த அணிலும் கிளியும் துடிக்கும்" என்றான்.

"தீபன்...தீபன்"

தீபனின் கைகளைப் பற்றிக்கொண்டு எழுந்து தீபனுக்குப் பரிதாபமும் சிரிப்பும் வந்தது.

"இனியும் உந்த வேலை செய்வியோ"?

"வேண்டாம்....வேண்டாம். இனி உந்த வேல வேண்டாம். நான் முடிவு எடுத்திட்டன். இனி இந்தக் கவன் எனக்கு வேண்டாம்!

குமார் கவனை வீசி எறிந்தான்.

நிலத்தில் விழுந்த கவன் ஏக்கத்துடன் அவனைப் பார்த்துக்கொண்டு கிடந்தது.

"பட்டால் தானே தெரிகிறது
தொட்டல் சுடுவது நெருப்பென்று"

என்ற பாடல் அடிகளை பாடிக்கொண்டே குமாரைக் கூட்டிக்கொண்டு வீட்டிற்குச் சென்றான்.

**முருகு.பாரிமகன்**

## வாரம் ஒரு குறள்



நம்மிடையே நட்பு கொள்ளாமல் இருப்பவர்கள் இருக்க முடியாது. ஆனால் எத்தனை பேருடைய நட்பு ஆபத்தில் உதவிட ஓடி வரும் என்று கணக்கெடுத்தால்.. விடைபூச்சியமாககூட இருக்கலாம்.

ஏனெனில் நாம் அனைவருமே சிரிப்பவர்கள். எல்லோரும் நண்பர்கள் என்றுதான் எண்ணிவிடுவது இயல்பு.

உண்மையில் நட்பென்பது இருவரிடையே குணம்.மனம்.செய்கை. என்பவற்றால் ஒன்றுபட்டதாக இருக்க வேண்டும். அதனால்தான் ஆராய்ந்தறிந்த பின்னரே நட்பு கொள்வது நல்லது என்றும். அப்படி ஆராயாது கொள்ளும் நட்பானது வாழும் காலம் வரைதுன்பத்தையே தரும் என்பதை

*"நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு"*

என்று வள்ளுவப்பெருந்தகை அழகாகக் கூறியுள்ளார்.

## சொற்சிலம்பம் - 13

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| சி | ப | த | ம் | சி | டு | ட் |
| வ | சோ | ர் | தி | டு | இ | ம |
| ம் | சை | தோ | ங் | த் | த | ங் |
| மை | க | ய | த | சை | நு | டி |
| அ | ா | டி | தா | மி | ம் | க |
| வ | ய | ம் | ப் | ன் | லி | ளி |
| ம் | வி | ப | ழ | ர | ப் | ந |

கட்டங்களில் காணப் படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

### சொற்சிலம்பம் - 11 இன் விடைகள்

01. கிளி.
02. மைனா.

01. ஆடு.
02. நாய்.
03. பூனை.

### சொற்சிலம்பம் - 11 இன் பரிசுக்குரியவர்

ஜீ.ஜெசிந்தன்,தரம் - 03C
மு/றோ.க.த.க. பாடசாலை,
முல்லைத்தீவு.

### சொற்சிலம்பம் - 11 இன் பாராட்டுக்குரியவர்கள்

01.ஞா.சிந்துசன்,
தரம் -06,
மு/குமுழமுனை ம.வி.

02. த.பரமேஸ்வரி,
தரம் - 09,
மாங்குளம் ம.வி

03. எஸ்.சுஜன்,
தரம் - 10,
மானிப்பாய்.

04. கு. நந்தகோபன்,
தரம் - 09,
பொன்னாவெளி,
வேரவில்.

05. தி.சக்திபரன்,
மகாறம்பைக்குளம்,
வவுனியா.

06. ம.டர்சிகா,
தரம் - 03,
மு/முள்ளியவளை த .வி

01. மூன்று வகையான உணவுகள்?
01) ..........................................
02) ..........................................
03) ..........................................

02. வாத்தியக் கருவிகள் இரண்டு?
01) ..........................................
02) ..........................................
பெயர் :- ..........................................
முகவரி :-..........................................
..........................................

*சொற்சிலம்பம் -13*
*ஈழநாதம்,*
*யாழ் சாலை,*
*கிளிநொச்சி.*




வல்லமை அனைத்தும் உன்னகத்தே உள்ளது: அதையும் அனைத்தையும் உன்னால் செய்யமுடியும் - சுவாமி விவேகானந்தர்



**மாங்குளம் இராணுவ முகாம் மீது கரும்புலித் தாக்குதலை மேற்கொண்டு வீரச்சாவினைத் தழுவிக்கொண்ட கரும்புலி லெப்.கேணல் போர்க்கின் உருவச் சிலையினை திரைநீக்கம் செய்து வைத்து, 23.11.2003 அன்று மாங்குளத்தில் மூத்த தளபதி கேணல் பால்ராஜ் அவர்கள் ஆற்றிய உரையின் சென்ற வாரத்தொடர்ச்சியைஇங்கு தருகிறோம்.**

# எதிரிக்கு மிகவும் சாதகமான இடத்தில் மாங்குளம் இராணுவமுகாம் இருந்தது

## கேணல் பால்ராஜ்

இந்தச் சண்டையில் கண்டிப்பாய் நீங்கள் வெற்றி எடுத்தே தீர வேண்டும் என்ற இறுக்கமான கட்டளையை எனக்கும் சொர்ணத்துக்கும் தரப்பட்டிருந்தது. அதனடிப்படையில் தலைவர் அவர்கள் எங்களுக்கு கூறிக் கொண்டே இருப்பது போன்ற ஒரு உணர்வு எமக்குள். இந்த நேரத்தில் விநியோகம் எதனையும் நாங்கள் செய்யமுடியாதிருந்த நேரம். எமது பக்கத்தில் காயப்பட்டவர்கள் அதிகம் என அறிவிக்கிறார்கள். அப்போது கத்தோலிக்க மடம் இறுக்கமான சண்டையை சந்தித்துக்கொண்டிருந்தது.

அந்த வேளை கத்தோலிக்க மடத்தில் ஒரு போராளியைத் தவிர மற்ற எல்லோரும் வீரச்சாவு. ஒரு இளம போராளி தளபதி திலீப்பின் உயிரற்ற உடலின் கீழ் கிடந்து வோக்கியில் மெதுவாக அறிவிக்கின்றான்.

எல்லாம் வளைத்து இராணுவம் நிற்குது. முழுப்பேரும் வீரச்சாவடைந்து விட்டார்கள். நான் மட்டும் உள்ளுக்கிருந்து இரகசியமாக கதைக்கிறேன் என்ன செய்வதென்று. அதற்கு நான் சொன்னேன். நீ அப்படியே தொடர்பை சரியாக வைத்துக்கொள். உன்ர இடத்துக்கு அணி எப்படியாவது வந்து சேரும் என்று நான் கூறினேன்.

எப்போதும் நான் இறுக்கமான சண்டைகளில் இறக்குவதற்காக மூன்று தளபதிகளை மிச்சம் பிடித்து வைத்திருப்பதுண்டு. அதில் தளபதி நவனீதன் ஒரு கொமாண்டர், அடுத்தது தளபதி பிரபா ஒருகொமாண்டர், அடுத்தது தளபதி போர்க் ஒரு கொமாண்டர்.

போர்க் என்னுடைய தலை சிறந்த ஒரு கொமாண்டர். போர்க்கை நான் எப்போதும் இறுக்கமான சண்டைகளில் மாத்திரம் இறங்குவதற்காக அவரை முன்னுக்கு இறக்குவதில்லை. இந்த மூன்று கொமாண்டர் மாரையும் நான் பின்னுக்கு வைத்திருப்பது இறுக்கமான வாழ்வா? சாவா? என்ற சண்டை வாற இடத்துக்கு அவர்களை இறக்கி வெல்லவைப்பேன்.

அந்த சிறு வீரனுக்கு நான் கூறினேன். இந்தா பிரபா வாறான் பிரபா வந்து சேருமட்டும் நீ அங்க தொடர் வோட இரு. நீ தொடர்போடு இருக்காட்டி உங்க என்ன நடக்குதெண்டு எங்களுக்குத் தெரியாது.

பிரபா களத்தில் இறங்கி சரியாக அரைமணித்தியாலம் சண்டை கடுமையாக நடந்தது. எதிரிகளை வென்று அந்த போர் வீரனை பிரபா சந்தித்தான். உடனடியாக எனக்கு அறிவித்தான். அந்த போர் வீரனைச் சந்தித்தேன். முழுப்பேரும் வீரச்சாவடைந்து விட்டார்கள்.கத்தோலிக்க மடத்தின் நடுப்பகுதியை பிடித்துவிட்டோம் என்று எனக்கு அறிவித்தான்.

குறிப்பிட்ட நேரத்தின் பின்னர் கத்தோலிக்கமடத்தின் முழுப் பகுதியையும் பிடித்துவிட்டேன் என்று பிரபா எனக்கு அறிவித்தான். அதற்குப்பின் பிரபா என்னுடன் தொடர்பு கொள்ளவில்லை. எனக்கு பெரும் சிக்கலாக இருந்தது. பிரபாவின் தொடர்பை காணவில்லை.பிரபாவை வைத்துத்தான் நான் அடுத்த பக்கத்தால தள்ளி கெலி இறங்கு தளததை பிடிக்கிறதுக்கும் திட்டமிட்டுக் கொண்டிருந்தேன்.

இந்தவேளை பிரபாவுக்கு மையின்ஸ் வெடிக்கிறது. சீரியசான காயம். பிரபா தவண்டு வந்து ஏ.கேயை றோட்டில் எறிந்துவிட்டு வோக்கியையும் றோட்டில் எறிந்துவிட்டு சீரியசான காயத்துடன் குப்பியைக் கடித்து அந்த புல்லுக்குள்ளேயே மடிகிறான். அப்பொழுது நான் பிரபாவைத்தேட விட்டேன்,பிரபா இல்லை. அப்போது எனக்கு அறிவிக்கிறார்கள் பிரபாவை ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிட்டோம் என்று. அப்போது நான் கேட்டேன் பிரபாவை நீங்கள் ஆஸ்பத்திரிக்கு அனுப்பும்போது சுயநினைவிருந்ததா? இல்லையா? என்று. அதற்குச் சொன்னார்கள் சுய நினைவிருந்தது, கதைத்தவர் என்றார்கள். நான் நம்பவில்லை. எனக்குத் தெரியும் பிரபா எப்படியான வீரன், எப்படியான கொமாண்டர் என்பது. அவன் சுயஅறிவு கொஞ்சம் இருந்தால் கூட உண்மை நிலையை எனக்குச் சொல்லாமல் களத்தி லிருந்து விலகமாட்டான். அந்த இறுக்கமான நம்பிக்கை எனக்குள் இருந்தது. நான் அவர்களிடம் கூறினேன். அந்த புல்லுக்குள் பாருங்கோ, பிரபான்ர பொடி இருக்கும் என்றேன். அதனடிப்படையில் அங்கே தேடிவிட்டுச் சொன்னார்கள் அங்கே வோக்கி இருக்கென்றார்கள். பிறகு சொன்னார்கள் றைபிள் இருக்கெண்டு. நான் திரும்பச் சொன்னேன், வடிவாத்தேடிப்பாருங்கள், அங்க புல்லுக்குள்ள பொடி இருக்கும் எண்டு. அதன்படிதேடிக் கொண்டு போக அங்க புல்லுக்குள்ள பிரபாவின்ர பொடி இருந்தது. அந்த பிரபா தான் சாகேக்குள்ள கூட இந்த ஆயுதம் இயக்கத்துக்கு கிடைக்காமல் போகக்கூடாது அல்லது எதிரி இதைக்கைப்பற்றக்கூடாது என்ற நோக்கத்திற்காக தனது கடைசிக் கட்டத்தில கூட ஆயுதத்தையும் வோக்கியையும் எறிந்து விட்டு தனது பெருத்த காயத்தின் காரணமாக இந்த இடத்தில் குப்பியைக்கடித்து வீரச்சாவடைந்து விட்டான்.

பிரபா வீரச்சாவடைந்த இடத்திலிருந்து வேற கொமாண்டர் பொறுப்பெடுத்து பிரபா பிடித்த கத்தோலிக்க மடத்திலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக அரக்கி மூலைப்பக்கத்தினுடைய கெலி இறங்கு தளத்துடன் சண்டை நடந்தது. அப்பொழுது எங்களுக்கும் அவங்களுக்கும் ஒரு தளர்வு நிலை. சரியாக நேரம் பகல் இரண்டு மணி. சாப்பாடுமில்லை தண்ணியுமில்லை.

இந்நிலையில் அவனுடைய வாழ்க்கைப்போர் அவன் உயிரைக் கொடுத்து அடிபடத் தொடங்கினான். 50 கலிபர் G.P.M.G போன்ற கனரக ஆயுதங்களைப் போட்டு முழுமையான இறுக்கத்துடன் கைகலப்பு வலுப்பெற்றது. அந்த நேரம் எனி முடிவு நாங்கள் எடுப்போம்.

போர்க் தயாராக இருந்து நிலமையைக் கேட்டுக்கொண்டிருந்தார். என்ன மாதிரி என்ன நடக்குது இப்பவே நாங்கள் விடவா? பகலே விட முடியுமா? என்பது அவரது கேள்வி. கொஞ்சநேரம் பொறுமையாக இருங்கள் என்று கூறினேன்.

இந்த நேரம் தளபதி தீபன் அவர்களிடம் பொறுப்பைக் கொடுத்துவிட்டு நான் வெளிக்கிட்டேன். இவ்வளவும் முடிந்துவிட்டது. அவன் மேலால் அடித்துக்கொண்டிருக்கிறான். விநியோகமும் குடுக்கமுடியாத நிலை. எதிரியிடமிருந்து தான் நாங்கள் பறித்து அடிபடவேண்டிய மிகவும் இறுக்கமான நிலை. இந்த வேளை நவனீதனை இறக்கிவிட்டேன், இராணுவத்துக்கு பின்பக்கத்தால் போய் அடிச்சுத் துற, நான் றோடால வருகிறேன் என்று கூறிவிட்டு, நான் றோட்டால போய்கொண்டிருந்தேன். நவனீதன் பூநகரி நடவடிக்கையில் வீரகாவியமாகிவிட்டார். இவன சரியான கெட்டிக்காரன். பின்பக்கத்தால போய் உள்ளிட்டு அடிச்ச அடியில 25,30 இராணுவம் செத்துவிட, உள்ளுக்க புகுந்து சண்டை பிடித்துக் கொண்டிருந்தான்.

நான் றோட்டால போய்க் கொண்டிருக்கிறேன். இராணுவம் முதுகுகாட்டி ஓடிக்கொண்டிருக்கிறான்.

அப்ப அங்க நிண்ட அணிகள் கலைச்சு கலைச்சு சுட்டுக்கொண்டிருக்கிறாங்கள். கிட்டத்தட்ட 50 பொடிக் குக்கிட்ட முதுகில சுட்டுச் சுட்டு எடுக்கிறாங்கள்.

அதோட ஓடிவந்து பிரதான முகாமை சுற்றியிடப்பட்டிருந்த வேலியை சுற்றி ஒரு வேலி அமைத்துவிட்டு அடிபடுகிறார்கள். பிரதானமற்ற வெளிஅரணுக்குள் எங்கள் கையில் முக்காவாசி பகுதி,கெலி இறங்கு தளமும் எங்கள் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டது.

அப்பொழுது நேரம் ஐந்து மணியை அண்மித்து விட்டது. இந்த பிரதான முகாமை எப்படியாவது தகர்க்க வேண்டும். தகர்க்காவிட்டால் சிலவேளை நிலமை வித்தியாசமாகப்போகலாம். அதற்காக உடனடியாக அணிகளை ஒழுங்குபடுத்திவிட்டு தளபதி சொர்ணமும், நானும் கதைத்து முடிவொன்றை எடுத்து கரும்புலி நடவடிக்கையை மேற்கொள்வது என திட்டமிட்டோம். இதற்கான திட்டத்தின்படி கிளிநொச்சிப் பக் கமாக இருந்து தான் கரும்புலி போர்க்கின் வாகனம் வந்து இங்கே முகாமைத் தகர்க்கும். முகாமைத் தகர்ப்பதற்காக போர்க்தயாராக இருந்து கொண்டிருக்கிறார்.

அவ்வேளை நான் உடனடியாக கரும்புலி போர்க்கினுடைய வாகனத்தடிக்கு வந்து அவரைக் கட்டிப் பிடித்து கதைத்துக் கொண்டிருக்கின்றபோது, போர்க் என்னிடம் கூறினான், நாங்கள் எவ்வளவு காலமாக இந்த படைமுகாமை சுற்றிகாவல் காக்கின்றோம், எத்தனை போராளிகள் மடிந்துவிட்டார்கள். எத்தனை மக்கள் அழிந்து காயப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு இந்த முகாமின் சரித்திரத்தை முடிக்கிறேன். முகாமின் மையப்பகுதியில் எனது வாகனத்தை இடித்து முகாமைச் சிதைக்கிறேன் என்று கூறி நான் போய்வருகிறேன் என்று கூறிவிட்டு, விடைபெற்றார்.

அன்று 23ம் திகதி போர்க்கின் உடைய வாகனம் எந்த இடத்தில் நிப்பாட்ட வேண்டும் என்று திட்டத்தில குடுத்தமோ அந்த இடத்தில சரியாக போர்க்கின் வாகனம் வெடித்துச் சிதறியது. அவர் வெடித்த இடம் சரியாக முகாமின் கட்டளைத்தளபதி தவலகலவின் கட்டளை மையம்.

போர்கின் இந்த வெடியோசையுடன் பெருமளவான படையினர் அன்று செத்து மடிய, முகாம் சிதைக்கப்பட்டது. இந்தவேளை அன்றிரவே எமது அணிகள் முகா மினுள் புகுந்துவிட்டன. இந்த கரும்புலி மாவீரனினுடைய பெரு வெடியோசையுடன், நாம் எந்த உயிரிழப்புக்களையும் சந்திக்கவில்லை. அந்த ஓசையுடன் முகாம் எந்தவித சத்தமும் இன்றி அமைதியாக இருந்தது. எதிரியின் வெடியோசை எதுவுமே கேட்கவில்லை.

அப்போது தளபதி சொர்ணத்துக்கும் எனக்கும் ஒரு சந்தேகம். காயப்பட்ட இராணுவம் கிடக்கிறது. கட்டளை மையகருவிகள் இருக்கின்றன. எதிர்ப்பில்லை. இராணுவம் தப்பியிருக்கலாம். உண்மையில் கட்டளை அதிகாரி குறிப்பிட்ட இராணுவத்துடன் ரவர் லையினை பிடித்து வவுனியா நோக்கி தப்பி ஓடிக் கொண்டிருந்தார். மீதி சில இராணுவம் பாதை தெரியாது வெலிஓயா நோக்கி ஓடியது.

இது எங்கள் இருவருக்கும் நன்றாக விளங்கிவிட்டது. கொஞ்சப்பேர் தப்பியோடிவிட்டாங்கள். நாங்கள் இராணுவ முகாமைச்சுற்றி காட்டுக்குள் தேடுவோம் எனக் கதைத்தோம். அங்கே சொர்ணம் ஒழுங்குபடுத்தி தேடினார். இராணுவம் தப்பி ஓடியபாதை இருந்தது. உடனடியாக பின்வாங்கின பாதைக்கு இரண்டு அணிகளை நகர்த்தி கரிப்பட்டமுறிப்பு, கனகராயன்குளம் என அந்த பாதையை சுற்றி வளைத்தோம்.

அதில் இராணுவம் மாட்டியது. அவர்களைக் கொன்று, ஆயுதங்களை கைப்பற்றினோம். அடுத்து புளியங்குளம் குளவிசுட்டான் குளச்சந்தி, நெடுங்கேணி ஆகிய இடங்களை சுற்றிவளைத்தோம். அதிலும் சண்டை நடந்து குறிப்பிட்ட படையினரைக் கொன்றோம். அதேவேளை இராணுவத்தினரை பின்தொடர்ந்து வந்த எமது அணிகள் காட்டுக்குள் இராணுவத்தைச் சந்தித்து அங்கே சண்டை தொடங்கிவிட்டது. இரண்டு



நாட்கள் காட்டுக்குள் தப்பி ஓடிய படைகளில் முக்காவாசிப்பேர் எமது தாக்குதல்களில் கொல்லப்பட்டு விட்டனர். ஒரு சில இராணுவம் மட்டும் தப்பிச்சென்றுவிட்டது.

இப்படியே எமது தலைவரின் திட்டத்தின்படி அங்கங்கே காட்டுக்குள் தப்பி ஓடிய படையினரையும் தாக்கி அழித்துவிட்டோம். எமது போராளிகள், பொறுப்பாளர்கள் சரியாக வேகமாக செயற்பட்டமையால் நாம் வேகமாக தாக்கி அழிக்க முடிந்தது. முக்கியமாக மாங்குள மக்கள், கரிப்பட்ட முறிப்பு மக்கள், கனகராயன்குள மக்கள், புளியங்குளம், நெடுங்கேணி மக்கள் அனைவரும் சேர்ந்து இந்த எதிரியை விடக்கூடாது, எங்களது நிம்மதியான வாழ்வை சிதைத்த இவர்களை விரட்ட வேண்டும் என்று எம்மோடு தோளோடு தோள் நின்று உழைத்தார்கள்.

(முற்றும்)

நம் செயலை, நல்லதாகவோ, கெட்டதாகவோ ஆக்குவது, நமது சித்தமே. - ராபர்ட் ஹெர்ரிக்




## இதயக் கடன்

உன்னிடம்
இதயத்தை
வாங்கினேன்
திருப்பிக் கொடுக்கவே
முடியவில்லை
உலக வங்கி
கடனைப் போல!

ஜெ.ஜெயூரன்

சின்னச் சின்ன வீடு கட்டி
சிற்றாடை கூட இடையில் இன்றி
மண்ணைக் கொண்டு கறி சோறாக்கி.
மாறி மாறி அதனை உண்டு
கண்ணைக் கட்டிக் கல் ஒழித்து
கண்திறந்து அதை எடுத்து
வண்ண வண்ணப் பூக்கள் கொண்டு
வகை வகையாய் மாலை கட்டி
திண்ணைக் குந்தில் அமர்ந்திருந்து
திருமணமும் செய்து பார்த்து
மாங்காய் வெட்டி உப்பு விட்டு
தூளும் சேர்த்து சம்பல் போட்டு
கண்ணீர் சிந்த அதனை உண்ட
காலம் மீண்டும் இனி வருமோ!

புதுக்கவி

## விலகிப் போய் விடு

நான் சுலபமான மனிதன் இல்லை
சுட்டெரிக்கும் சூரியனைக் கூட
தொட்டுப் பார்க்கும் ஆர்வம் கொண்டவன்
நீ என்னை சுண்டி விட்டு சுகம் பார்க்க.
நினைக்காதே. சூடம் சுடர் விட்டு
எரிவது போல் எரிந்து விடுவாய்
விலகிப் போய் விடு.

த.கீதன்.

## மெழுகுவர்த்தி

பிறர்க்காகவே
அழப் பிறந்த
தியாகி

## அன்பு

இதய ஏட்டின்
புனித வாசகம்

## நாக்கு

ஆயுதம் தரிக்காத
அரசியல்வாதி

## மூளை

செயல்களின்
விநியோக வங்கி.

## மாவீரர்

இன்றைய உதயத்தின்
நேற்றைய அஸ்த்தமனங்கள்

## முதுமை

வாழ்க்கை எனும் ஏட்டின்
முற்றுப்பெறாத
இறுதி அங்கம்

பாவேந்தன்

கு.தவசீலன்

## ஊக்கமாத்திரை

## நினைத்ததை நடத்தியே முடிப்பேன்

நாம நினைப்பதை எல்லாம் ஈடேற்ற முடியுமா? முடியும் என்று வாழ்வின் உச்சத்தை தொட்டவர்கள் சொல்கிறார்கள். ஆனால் இது எல்லோராலும் முடிவதில்லையே! ஏன்?டாக்டராக வர வேண்டும் என்று இலக்காகக்குறித்துப்படிக்கும் எல்லோரும் டாக்டராக வருவதில்லை. தலைவனாக எல்லோராலும் உருவாக முடியுமா என்ன என்று நீங்கள் கேட்பது என் காதில் விழுகிறது.

உண்மைதான். உங்கள் கேள்வி நியாயமானதுதான். இதற்கு பல காரணங்கள் இருப்பதை நாம் அறிவோம். இவற்றில் முக்கியமானது தெரிவு! ஆம் சரியான பாதையை நாம் தெரிவு செய்ய வேண்டும். எமது எல்லைகள் எது என்று நிர்ணயம் செய்து கொள்வதில் கவனம் எடுக்க வேண்டும். முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்படலாமா என்று ஒரு பழ மொழியுண்டு. அதன் பொருள் இது தான் தன்னைத்தான் சுய மதிப்பீடு செய்யும்போது, சரியாக மதிப்பிட வேண்டும். தனது வலிமைகளை குறைத்தோ அல்லது கூட்டியோ மதிப்பிடுவது தவிர்க்கப்பட வேண்டும்.

சரியான மதிப்பீட்டின் பின், சரியானத் துறையைத் தேர்ந்தெடுக்க வேண்டும். கொண்ட எண்ணத்தில் வலிமையும், அழுத்தமான நம்பிக்கையும் வேண்டும். அதாவது நம்மை நாமே நம்பவேண்டும் அளவு கடந்தும், எல்லை கடந்தும் நம்பவேண்டும். இந்த நம்பிக்கைதான் தைரியத்தை அளிக்கிறது: பயத்தை விரட்டுகிறது; சோம்பலைப் புறம் தள்ள வைக்கிறது.

நினைத்ததை நடத்தியே முடிப்பதற்கு உதாரணமாக ஒரு தமிழர் இருக்கின்றார் எமது நாட்டில்! அவர் யார் என்று நினைக்கின்றீர்களா? வேறு யாருமல்ல நீங்கள் ஏற்கனவே நன்கறிந்த கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரன் தான். இவர் சரியான துறையை தனக்கு ஏற்றதான வழிபோகக்கூடிய துறையைத் தேர்ந்து எடுத்தார். தனது இலக்கினை எட்டுவதற்கு ஆர்வத்துடன் முயற்சியில் ஈடுபட்டார். தனது பலவீனங்களை எல்லாம் இனம்கண்டுகொண்டு, அவற்றைத் தீவிர பயிற்சி மூலம் சீர் செய்துகொண்டார். இதனால் பலவீனங்கள் கூட பலமாகியது. புகழ் மயக்கத்திற்கு அடிமையாகாமல், கற்பதற்கு இன்னும் எவ்வளவோ இருக்கிறது என எண்ணி தொடர்ந்து அயராத பயிற்சியில் ஈடுபடுகிறார். உண்மையான உழைப்பும், அயராத நம்பிக்கையும் அவரது முயற்சியில் உயர்ச்சிகாண வைத்தது. அவரது சுழல்ப் பந்தை எதிர்கொள்ள, டெண்டுல்கர், போடர், லாரா, வோல் போன்ற தலைசிறந்த ஆட்டக்காரர்கள் கூட திணறினர்.



குறுகியக் காலத்தில் பல வெற்றிக் கனிகளைப் பறித்து இலங்கைக்கும் புகழீட்டித்தந்தார். இரு தடவைகள் உலகில் சிறந்த கிரிக்கெட் வீரர் என்ற விருதைப் பெற்றார். உலகின் முதன்மையான விளையாட்டுத்துறைச் சஞ்சிகையான விஸ்டம் இவரை இது காலவரை தோன்றிய பந்து வீச்சாளர்களில் மிகச் சிறந்த பந்து வீச்சாளராகத் தெரிவு செய்தது. இப்போது இவர் உலகின் அதிகூடிய விக்கட்டுக்களை வீழ்த்திய வீரராகும் சாதனையை முறியடிக்க முயன்று வருகிறார். நிச்சயமாக வெற்றியும் காண்பார்.

வாய்ப்புக்களைத் திறக்கும் சாவி உழைப்புத்தான் என்றுணர்ந்து செயற்பட்ட இவருக்கு கிடைத்த வெற்றி மகத்தானது. வெற்றி ஒன்றையே நினைத்து வெற்றி ஏணியில் ஒவ்வொரு படியாக ஏறினார். தானே ஏற முடியாதபோது பயிற்றுநரின் உதவியைப் பயன் படுத்திக்கொண்டார். முடியாது, நடக்காது போன்ற வார்த்தைகளை முற்றாக மறந்து, துணிச்சலான சில முடிவுகளை எடுத்து வரும் வாய்ப்புக்களை எல்லாம் தட்டிக் கழிக்காமல், எதையும் நாளை நாளை என்று பின் போட்டு ஆறவிடாமல் செயற்பட்டார்.

கவலைகளையும், குழப்பங்களையும்சில குழிப்பறிப்புக்கள் இனரீதியில் ஏற்படுத்திய போது கூட, அசாதரியத் துணிவுடன் அவற்றை முறியடித்து வெற்றி கொண்டார். ஒரு சாதாரண பேக்கரி பங்காளியின் மகனாகப் பிறந்து இன்று உலகறிந்த இன்னொரு தமிழனாக விளங்குகிறார்.

இவரது தந்தை ஒரு பெரிய பிஸ்கட் கொம்பனி முதலாளியாக மாறிய முயற்சிப்பாதை, இவர் மனதிலும் பதிந்திருக்க வேண்டும்.

**ச. முருகானந்தன்**

## சொல்லவேண்டிவந்த பொய்கள்

வழமையாக எங்கள் ஊரில் மழைதொடங்கிவிட்டால் காய்கறிகள் விலையோ அதிகமாகத் தொடங்கிவிடும். காரணம் மழைகாலம் என்றால் பயிர்கள் பூக்களை இழந்து காய்கள் குறையத் தொடங்கிவிடும். இப்படியான காலத்தில் எங்களுக்கோ சந்தோசம். காய்த்து ஓய்ந்த செடிகளில் இருந்து காய்கறிகளை பறித்து ஒன்றோ இரண்டோ கிலோவாகிலும் விற்றால் கை நிறைய காசுவரும் இதற்கு எங்களிடையே போட்டிவரும். முதன்நாள் அண்ணன் விற்று வந்த தொகையில் பார்க்க மறுநாள் நான் விற்றுப்பெறும் தொகை அதிகமாக இருந்தாலே எனக்கு வெற்றி. வழமைபோல முதன்நாள் அண்ணன் கொண்டுசென்ற காய்கறிகள் நிரம்பவே விலை போக கைநிறையக் காசுடன் வீடுவந்தான்.

மறுநாள் எனது முறை போட்டிபோட்டுக் கொண்டு ஓடி ஓடி காய்கறிகளைச் சேகரித்தேன். இதற்காக வழமையாக ஏழு மணிக்கே நித்திரை விட்டெழும்பும் நான், அன்று ஐந்து மணிக்கே நித்திரை விட்டெழும்பியது வேறு. சந்தைக்குக் கொண்டுச்சென்ற காய்கறிகளை விற்க முனைந்தபோது இடைமறித்த தரகர் ஒருவரினால் அறா விலைக்கு விற்றுவிட்டு காசை கணக்குப் பார்த்தபொழுது நான் தோற்றுவிட்டது புரிந்தது. வீடு வந்தேன். மொத்தக்கணக்கைக் காட்டினேன். அதற்காக ஒவ்வொன்றும் விற்ற விலையை கூடுதலாகச் சொன்னேன். காசுக் கணக்குக் கேட்டார்கள் என்னசெய்வது சட்டைப்பையுனுள் இருந்த எனது பணத்தையும் சேர்த்தே காட்டி, பொய்யைக் கூறி முடித்தேன். நான் போட்டியில் தோற்காமல் இருப்பதற்காக சொல்லவேண்டிய பொய் தானே.

## குறுக்கெழுத்துப்போட்டி - 48

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | | | | | 07 |
| | 09 | 10 | | | | |
| | 16 | | 18 | | | |
| | 23 | | | | | |
| | | | | 33 | | 35 |
| 36 | | | | 40 | | |
| 43 | | | | | | |

### இடமிருந்து வலம்

01. நட்சத்திரங்களில் ஒன்று.
09. திக்குறி.
16. துன்பம்.
23. பத்து அவதாரம் குழம்பியுள்ளது.
33. செலவு என்பதற்கு எதிரானது தலைகீழாக உள்ளது.
36. இம்மாதத்தில் வீடுகளில் தீபம் ஏற்றுவர்.
43. வலது என்பதற்கு எதிரானது.

### மேலிருந்து கீழ்

01. நெருப்பு.
02. பயம் குழம்பியுள்ளது.
07. தாய் இறுதி எழுத்தை இழந்துள்ளது.
10. ஐவர் அடங்கிய நியாயசபை.
18. வம்சம் குழம்பியுள்ளது.
35. ஒழுங்கு.
40. சிறையில் உள்ள குற்றவாளி

### குறுக்கெழுத்துப்போட்டி இல.46 இன் விடைகள்

**இடமிருந்து வலம்**

01. அகிலம்.
06. கால்.
10. கல்யாணம்.
17. புலி.
20. பிதா.
26 .காணி.
38. மகள்.
43. திகதி.
47. சுகம்.

**மேலிருந்து கீழ்**

01. அக்கினி.
02. கிரகணம்.
04. மல்லிகை.
17. புத்திமதி.
20. பிணி.
26. கானகம்.
35. நஞ்சு.
36. ஆதி.

**இளையவர்களே!**
**மேலுள்ள கட்டத்தை வெட்டி சரியான சொற்களை இட்டு நிரப்பி தங்கள் பெயர் முகவரியை இணைத்து அனுப்புங்கள்.**

குறுக்கெழுத்துப்போட்டி,இல.48
வெள்ளிநாதம்
ஈழநாதம்.
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.

### குறுக்கெழுத்துப்போட்டி இல.46 இன் பரிசுக்குரியவர்

**தே. கலைவாணி,**
**இல.78,பசார்வீதி,**
**வவுனியா.**

### குறுக்கெழுத்துப்போட்டி இல.46 இன், பாராட்டுக்குரியவர்கள்.

01. சி.தர்சினி, ஏழாலை, யாழ்ப்பாணம்.
02. க.கரன், பூந்தோட்டம், வவுனியா.
04. வ.காஞ்சனா, செம்மலை, முல்லைத்தீவு.
05. மு. கலைவாணன், தேவிபுரம், புதுக்குடியிருப்பு.

பெயர்:-..........................................
முகவரி:-........................................
..................................................
..................................................

# விடுதலைக்கான தியாகம்

**இ.கபிலன்**



**முதலிக்குளம்** தமிழ் மக்களது நான்காயிரம் ஏக்கர் வயல்நிலங்களின் தாய். இவளின் நீர் ஊட்டலால் வயல் வெளிகளில் நெல் விளைந்து குடை சாய்ந்திருக்க, வயல்காற்றுக்கு அவ் நெற்கதிர்கள் சலசலக்கும்.

வாய்க்கால்களில் நீர் இரு கரையையும் தழுவிச்சென்று கொண்டிருக்க, அதில் தென்றல் தொட்டுவர ஊர் குளிர்ச்சியாகவே இருக்கும்.

ஊரைச் சுற்றி அடர்ந்த காட்டுமரங்கள் அவைகள், பசுஞ் சோலையாக அழகாக ஊர்மிளிரும்.

யானைகள், பன்றிகளின் தொல்லைகள் மத்தியில் பாடுபட்டு உழைக்கும் இவ்வூர் மக்கள், நெல் விதைத்து அறுவடைக் காலங்களில் பிள்ளையார் கோயில்களுக்குப் பொங்கிப் படைத்து மன நிறைவோடு செழிப்பாக வாழ்ந்தார்கள். எல்லைக் காளி அம்மன் கோவில் திருவிழாக் காலம் மக்கள் ஒன்றுகூடி மகிழும் காலமாக இருக் கும்.

இப் பேரானந்த சூழலில் விஜயண்ணன் தன் மனையாள் இந்திராதேவியுடன் சேர்ந்து நடாத்திய இல்வாழ்வில் மூன்று ஆண் பிள்ளைகளைப் பெற்று இன்பமாக வாழ்ந்தார். அவரின் உழைப்பு வாழ்க்கையை கொண்டுபோக உதவியதே தவிர வசதியாக வாழ அவரது வரவு போதுமானதாக இருக்கவில்லை. இருப்பினும் அவர்களது மனமும், வீடும் வாழ்வும் நிறைவோடு இருந்தன.

அவர்களது வாழ்வில் இன்னல்கள் மெல்ல மெல்ல ஆனால் அடுக்கடுக்காக வந்தன. அதாவது அந்த தமிழ் ஊர் சிங்களத்தால் சிதைந்து, சிதிலமாகி இருளுக்குள் மூழ்க ஆரம்பித்தது.

முதலிக்குளத்தாயின் அரவணைப்பில் இருந்து வந்த தமிழரின் வளமான வயல்நிலங்களில் 340 ஏக்கர் விமானப்படையினர் பண்ணையாகவும், முதலிக்குளம் மொறவெவாகவும் மாறியது. இதேபோல் பனிக்கட்டி முறிப்பு பனிக்கட்டியாவா பன்மதவாச்சி பன்மதவாச்சிய என ஆகியது.

இனவெறிக் கலவரம் 77,83 களின் போது மிக மோசமான படுகொலைகளைச் செய்து தமிழர் வாழ்ந்த இடங்கள் அழிக்கப்பட்டன.

எல்லைக் காளியம்மன் கோவில் கிராமத்தில் வடிவேல், சின்னையா, பூவாய், வ்ள்ளியம்மை ஆகியோர் படுகொலை செய்யப்பட, ஏனையோர் வெட்டுக்காயங்களுடன் உயிர் தப்பியோடினர். இதனால் ஊர் முழுமையாகச் சிதைந்தது. நொச்சிக்குள ஊரும் இருளுள் மூழ்கியது.

பன்மதவாச்சியில் ஐலண்ட் பஸ் மறிக்கப்பட்டபோது திசை தெரியாது ஓடியவர்கள் எங்கு போவது என்று தடுமாறியதில் அகப்பட்ட 20பேர் வெட்டிக்கொலை செய்யப்பட்டார்கள். ஏனையோர் காயங்களுடன் உயிர்தப்புவதற்கு உதவிபுரிந்த திருநாவுக்கரசு குடும்பத்தையும் கொன்றொழித்தார்கள்.

பன்குளச்சந்தி கந்தையா கடையினுள் சிறிஸ்கந்தராசா என்ற இளைஞனும், பன்குள வீடொன்றில் குடும்பத்தோடு எட்டுப்பேர் கொல்லப் பட்டார்கள்.

இப்படி அந்தப் பூர்வீகத் தமிழ் மண்ணில் தமிழர்கள் சிந்திய இரத்தத்தையும், கண்ணீரையும் எந்த எழுத்தில் வடிப்பது?

இந்தகைய துன்பதுயரங்களால் வாடிப்போயிருந்தனர் விஜயண்ணனும் அவரது நண்பர்களும். அவர்களது இதயத்தில் சமாளிக்கமுடியாத கொந்தளிப்பு.

நிராதரவாக இருந்த தமிழ் இனத்தின் பாதுகாப்புச்சக்தியான விடுதலைப்புலிகளின் மூத்த தளபதி சந்தோசம் மாஸ்ரருடன் 83 இறுதியில் விஜயண்ணனின் நண்பர்களான நாதன், சமுத்திரன், குருஜி, தமிழன் ஆகியோர் இணைந்து கொண்டார்கள்.

காலங்கள் கடந்தன. ஒரு நாள் விஜயண்ணன் வேறு இருவருடன் பன்குளக்காட்டுப்பகுதிக்குள் தம் வேலையாக நுழைந்து, ஓர் இடத்தில் ஓய்வாக இருக்கும்போது ஆயுதம் தாங்கிய சில இளைஞர்கள் தம்மை நெருங்கி வருவதனை அவதானித்தார். அவர் மனம் அச்சத்திற்குள்ளாகியவேளை நாதன், சமுத்திரன், குருஜி என முகங்கள் தெளிவாகத் தெரிய நெஞ் சில் ஆறுதல் உணர்வு ஏற்பட்டது. போராளிகளும் தம் ஊர் நண்பர் விஜயண்ணன் என இனங்கண்டதும் ஒன்றாகச் சந்தித்த அத்தருணத்தில் அவர்கள் அனைவரும் இனம் தெரியாத ஆழ்மனதிலிருந்து பரவிவரும் மகிழ்ச்சிக்கசிவில் ஊறினார்கள்.

போராளிகள் 1985 இறுதிக் காலப்பகுதியில் அலைந்து திரிந்தவர்களாகவும், தண்ணீர் தாக மெடுத்த போதெல்லாம் மழையால் நிரம்பிய குட்டைகளில் அருந்திய வாறும். கிறீம் கிறேக்கர் பிஸ்கட்டால் பசியாறியும் மெய்சோர்ந்த நிலை யிலும் இருந்தார்கள். எல்லையற்ற விசுவாசம் மிக்க நண்பன் விஜ யண்ணன் முகம் கண்டதும் மகிழ்ச்சி உணர்வுகள் கிளர்ந்திருக்கும் நிலை யில் அவர்களிடம் உற்சாகம் பிறந்தது.

அவர்களுக்கிடையே நீண்ட உரையாடல், மக்களின் நிலை சிங்களத்தின் அட்டூழியங்கள், நடமாட்டங்கள் என்ற விஷயங்களைப் பகிர்ந்து கொண்டார்கள். காட்டில் முகாம் அமைத்திருக்கும் போராளிகளுக்கான உணவுப்பொருட்கள் பெற்றுக்கொள்ளச் சாத்தியமான வழிகள் பற்றியும் முக்கியமாகக் கதைத்தார்கள்.

நாள் செல்லச்செல்ல போராளிகள் நடமாடும் தகவல்கள் சிங்கள மக்களால் விமானப்படையினருக்குத் தெரியவர சீற்றமுற்ற படையினர் ஊருக்குள் நுழைந்து தம் துப்பாக்கியால் சுட சரமாரியாக குண்டுகள் கிளம்பின. ஊர்மக்கள் கஸ்டப்பட்டு, கடன்பட்டு விவசாயம் செய்தும் விமானப்படையினரின் அடாவடித்தனத்தினால் விதைப் பயிரைக் கூட, வளர்த்து அறுவடை செய்து பயன் அனுபவிக்க முடியாத நிலையில் அவர்களையும் மீறி விழிகளில் எட்டிப்பார்க்கும் கண்ணீரைத் துடைத்தவாறு, விஜயண்ணன் குடும்பமும், எஞ்சிய ஊர் மக்களும் குடிபெயர்ந்தார்கள். இறுதியாக நடந்து முடிந்த ஊர் அவலங்கள் பற்றிய செய்திகள் போராளிகளையும் சீற்றமுறவைத்தன.

காட்டு முகாம் பொறுப்பாக சமுத்திரன் இருக்க, தவராசா, குருஜி, ஜீவன், காந்தன், சத்தியன், சூட்டி, பாஸ்கர், ஜெகன், நித்தி, கேதீஸ், பிரபு, இந்திரன், சபேசன், திவாகர், முகிலன், றெஜி, தீபன், தமிழன், வேந்தன், தாகூர், குரு, சந்தர், குணம், வசந், விக்கி, பரமன். வரதன், விசு, மது, கபில் (சோட்டன்), பாபு, சரோன், சங்கர், கிருபா, அருளானந்தம், மைந்தன், சிவம், பசுபதி ஆகிய போராளிகள் அவரின் கீழ் இருந்தார்கள். அப்போது மூத்த தளபதி புலேந்தி அம்மான் அப்பிரதேசத்திற்குப் பொறுப்பாக வழிநடாத்தினார்.

இக் காலப் பகுதியில் புலேந்தி அம்மான் விமானப் படையினரின் வாகனத்தின் மீது குறிதவறாது மேற்கொண்ட கண்ணிவெடித்தாக்குதலில் பன்குள வீதியில் 12க்கு மேற்பட்ட படையினர் மாண்டும் 10க்கும் குறையாத படையினர் படுகாயமுற்றனர்.

இன்னொரு நாள் பன்குள குமரன் மில் என்ற இடத்தில் வைத்து விமானப்படையினர்மீது போராளிகளால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு நான்கு ஆயுதங்களைப் போராளிகள் கைப்பற்றினார்கள். இதில் 07 படையினர் கொல்லப்பட்டார்கள்.


இச்செய்திகள் விஜயண்ணன் காதில் விழும் ஒவ்வொரு தடவையும் ஊரை இருளாக்கிய சிங்களத்துக்கு விழும் அடி என்கிற மகிழ்ச்சி எண்ண அலைகள் எழுந்து, விரிந்து, வீழ்ந்து அவரின் இதயக் கரையில் மோதின. அச்சமயத்தில் விஜயண்ணன் தன் குடும்பத்தோடு சாம்பல்தீவில் வாழ்ந்தார்.

அக் காலத்தில் சாம்பல் தீவுப் பாலத்தில், இரவுக்காவல் போராளிகளால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அக்காவல் கடமைக்கு இரு குண்டுகளுடன் விஜயண்ணன் சென்று வருவதோடு காட்டில் இருந்து வரும் முகிலனுக்குத் தேவையான ஒழுங்குகளையும் செய்து கொடுத்து உதவினார். இப்படியிருக்கையில் ஒரு நாள் அவர் சிங்களப்படையினரால் கைதாகி நான்கு மாதங்கள் பூசா தடுப்பு முகாமில் தன் வாழ்க்கையைக் கழித்தார்.

அப்போதுதான் முதன் முதலாக தன் குடும்பம் கண்முன்னே இல்லாத தனிமை அவரின் மனதை வாட்டுவதை உணர்ந்தார். அதனால் அவருக்கு மனைவி, பிள்ளைகளின் நினைவுகள் கண்முன்னே வந்து வந்து மோதியபடி இருந்தது.

பின்னர் அவர் விடுதலையாகி தன் குடும்பத்தோடு இணைந்து தன் சொந்த ஊரிலேயே இன்பமாகக் குடித்தனம் நடாத்தி வரும் காலத்தில் இந்தியப்படையுடனான யுத்தம் வெடித்தது.

அவரது வாழ்வில் மறுமலர்ச்சி பெற ஆரம்பித்தசமயம் இந்தியப்படைகளின் நெருக்கு வாரங்களால் நாளொரு இன்னலும், பொழுதொரு துன்பமும் சுமக்கவேண்டியதாயிற்று.



விஜயண்ணன்

சமுத்திரன், ஜீவன்,கிருபா,சூட்டி ஆகிய போராளிகள் தம் இயக்கப்பணிகளுக்காக ஊருக்குள் வந்தால் விஜயண்ணன் வீட்டிலும், திருமதி அம்மா வீட்டி லும்தான் இரகசியமாகத் தங்கி நின்று மீளக் காட்டு முகாமிற்குச் செல் வார்கள். இரு வீட்டார்களது துணிச்சலும், உணர்வும் போராளிகளுக்குப் பக்க பலமாகவே அப்போது இருந்தது. போராளிகள் உயிர் ஆபத்தை எதிர் நோக்கிய தருணத்தில் தம்மைப்பற்றி எதுவித கவலை யும் கொள்ளாமல் அவர்கள் போராளி களை காப்பாற்றியுள்ளார்கள்.

விஜயண்ணன் வீட்டினுள் போராளிகள் இருக்கும் சமயங்களில், அவரது பிள்ளைகள், மனைவி அனைவரும் வீதியை அவதானிக்கும் கடமையில் இருப்பார்கள். இந்தியப்படையினரின் காலப்பகுதியில் பொருட்கள் கொள்வனவு நடைமுறையில் மிக இறுக்கமாக இருந்தது. ஒரு குடும்பத்துக்குத் தேவையான பொருட்களின் அளவுக்கு மட்டுமே கொள்வனவு செய்ய அனுமதியுண்டு. இவ் நெருக்கடி மிகுந்த காலகட்டத்தில் சிறு சிறு பொருட்களாக சேகரிக்கும் பணியில் தன் குடும்பத்தையும், தன் நம்பிக்கைக்குரிய ஊரவர் சிலரையும் விஜயண்ணன் ஈடுபடுத்தினார். அப் பொருட்கள் காட்டு முகாம் போராளிகளுக்கு துள்ளியோடும் தன் ஊர் மாட்டு வண்டில்களில் கொண்டு கொடுப்பார்.

அக்காலத்தில் போராளிகளைப் பசியுணர்வின் தாக்கம் வதைத்தது, வாட்டியது. அதனால் மிகவும் களைப்புற்றவர்களாகப் போராளிகள் இருந்தார்கள்.

விஜயண்ணன் தன் துன்பத்தின் அழுத்தத்திற்கு அப்பால் போராளிகளது உணவுத் தேவையை நிறைவு செய்யவேண்டும் என்கிற உணர்வில் கடினமாக உழைத்தார்.

இச் சூழலில் அவரின் பெயர் இந்தியப்படையினருக்கு கிடைத்ததையடுத்து, அவர் கைது செய்யப்பட்டு கடுமையான சித்திர வதைக்குள்ளாக்கப்பட்டார். உயிரைப் பற்றிக் கவலைப்படாத உறுதி அழுத் தமாக அவரிடம் இருந்ததனால் எந்த வொரு தகவலையும் அவரிடமிருந்து பெறமுடியாமல் போக அவர் விடுதலையானார். கைதியாகி விசாரணைக்குட்படுத்தப்பட்டபோதும், வெடிமருந்து கான், பிஸ்டல்,பிற இராணுவப்பொருட்கள் மறைத்து வைக்கப்பட்ட இடம் பற்றிய முழு விபரமும் அவருக்குத் தெரிந்து இருந்தும் எதுவுமே கூறவில்லை.

சில வாரங்களின் பின் இந்தியப்படை விஜய ண்ணன் வீட்டைச் சுற்றிவளைத்தபோது ரக்டரில் உணவுப்பொருட்கள் ஏற்றிய படியே பிடிபட்டது. படையினரின் துப்பாக்கி ரவைகளுக்குள்ளால் தப்பிய அவர் கல்லுமலைக் காட்டில் உள்ள ஜீவனோடு சேர்ந்து கொண்டார்.

விஜயண்ணனின் நிலை இப்படியிருக்க, இன்னொருபக்கம் அவரது மனைவியையும் மூன்று பிள்ளைகளையும் இந்தியப்படையினர் தம் முகாமில் தடுத்து வைத்து விசாரணை செய்தார்கள். இவ் நாட்களில் அவரின் மனைவி அலரிக் கொட்டை அருந்தி தான் இறந்தால் பிள்ளைகளை இந்தியப்படையினர் விட்டுவிடுவார்கள் என்ற எண்ணத்துடன் அவள் முயற்சி செய்தார். ஆனால் அந்த முயற்சி அவருக்கு கை கூடவில்லை. அதன் பிற்பாடு தன் பிள்ளைகளிடம் தனக்கேதும் நேர்ந்தால் மூவரும் இயக்க மாமாக்களிடம் போய்விடுங்கள். அப்பா எப்படியும் வந்து உங்களிடம் சேர்வார் எனச் சோகம் ததும்பிய வார்த்தைகளால் பிள்ளைகளிடம் உருக்கமாகச் சொன்னார்.

எது எப்படியிருப்பினும் அவரின் மனைவியின் துணிவு, மனைவியின் ஆளுமையில் ஊறிப் போயிருந்தது. அது சுரந்து கிளர்ந்ததனால் விடுதலையாகி வீடு வந்து சேர்ந்தார்கள்

கணவன் இல்லாத வீட்டில் வறுமையும், வறுமையால் ஏற்பட்ட வெறுமையும் அப்போது இருந்தது. தன் வசதிக்கு ஏற்ப உணவைச் சமைத்து எடுத்துக்கொண்டு தன் கணவனைக்காண கல்லுமலைப் பக்கம் சென்று சந்தித்தார். இதன் பின்பு சமைத்த உணவு, தேனீர் எனச் சுமந்து தன் கணவனுக்கும் போராளிகளுக்கும் கொடுத்த மன நிறைவோடு வீடு திரும்புவார். இப்படிப் பல நாட்கள் ஓடின.

ஒரு நாள் ஊர் வீதி யொன்றின் மையத்தில் கண்ணிவெடி புதைக்கப்பட்டது. எட்டு நாட்கள் காத்திருந்த ஜீவன் இந்தியப்படை வாகனத்தைக் குறிவைத்து அழுத்தியதில் இரு படையினர் கொல்லப்பட்டு SLR ஒன்று கைப்பற்றப்பட்டது. அக்காலத்தில் இத் தாக்குதல் போராளிகளது உறுதிக்கு உத்வேகம் அளித்த ஊக்கியாகவே அமைந்தது. தாக்குதலில் ஜீவனுக்குப் பக்க துணையாக விஜயண்ணன் செயலாற்றியிருந்தார்.

இத்தாக்குதலையடுத்து விஜயண்ணன் மிகத் தீவிரமாகத் தேடப்படும் நபராகினார். ஒரு தடவை இந்தியப்படையினர், அவரது வீட்டைத் திடீரெனச் சுற்றிவளைத்து தேடுதல் செய்து ஏமாந்த கோபத்தில் அவர் வளர்த்த நாயைச் சுட்டுக் கொன்றுவிட்டுச் சென்றார்கள்.

(19ம் பக்கம் பார்க்க...)

# எது முரண்பாடு? ஏன் தீர்க்க வேண்டும்

அர்த்தங்கள் நிறைந்த சந்தோசமான அகில வாழ்க்கையில் எத்தனையோ பிரச்சினைகள் எத்தனையோ முரண்பாடுகள் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு செல்கின்றன. இந்த முரண்பாடுகளும், பிரச்சினைகளும் எத்தனையோ மனித உறவுகளைப் பிரித்து விபரீதமான விளைவுகளுக்கு இட்டு செல்கின்றன. ஆகவே இம் முரண்பாடுகள் பற்றி தெளிவாக வேண்டிய தேவை ஒவ்வொரு மனித வர்க்கத்திற்கும் இன்றியமையாத ஒன்றாகி விட்டது என்ற வகையில் முரண்பாடு என்றால் என்ன? இதற்கு அடிப்படை என்ன? முரண்பாட்டிற்கும் பிரச்சினைக்கும் இடையிலான வேறுபாடு என்ன? இது இருவருக்கிடையில் மட்டுமா உருவாக்கப்படும் முரண்பாடு ஏன் தீர்க்கப்படவேண்டும்? இதைத் தீர்ப்பதற்கான வழிகள் என்ன என்பது பற்றி நாம் சிந்திப்போம்.

முதலில் நாம் முரண்பாடு என்றால் என்ன? என்பது பற்றி பார்த்தால் முரண்பாடு என்பது ஒரு துறைசார் விடயம் பற்றி வெவ்வேறு வடிவங்களுக்கூடான எதிர்மறையான கருத்துக்கள் சரியான நியாயங்களுடன் முன்வைக்கப்படுதலே சுருக்கமாக முரண்பாடு என பொதுவாகக் கூறலாம். அதாவது ஒரு விடயம் பற்றி ஒருவருக்கிடையிலோ அல்லது ஒன்றிற்கு மேற்பட்டவர்களுக்கிடையிலோ வெவ்வேறு கருத்துக்கள் சரியான காரணங்களுடன் நியாயப்படுத்தும் பட்சத்தில் அதையே நாம் முரண்பாடு என்கிறோம்.


இந்த முரண்பாடானது உருவாக்கப்படுவதற்கு அடிப்படை என்ன என்பதை நோக்குமிடத்து ஒருவரின் நடத்தை என்பது ஒருவருக்கு தனித்துவமானதாயும், நடத்தைகளைப் பொருத்தமானவை என்றும், பொருத்தமற்றவை என்றும் வகைப்படுத்தலாம். குறிப்பிட்ட இடத்திற்கும், சூழலிற்கும் பொருத்தமற்ற நடத்தைகளே முரண்பாடுகளுக்கு அடிப்படையாக அமையலாம். (தோற்றுவிக்கும்) நடத்தைகள் மாற்றப்படக் கூடியவை. உலகம் முழுவதும் உள்ள மனிதர்கள் அனைவருக்கும் ஒரே மாதிரியான தேவைகள் உள்ளன. அத்தேவைகள் நிறைவு செய்யப்படாதபோது மறைவான உணர்வுகள் தோன்றுகின்றன. அவற்றின் விளைவாக முரண்பாடுகள் தோன்றலாம். ஆகவே முரண் பாடுகள் அடிப்படையில் இருவேறு துருவங்களுக்கூடாக உருவாகும் என்பதை முதலில் நாம் தெளிவாக்கிக்கொள்ள வேண்டும். ஒன்று எம்மால் வெளிக்கொணரப்படுகின்ற நடத்தைகள் அல்லது சொற்பிரயோகங்கள். அந்த குறிப்பிட்ட சந்தர்ப்பத்திற்குப் பொருந்தாதபோதும் முரண்பாடுகள் தோன்றலாம், இரண்டாவது எல்லோருக்கும் ஒரேமாதிரியான அடிப்படைத் தேவைகள் சில உண்டு. அது பல்வெறு காரணங்களால் சிலருக்கு நிறைவு செய்யப்படாமல் போகிறது. அப்போது வித்தியாசமான ஒரு விரக்திப் போக்கான ஓர் உணர்வுகள் தூண்டப்படுகின்றன. இவையும் முரண்பாடுகளுக்கு அடிப்படையாக அமையலாம்.

அடுத்து இம்முரண்பாடு எத்தனை நபர்களுக்கிடையில் ஏற்படலாம் என நோக்குவோம். தனி ஒருவருக்கிடையிலும் ஏற்படுகின்ற முரண்பாடுகள் உண்டு. அதைத் தான் தனி மனித முரண்பாடு என்பர். இது பெரும்பாலும் தனது நடத்தைக் கோலங்கள், தனது வெளி உணர்வுகள் பற்றியே உருவாகும். அதாவது தனது ஆளுமை விருத்திக்கு ஏற்ப உருவாக்கப்பட்ட தனது தனித்துவத்திற்கும். சமூக எதிர்பார்ப்பிற்கும் இடையில் மாறுதல்கள் ஏற்படுகின்றபோது இத்தனிமனித முரண்பாடுகள் ஏற்படலாம். இதில் இரு துருவங்களுக்கிடையில் உள்ள (மனம் - சமூக எதிர்பார்ப்பு) சரியான நியாயங்களே தனிமனித முரண்பாட்டினை வலுப்படுத்துகின்றது. இதைவிட இரு நபர்களுக்கிடையிலோ அல்லது இரண்டிற்கு மேற்பட்ட நபர்களுக்கிடையிலோ இது ஏற்படலாம். அதாவது ஒரு விடயம் பற்றிய வெவ்வேறு கருத்துக்கள் எத்தனை பேரிடத்தில் இருக்கிறதோ அத்தனை பேரும் அம் முரண்பாட்டின் ஆளணிகள் ஆகலாம்.

இனி முரண்பாட்டிற்கும் பிரச்சினைக்கும் இடையிலான வேறுபாடு பற்றி நோக்குவோம். முரண்பாட்டிற்கு குறைந்தது இரு பக்கங்கள் இருக்கும். ஆனால் பிரச்சினைக்கு பக்கங்கள் இல்லாதும் இருக்கலாம். முரண்பாட்டில் உள்ளடக்கப்படும் இரண்டு பக்கங்களிற்கும் சரியான சமனான நியாயங்கள் இருக்கும். ஆனால் பிரச்சினையில் ஒரு பக்கத்தில் மாத்திரம் சரியான நியாயங்கள் தலைதூக்கும். சுருக்கமாகச் சொன்னால் பிரச்சினையை விட முரண்பாட்டைத் தான் தீர்ப்பது மிகக்கடினம்.

இதைத் தொடர்ந்து இம் முரண்பாடுகள் ஏன் தீர்க்கப்பட வேண்டும் என்பது பற்றி நோக்குவோம். இந்த மனிதப்பிறப்பின் வெற்றி என்று எதைக் கருதுகிறீர்கள்?.......... நான்கு மனிதர்களுடன் சந்தோசமாக வாழ்ந்தது தான் எமக்குக் கிடைக்கும் இறுதி வெற்றியாகும். புகழ், பணம், அந்தஸ்து இவையெல்லாம் சுமூகமான உள நிலைக்கு வித்திடாது. எந்தச் சந்தர்ப்பத்திலும் சந்தோசமாக இருக்கப் பழகவேண்டும். வாழ்க்கையின் பெரும் சொத்து எது தெரியுமா?.... அது தான் மனிதர்கள் என்கின்ற சொத்து. இது மிகவும் பாதுகாக்கப்பட வேண்டிய கிடைக்காத ஒரு சொத்து. ஒரு மனிதனின் நட்பை சம்பாதிப்பது மிகவும் கஸ்டமான விடயம். ஆனால் அதை உடைத்து விடுவது மிகவும் இலகு. பிறந்தோம், வாழ்ந்தோம், இறந்தோம் இதில் எதைக்கண்டோம்? எமது மனித சமூகத்தோடு சந்தோசமாக இருந்ததைத்தான் கண்டோம். ஆகவே இந்த மனித உறவுகள் உடையக் கூடாது.

முரண்பாடுகள், பிரச்சினைகள் வாழ்வின் இயல்பான பகுதிகள். இவை எல்லாம் சண்டையில் முடிவதுமில்லை, முடிவடைவது மில்லை, முடிவடையத் தேவையுமில்லை. இந்த மனிதச் சொத்துக்களை சேர்க்க வேண்டும் எனின் சில முரண்பாடுகள் அவ்வப்போது தீர்க்கப்பட வேண்டும். இல்லையேல் வாழ்வில் கிடைக்காத செல்வம் எனப் போற்றப்படும் மனித உறவுகளை இழக்க நேரிடும்.



முரண்பாடுகள் வராமல் ஒருவன் வாழ முடியாது. ஏனெனில் பல எண்ணங்கள் பரிமாறப்படும் பாரம் நிறைந்த பூமி இது. ஆகையால் இம் முரண்பாடுகளை அவ்வப்போது தீர்த்துக்கொள்வதே ஆரோக்கியமானதாகும். ஆரோக்கியமாக உளம் உடைய ஒருவர் முரண்பாடுகளை பேசித் தீர்த்துக்கொள்ள முயல்வார். வெளிப்படையாகப் பேசுதல் என்பது பல வகையான முரண்பாடுகளுக்கு தீர்வைக் கொடுக்கும்.

இம் முரண்பாட்டுத் தீர்வு என்பது பல அங்கங்களாக நோக்கவேண்டும். ஏனெனில் இது மிக அவதானமாக செயற்பட வேண்டிய தொன்று. முரண்பாடுகளும், பிரச்சினைகளும் சில சமயங்களில் நன்மை தருவனவாக அமைந்தாலும் கூட, பெரிதாகும்போது பெரிய அழிவைக்கூட ஏற்படுத்தும். ஆகவே முரண்பாட்டைத் தீர்க்கும்போது கடைப்பிடிக்க வேண்டிய அம்சத்தை அவதானமாக நோக்குவோம்.

முதலில் முரண்பாட்டில் சம்பந்தப்பட்ட நபர்கள் அனைவரும் தீர்வினை வழங்க வருகிற நபரை ஏற்றுக்கொள்ளவேண்டும். அடுத்து பிரச்சினைகளை தீர்ப்பவர் மனச்சாட்சி பூர்வமாக மிக நேர்மையாக தொழிற்பட வேண்டும். இரண்டு தரப்பினருக்கும் உரிய நியாயங்களை முன்வைத்தலுக்கு சமனான சந்தர்ப்பங்கள் வழங்க வேண்டும். அத்தோடு இம் முரண்பாட்டைத் தீர்க்கும்போது யாரையும் புண்படுத்தாது, தண்டிக்காது, அச்சுறுத்தாது இருக்க வேண்டும். ஏனெனில் அது விபரீதமான உள நிலைக்கு வித்திட்டு விடும். உளவியலில் முரண்பாட்டுத் தீர்விற்கான மூன்று நிலைகள் உண்டு.

01) தாழ்வுப்போக்கான வெளிப்பாடு.
02) உறுதியான வெளிப்பாடு.
03) ஆக்ரோச வெளிப்பாடு.

இதில் உறுதியான வெளிப்பாடே தீர்விற்கு சிறந்தது என உளவியலாளர்கள் கூறுகின்றனர். இம் முரண்பாடுகளை நல்ல முறையில் தீர்ப்பதற்கு ஆழ்ந்த பயிற்சியும், நல்ல திறனும் தேவை. இம் முரண்பாட்டை தீர்க்கும் உத்திகளை உளவியலாளர்கள் பல கட்டமைப்புகளுக்கூடாக ஆராய்கின்றனர்.

01) மனதை ஒரு நிலைப்படுத்தல்.

தீர்வு இடம்பெறும்போது மனம் அங்கலாய்ப்பது விபரீதமாகி விடும். ஆகவே மனதை ஒரு நிலைப்படுத்தும் உள நிலைப் பயிற்சிகளான தியானம், மூச்சுப்பயிற்சி, தளர்வுப்பயிற்சி, மந்திர உச்சாடனம், யோகாசனம் போன்றன குறிப்பிடப்படுகின்றன.

02) ஆளிடைத் தொடர்புகளை விருத்தி செய்தல்.

தொடர்பாடல் புரிந்துணர்வுகளின் மத்தியில் மாறுதல்கள் ஏற்படும்போது மேலும் பல முரண்பாடுகளுக்கு வித்திட்டு விடும். இத் தொடர்பாடல் விருத்தி அலகுகளாவன. தொடர்பாடல் நிலையைப் பேணுதல், பொருத்தமான நேரத்தில் தொடர்பு கொள்ளல், சிரித்தல், நலம் விசாரித்தல், அவரது கோணத்தினை புரிந்துகொள்ள முயலுதல், தேவை ஏற்படும்போது உதவி செய்தல் போன்றனவாகும்.

03) அவதானமாகச் செவிமடுத்தல்.

முரண்பாட்டைத் தீர்ப்பதில் இது மிக முக்கியமான அம்சம். அவதானமாக செவிமடுக்கும் வழிமுறைகளாவன. வடிகட்டாது செவிமடுத்தல், மதிப்பீடு செய்யாமல் செவிமடுத்தல், அதிக கேள்விகளின்றி செவிமடுத்தல், புதினம் பிடுங்கும் நோக்கம் இன்றி செவிமடுத்தல்போன்றன குறிப்பிடப்படுகின்றன.

04) ஒத்துணர்வு காட்டுதல் என்பது ஒருவரது மன உணர்வினுள் புகுந்து அதை எமக்கு பழக்கமாக்கிக் கொள்ளல், அதாவது ஒருவரது சப்பாத்தினுள் எனது காலை வைத்தால் எப்படி இருக்கும் என உணர்தலே இந்த நிலையாகும்.

05) கருத்து வேற்றுமைகள் வரும்போது இசை ஊக்க வெளிப்பாடு அல்லது உறுதியான வெளிப்பாட்டைக்காட்டுதல். அதாவது இங்கு கருத்து மோதல்கள் அதிகரிக்கின்றபோது தாழ்வான வெளிப்பாடு காட்டக்கூடாது. மூர்க்கமான வெளிப்பாடும் காட்டக் கூடாது. உறுதியான வெளிப்பாட்டைக் காட்டும்போது மற்றவரை குறை சொல்லாது புண்படுத்தாது தனது நினைப்பைக் கூறுதல் வேண்டும்.

06) கூட்டவலிமை.

இதில் எல்லோரும் சேர்ந்து தீர்வை வழங்கவேண்டும் என்பதில் உற்சாகமாக இருத்தல் என்பன உள்ளடக்கப்படும்.

இவ்வாறான உளவியலாளர்களின் தீர்வுக் கட்டமைப்பிற்கு ஏற்றவகையிலும், அந்த சந்தர்ப்பத்தில் ஏற்படும் எமது ஆளுமைப் பண்பிற்கும் ஏற்றவகையிலும் மிகவும் அவதானமாக தீர்வினை வழங்கவேண்டும். முரண்பாட்டைக் கொண்டு வந்தவர்கள் தீர்வினைப் பெற்று வெளியேறும்போது எந்த விதமான மனக் கோணல்களும் இன்றி நிரந்தரமான, நியாயமான, எதிர்காலத்தில் பொய்ப்பிக்கப்பட முடியாத தனித்தனியாக உள நிறைவு பெற்ற தீர்வோடு வெளியேறவேண்டும். இவ்வாறு இருந்தால் தான் சரியான முரண்பாட்டுத் தீர்வாக அமையும்.

"வாழ்க்கை என்பது இன்பமானது. வெற்றி, தோல்வி என்பது அவரவர் கைகளில் தான் தீர்மானிக்கப்படுகிறது."

ஆர்.கே.மேனன்

## பொறுக்கி எடுத்த பூக்கள்

### முது மொழி

முதியவர் ஒருவரை இளைஞர் ஒருவன் கிண்டல் செய்தான். அந்தக் கிண்டல் அவரின் முதிய தோற்றத்தை - தள்ளாமையைப் பற்றியதாக இருந்தது.

பொறுமை காத்த முதியவர் கடைசியில் கூறினார்; "மனிதர்கள் 60 வயதில் தான் மூப்படைகிறார்கள்: ஆனால் கழுதைகள் 20 வயதிலேயே அறளைபெயரும் அளவுக்கு மூப்படைந்து விடுகின்றன... நான் மனிதன்..." இளைஞன் கூனிக் குறுகிப்போனான்.

### இவர்கள் இன்றிருந்தால்

**சகுந்தலை:** துஷ்யந்தன் மீது ஜீவனாம்ச வழக்குப் போட்டிருப்பாள்.

**தசரதன்:** அந்நிய நாட்டிற்கு தொழில் தேடிப் போன மகனை நினைத்து புத்திர சோகத்தால் கண்ணீர் வடிப்பார்.

**நக்கீரன்:** குறுக்கு விசாரணையில் கைதேர்ந்த வழக்கறிஞராகியிருப்பார்.

**கம்பர்:** சினிமாவுக்கு பாட்டெழுதிப் பிழைப்பு நடத்துவார்.

**பாஞ்சாலி:** தன்னைப் பணயப் பொருளாக வைத்து சூதாடிய பாண்டவர் மீது மனித உரிமைகள் சட்டத்தின் கீழ் வழக்கு தொடர்ந்திருப்பார்.

### யூத மொழிகள்

- ☐ பொய் உன்னை வெகு தூரத்திற்கு அழைத்துச் செல்லும். ஆனால் மீண்டும் உன்னை வீடு கொண்டுவந்து சேர்க்காது.
- ☐ கடிக்க முடியாவிட்டால் பல்லைக் காட்டாதே...!
- ☐ அரைகுறையான உண்மை, ஒரு முழுமையான பொய்க்குச் சமன்.
- ☐ கடவுள் ஏழைகளை நேசிக்கிறார். ஆனால் பணக்காரர்களுக்கே உதவுகிறார்.
- ☐ மது வியாபாரி குடிகாரனை விரும்புவான். ஆனால் அவனை மருமகனாக ஏற்கமாட்டான்.

### ஓ...மனிதன் பாவம்

பாவம் மனிதன் என்றது குயில்,
'ஏன' எனக்கேட்டது கொக்கு.
ரசனை இல்லாதவன் மனிதன்
என்றது குயில்.
'ஏன்' என்று கேட்டது கொக்கு.
'டப்பாச் சங்கீதத்தை விரும்பி
ரசிப்பவனாக அவன் இருக்கிறான்
என்றது குயில்.'
'உண்மைதான் டப்பாமீனையுமல்லவா
ருசித்து உண்கிறான்' - என
ஆமோதித்தது கொக்கு.

### எண்ணம்

தந்தை மகனிடம் கேட்டார்.
'தம்பி மீன்கள் நீரில் வாழ்வது உனக்கு ஆச்சரியமில்லையா?'
பையன் சொன்னான்:
அது ஆச்சரியமில்லை அப்பா... தான் வாழ்ந்த நீரிலேயே அது கொதித்து குழம்பாகின்றதே அது தான் ஆச்சரியமாக இருக்கிறது!

கண்ணதாசன்.

### ஒரு கவிதை

**ஏழையின் வீட்டில்**


பிறை நிலவு கூரைக் கண்ணால்
பல்லிளித்துப்பார்க்கும்
பொட்டுகளாய் சூரியன் கை
கோலங்களைத் தீட்டும்.
தரைவெடிப்பு பூகோளப்
படங்களினைக் காட்டும்.
தணலின்றிச் சாம்பற் பூ
அடுப்புகளில் பூக்கும்.
எண்ணெயின்றி குப்பிலாம்பு
இருள்விழுங்கி மயங்கும்.
ஏழ்மையின் பசிப்பாடல்
ஏணையுள்ளும் கேட்கும்.
அன்னையின் தாலாட்டை
முகாரியிசை முடிக்கும்.
அடுத்த காலைப் பூபாளம்
அடிமனத்தை எரிக்கும்.

இரத்ன விக்கேஸ்வரன்

பொறுக்கி

உலகத்தில் எனக்குத் தேவைப்படாத பொருட்கள் ஏராளமாய் இருக்கின்றன - ஸாக்ரட்டீஸ்

# நேரத்தை சேமிக்க முடியாது; ஆனால் மிச்சப்படுத்த முடியும்





ஒரு தொழில் முயற்சியில் அல்லது ஒரு நிறுவனத்தில் இடப்பட்ட மூலதனத்தை, பணியாளர்களை, நிறுவனச்செலவுகளை என்று பல தரப்பட்ட விடயங்களை எவ்வாறு நிர்வகிக்கத்தெரிந்துள்ளதோ, அதேபோல் அலுவலக நேரத்தையும் நிர்வகிக்கத் தெரிந்திருக்கவேண்டும். ஏனெனில் ஒரு நிறுவனம் தனது குறிக்கோளை அடைவதில் எடுக்கப்படும் முயற்சிகள் குறித்த நேரத்திற்குள் அல்லது காலத்திற்குள் முடிக்கப்படாமல் தேங்கும் பொழுது அந்த நிறுவனத்தின் குறிக்கோள் மட்டுமல்ல அதனுடைய வளர்ச்சியும் பாதிக்கப்படும். ஆகவே ஒரு நிறுவனத்தின் உரிமையாளர் அல்லது நிர்வாகி, முக்கியமாக நிர்வகிக்க வேண்டியது நேரத்தை என்பது இதிலிருந்து நாம் புரிந்து கொள்ளலாம்.

## அலுவலக நேர்த்தை எவ்வாறு மிச்சப்படுத்துவது

ஒரு சிறந்த நிர்வாகியானவர் சில இயல்புகளை அல்லது நடவடிக்கைகளை ஆக்க பூர்வமாகச் சிந்தித்து செயற்படுத்தும்பொழுது, அலுவலக நேரமானது இயல்பாகவே மிச்சப்படுத்தப்படுகிறது. ஆனால் அலுவலக நேரத்தை மிச்சப்படுத்தும் விடயங்கள் எல்லா நிர்வாகிகளுக்கும் பொதுவானதாகக் காணப்பட்டபோதிலும், ஒரு தொழிலின் தன்மையானது இன்னொரு தொழிலின் தன்மையிலிருந்து மாறுபட்டுக்காணப்படுவதால், அதற்கு அமைவாகவும் அலுவலக நேரத்தை பயனுள்ள முறையில் அமைத்துக்கொள்வது சிறந்ததாகும்.

அந்தவகையில் சில பயனுள்ள நடவடிக்கைகளை ஆராய்வோம்.

- பொதுவாக அலுவலக நேரமானது எட்டு மணித்தியாலங்களைக்கொண்டுள்ளது. அந்த குறித்த நேரத்திற்குள் தலைமைப் பதவிவகிப்பவருக்கு பல கடமைகளை நிறைவேற்ற வேண்டி இருக்கும். அதில் ஒன்று கலந்துரையாடல்கள்.

ஆய்வுகளின் படி அனேக நிறுவனங்களில் கலந்துரையாடல்கள் குறித்த நேரத்தில் தொடங்கி குறித்த நேரத்தில் முடிவடையாததுடன் தீர்மானங்களும் எட்டப்படுவதில்லை. தீர்மானங்கள் எட்டப்பட்டாலும் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. மேலும் கலந்துரையாடல்கள் காலை 10.00 மணிக்கே நடாத்தப்படுகிறது.

எனவே கலந்துரையாடல்களின் எண்ணிக்கையைக் குறைப்பதுடன், நேரம் மாற்றியமைக்கப்பட்டு, அலுவலகம் விடும் நேரத்துக்கு ஒரு மணித்தியாலத்தின் முன்னர் நடத்துவது நேரச்சிக்கனத்துக்கு ஒரு சிறந்த தீர்வாக அமையும்.

- ஒரு நிர்வாகிக்கு ஏற்படக்கூடிய இன்னொரு காலநேர விரயம், அவரைச் சந்திக்கவரும் நபர்களுடனான உரையாடல் மூலம் ஏற்படுகிறது. இந்தப் பிரச்சினையானது நிர்வாகிக்கும் அவருடைய காரியதரிசிக்கும் இடையிலான புரிந்துணர்வுடன் கையாளப்படலாம். ஒரு குறித்த நேரத்தின் பின், கூட்டம் ஒன்று உள்ளது என நிர்வாகிக்கு நினைவுறுத்தப்படும்பொழுது வந்தவர் இயல்பாகவே வெளியேறிவிடுவார்.

- அடுத்தது முன்னுரிமை. இதில் அடுத்த நாள் வேலையில் எதனை உடனடியாக நிறைவே ற்றுவது, எதனைப் பின்போடு வது,எந்த வேலையை பிறரிடம் கையளிப்பது என்பதைத் தீர்மானிப்பதாகும். இவ்வாறு செயற்படுவதன் மூலம் வேலைப்பளு குறைவடைந்து நேரம் மிச்சப்படுத்தப்படுகிறது. அத்தோடு வேலைகளைச் சிறு சிறு பகுதிகளாகப் பிரித்து அட்டவணைப்படுத்தி காரிய மாற்றும் பொழுது, சில வேலைகளைத் தவறவிடுவது, வீணான செலவுகள் போன்றவை தவிர்க்கப்படுவதுடன் பல நாட்கள் தேவைப்படும் என தீர்மானிக்கப்பட்ட வேலை, சில நாட்களிலேயே முடிவடைந்துவிடும். அத்துடன் குறைந்த காலத்தில் கூடுதலான வேலையைச் செய்து முடிக்கக்கூடியதாக இருக்கும். வேலைத் திறன் அதிகரிக்கும். அதே சமயம் ஒவ்வொரு நாளும் எவ் வளவு வேலைகள் முடிந்திருக்கிறது என்று கணக்கெடுப்பது இலகுவாகிவிடும். எனவே இவ்வாறான செயற்பாடுகள் மூலமும் வேலைப்பளுகுறைவடைந்து நேரம் சேமிக்கப்படுகிறது.

- மிக முக்கியமான தொலைபேசி அழைப்புக்களைத் தவிர ஏனைய தொலைபேசி அழைப்புக்களைத் தவிர்த்துவிடுதல், அல்லது குறிப்பிட்ட நேர இடைவெளியைச் சொல்லி மீண்டும் அழைப்பை ஏற்படுத்து மாறு கூறுவது. பெரும்பாலும் நிர்வாகிகள் மதிய உணவின் பின் இம் மாதிரியான உரையா டல்களைக் கவனிப்பது நேரத்தை மிச்சப்படுத்துவதாகச் சொல்கிறார்கள்.

- தகவல் அறிக்கைகள், விளக்கக் குறிப்புக்கள் போன்றவற்றை அடையாளம் வைத்திருந்து பயணம் மேற்கொள்ளும் பொழுதோ, ஓய்வாக இருக்கும் பொழுதோ அல்லது வேறு எந்த வேலையும் இல்லாத சந்தர்ப்பங்களில் பார்த்துக்கொள்வதன் மூலம் தேவையற்ற கால நேர விரயத்தை தவிர்த்துக்கொள்ள முடியும்.

- நிர்வாகிகளின் செயற்பாடுகளைப் பார்த்துத்தான், அவர்களின் கீழ் பணிபுரிபவர்களும் செயற்படுவார்கள். எனவே அவர்களுக்கு நேர முக்கியத்து வத்தையும் நிறைவடைய வேண்டிய வேலையின் முக்கியத் துவத்தையும் விளக்குவதன் மூலமும் நேரத்தை மிச்சப்படுத்திக் கொள்ளலாம். இதனைச் செய்வதற்கு சிறிதுகாலம் எடுத் தாலும், சரியான விளக்கம் கொடுக்கப்படும்பொழுது வேலைகள் விரைவாக நிறைவேற்றப்படும். மற்றவர்களின் நேரமும் மிச்சமாகும்.

ஆகவே ஒரு நிறுவன நிர்வாகியானவர் தனது இயல்புகளை அல்லது நடவடிக்கைகளை மாற்றியமைத்து நேரத்தை பயனுள்ள வகையில் நிர்வகித்து, நிறுவன உற்பத்தியையும், செயற்திறனையும் அதிகரித்துக் கொள்ளமுடியும். நேரத்தை சேமிக்க முடியாது, ஆனால் மிச்சப்படுத்திக்கொள்ளமுடியும்.

சுபோஜினி


## வருடாந்த குருபூசை


ஜேர்மன் ஹம் ஸ்ரீகாமாட்சி அம்பாள் ஆலய முதல்வர் சிவஸ்ரீ - ஆ - பாஸ்கரக்குருக்கள் அவர்களின் தந்தையும் எனதுகணவருமாகிய சிவஸ்ரீ வீர.ஆறுமுகசாமி ஐயா அவர்களின் வருடசிவ பூஜைத்தினம் 06.12.2003 சனிக்கிழமை (பரணி நட்சத்திரல்) உருத்திரபுரம் சிவாலயத்தில் திருவாசக முற்றேதலுடன் நடைபெறும். அன்பர்கள் உறவினர்கள் ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்குமாறு வேண்டுகின்றோம்.

உருத்திரபுரம்,
சிவாலயம்,
கிளிநொச்சி.

(3373)

இங்ஙனம்,
மனைவி,மக்கள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## 2ஆம் ஆண்டு நினைவலைகள்



தாயின் மடியில் 27-09-1977

தமிழீழக் கடலில் 06-12-2001

கடற்புலி கப்டன் இளமாறன்
சதானந்தன் சுதாகர் (கிசோ)
-கிளிநொச்சி-

தமிழ் மண்ணை மீட்பதற்காய்
உயிர்நீத்த உத்தமனே!
அழுத கண்கள் ஓயவில்லை!
ஆறாய் நீர் சொரிகிறதே!
ஈராண்டு சென்றதய்யா
உன் நினைவு மாறவில்லை!
ஈண்டு வர மாட்டாயோ?
எமை யொருகால் பாராயோ!

தோணிக்கல்,
வவுனியா.

தகவல்: சதானந்தன்
வசுந்திராதேவி
குடும்பத்தினர்.

(சி-8819)

"வடமாகாணத்தின் மாபெரும் கணனிக் காட்சியறை"

நொதேன் ரெக்னோலஜி பிறைவேட் லிமிட்டட்

NORTHERN TECHNOLOGY(PVT)LTD



- சகலவகையான கணனிகளையும் நீங்கள் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
- இலங்கையில் எப்பிரதேசத்திலும் இல்லாதவாறு இரண்டு வருட உத்தரவாதம்
- இலகு தவணைக்கட்டண முறை

யாழ்ப்பாணத்தில்:-
இல:20,கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:-021-222 5653

வவுனியாவில்:-
இல:-52,2ம் குறுக்குத்தெரு,
வவுனியா.
T.P:-024-2221649

மன்னாரில்:-
இல:-31A,ஆஸ்பத்திரி வீதி,
மன்னார்.

(சி-8539)

"கணனி உலகின் காட்சிப்பெட்டகம்"

# அயின்ஸ்டயின் — சோவியத் உளவாளியா?

அயின்ஸ்டயின் (EINSTEIN) சோவியத் உளவாளி என அமெரிக்கா சந்தேகம் கொண்டதாம்!

இந்த நூற்றாண்டின் உயர் அறிவாளியாகக் கணிக்கப்படுகின்ற அல்பேட் அயின்ஸ்டயின் அமெரிக்காவில் வாழ்ந்தது சுதந்திரமாக அல்ல. எவ். பி. ஐ (F.B.I.) உளவாளிகளின் காவலின் மத்தியில் தான் என சமீபத்தில் தகவல் வெளியாகியுள்ளது. அவரது கடிதங்கள் திறக்கப்பட்டும், தொலை பேசி உரையாடல்கள் ஒட்டுக்கேட் கப்பட்டும், அவரின் பின்னால் அமெரிக்கா உளவு பார்த்ததும் தற்பொழுது வெளியாகியுள்ளது.

அமெரிக்கர்களின் பாது காப்புக் காவல்களில் மிகப்பெரிதாக விளங்குவது அணுக்கரு தொழிநுட்பமே. அணுக்கரு தொழிநுட்பத்தின் ஊடாக அமெரிக்காவிற்கு அணுகுண்டுகளை ஆக்கித்தந்த தத்துவ ஞானி எனச்சொல்லப்படுகின்ற அல்பேட் அயின்ஸ்டயின் இந்தப் பாதுகாப்புச் சுவருக்கு அடித்தளம் இடுவதற்கு கல் வழங்கிய ஒருவராவார். அப்படியான அயின்ஸ்டயின் சோவியத் உளவாளி என அமெரிக்கா சந்தேகப்பட்டது என்று ஒருவர் கேள்விப்பட்டால் அது முரண்பட்ட ஒரு பிரச்சினையாகவே தோன்றும். ஆயினும் அமெரிக்கா சந்தேகத்திற் குரிய ஒருவரை எப்பொழுதுமே சந்தேகமாகவே நினைக்கும். அல்பேட் அயின்ஸ்டயின் அவர்களை கைது செய்வதற்கு அமெரிக்காவின் உளவுத்துறை F.B.I நடவடிக்கை மேற்கொண்டிருந்தமை பற்றி தற்போது தகவல் வெளியாகியுள்ளது.

அல்பேட் அயின்ஸ்டயின் அமெரிக்காவிற்கு வந்த 1933 இல் இருந்து அவர் இறந்த 1955 வரை அங்கு காலம் கழித்த 22 வருட காலம் பூராகவும் F.B.I இன் உளவாளிகள் அவரைச் சுற்றி இருந்தார்கள். அவர்கள் அயின்ஸ்டயின் பற்றி 1800 பக்க அறிக்கையினைத் தயாரித்து இருந்தார்கள். இந்தக் கதைகள் அமெரிக்காவின் 'பிரெட் ஜெரோம்' எழுதிய 'த அயின்ஸ்டயின் பைல் (THE EINSTEIN FILE) என்னும் புத்தகம் வெளியான பின்பே வெறிச்சத்துக்கு வந்துள்ளது.

அதன்படி அயின்ஸ்டயின் அமெரிக்காவிற்கு வந்த நாட்தொடக்கம் அவரது தொலைபேசி அழைப்புக்கள் - உரையாடல்கள் அனைத்தும் F.B.I நிறுவனத்தினால் ஒட்டுக்கேட்கப்பட்டுள்ளது. அவருக்கு வந்த அனைத்துக் கடிதங்களும் முதலில் திறக்கப்பட்டது அவரால் அல்ல, F.B.I உளவாளிகளாலேயே.


பிச்சைக்காரர்களைப் போன்று உருமாறி வந்த இந்த உளவாளிகள் அயின்ஸ்டயின் வீட்டில் இருந்து வீசப் பட்ட குப்பைகளைக் கூட தோண்டிக் கிளறிப் பார்த்தார்கள். அங்கு இருந்த கடதாசித் துண்டுகளில் ஏதாவது எழுதப்பட்டிருந்தால் அவற்றைக் கூட F.B.I. தலைமையகத்திற்கு அனுப் பினார்கள். அதன் அனைத்து அறிக் கைகளும் தினமும் அப்போது F.B.I யின் பணிப்பாளராக இருந்த எட் காஹூவருக்கு அனுப்ப வேண்டியிருந்தது.

அது இரண்டாம் உலகமகாயுத்த காலம். இத்தாலியில் முசோலினிக்குப் பயந்து ஒழிந்தோடி வந்த புத்திமான்களைப் போலவே, ஜேர்மனியின் ஹிட்லருக்குப் பயந்து ஓடி வந்த யூதர்களும் அமெரிக்காவில் நிரம்பியிருந்தார்கள். இந்தக் காலத்தில்தான் ஜேர்மனியில் இருந்து வந்த லியோ சிலாட் மற்றும் இத்தா லியில் இருந்து வந்த யூதரான என் றிக்கோ பேர்ம் ஆகியோர் அயின் ஸ்டயினுடைய புத்திசாதுரியத்தைப் பயன்படுத்தி அணுகுண்டினை ஆக்கமுடியும் என்பதனை மிகத்தெளிவாக உணர்ந்து கொண்டது இந்தக் காலகட்டத்தில்தான். அவர்கள் இருவரும் இந்தச் செய்தியை அயின்ஸ்டயின் மூலமாக அமெரிக்க சனாதிபதி பிராங்ளின் ருஸ்வேல்ட்டிற்கு தெரியப்படுத்தினார்கள். ருஸ்வேட் அதற்கு உடன்பட்டார். F.B.I பணிப்பாளர் எட்கா ஹூவரி னுடைய பாதுகாப்பில் இருந்து அணுகுண்டு தயாரிப்பதற்குப் பணம் கிடைத்தது.அன்றிலிருந்து எட்கா ஹூவர் அயின்ஸ்டயினைப் பற்றி அறிவார். ஆனால் அயின்ஸ்டயின் அவர் பற்றி சந்தேகம் கொள்ள வில்லை. ஹூவர், அயின்ஸ்டயின் பற்றி சந்தேகம் கொண்டார்.

அயின்ஸ்டயின் அமெரிக்கா விற்கு வரும்போதும் உலகப்புகழ் வாய்ந்த ஒருவராகவே இருந்தார். ஆனபடியால் யாருடைய சந்தேகத் திற்கும் அவர் ஆட்பட்டிருக்கவில்லை. ஒளிச் சேர்க்கை பற்றிச் சொல்லப்படுகின்ற விசேட தொடர்புகள் பற்றிய கோட்பாட்டினை 1906 இல் கண்டுகொண்ட அவர், 1919இல் சாதாரண தொடர்புகள் பற்றிய தத்துவத்தினைக் கண்டறிந்தார். அணுகுண்டு தயாரிப்பதற்கு தேவையான கோட்பாடுகள் மற்றும் தொழிநுட்பங்கள் தோற்றுவிக்கப் பட்டது இந்த தத்துவங்களின் அடிப்படையிலேயே.

மனித வரலாற்றில் மிகவும் அறிவுள்ள ஆவணமாகவும், கோட்பாட்டு ரீதியில் மதிக்கப்படுவதும் அயின்ஸ்டயின் தத்துவம் பற்றியதே. அவருக்கு 1921இல் பௌதீக விஞ்ஞானத்தின் பொருட்டு நொபெல் பரிசு கிடைத்தது இந்தக் கண்டு பிடிப்பிற்காகவே.

இந்தப் புகழோடு ஜேர்மனியின் பேர்லின் நகரில் இருந்த அயின்ஸ்டயின், ஹிட்லரின் நாசி வாதத்தின் கீழ் கொல்லப்படவேண்டியவர்களின் பட்டியலில் இடம் பெற்றிருந்தார். அதிலிருந்து தப்பித்துக கொள்வதற்காகவேஅவர் அமெரிக்காவிற்கு ஒழித்தோடிவந்தார்.



அமெரிக்காவிற்கு வந்த அவருக்கு மான் ஹட்டன் செயற்திட்டத்தின் கீழ் அணுகுண்டு தயாரிக்கும் நடவடிக்கைகட்கு ஆலோசனைகள் வழங்க நேர்ந்தது. பிரின்ஸ்டன் பல் கலைக்கழகத்தில் பௌதீக விஞ்ஞான பேராசிரியராக கடமையேற்ற அயின்ஸ்டயினிடமிருந்து உலகத்தவர்களுக்கு விகாரரூபமுள்ள பேராசிரியர் பற்றிய மாதிரி கிடைத்தது.

தலை முடியை சரியாக வாரி விடாமலும், சிறுசாகப்போன மேற்சட்டைகளையும் அணிந்துகொண்டு, சுங்கான் பைப்பையும் உறுஞ்சிக்கொண்டு பல்கலைக்கழகத்தின் விறாந்தை நீளத்தில் நடந்துதிரியும், நினைத்த வேளையில் சென்று கடற்கரையில் வயலின் வாசிக்கும், சைக்கிளில் ஓடித்திரியும், அயின்ஸ்டயின் அறிவு ஒளியினைத் தாங்கிக்கொண்டு வாழ்ந்த பொறுப்பற்ற ஒழுங்கில்லாத ஒருவராவார்.

அணுகுண்டு தயாரிக்கும் லொஸ் எலமொஸ் ஆய்வு மையத்திற்கு இந்த ஒழுங்குமுறையில்லாத மனிதன் என்றுமே போகவில்லை. அங்கு இருந்தது சிலட் மற்றும் பேர்மி மாத்திரமே. ஆலோசனைகள் தேவைப் பட்டபோது அவர்கள்கடற்கரையிலோ அல்லது நடுவழியிலோ அயின்ஸடயினைப் பிடித்துக்கொண்டார்கள்.

இறுதியில் அணுகுண்டு தயாரிப்பில் ஹிட்லர் ருசியாவின் ஸ்டாலினிடம் தோற்றுப்போயிருந்தார். பிரித்தானியா குற்றுயிராக இருந்தது. அமெரிக்காவிற்கு ஜப்பானிடமிருந்து எச்சரிக்கை இருந்தது.

அது 1945 ஆகஸ்ட் 6 ஆம் திகதி ஜப்பான் மீது குண்டு போடப்படும் என்பதை அயின்ஸ்டயின்கூட அறிந்திருக்கவில்லை.

ஆனால் அங்கு ஏற்பட்ட அழிவுகளைக்கண்டு அயின்ஸ்டயின் அதிர்ச்சி அடைந்தார். அவர் தனியாக கடற்கரைக்குச் சென்று வயலின் வாசித்தார். அமெரிக்கா முழு உல கத்திலும் அணுகுண்டு வளர்ச்சியில் மிகப்பெரிதாக எழுந்து நின்றது. உலகப் பொலிஸ் காரனாக அமெரிக்கா உருமாறியதும் அன்று தான்.

அமெரிக்காவிற்கு இப்பொழுது எச்சரிக்கையாக உள்ளது ருசியாவே. ருசியா அணுகுண்டினை உற்பத்தி செய்துவிட்டதென்றால் அதற்கு அமெரிக்காவும் கீழ்ப்படியநேரிடும். ஆனாலும் அணுகுண்டுத் தொழிநுட்பம் அறிந்த அயின்ஸ்டயின் என்னும் பிரபல விஞ்ஞானி இன்னமும் இருப்பது அமெரிக்காவில்தான். அவர் ருசியாவோடு தொடர்பினை புதிதாக உண்டாக்கிக் கொண்டுள் ளாரா? எவ்.பி.ஐ உளவுத்துறையினர் அதைப் பற்றியும் ஆராய்ந்தார்கள். அதன்படி அயின்ஸ்டயினின் கோப் பில் மேலும் பக்கங்களைச் சேர்க்கத் தொடங்கினார்கள்.

பிரெட் ஜெரோம் புத்தகம் எழுதியதால் இப்பொழுது உலகில் பிரபல்யம் பெற்று இருப்பது அந்த உளவாளிகள் அயின்ஸ்டயின் பற்றி சொல்லியவைகளே - அவரைப்பற்றித் தேடிப்பார்த்த விடயங்கள். ஆனாலும் அயின்ஸ்டயின் பற்றி பிரபல்யமானவைகளுக்கும் மேலே சென்ற பெரிய இரகசியத்தினை வெளிப்படுத்தியிருக்கவில்லை.

ஹிட்லரைப் போன்று ஜப்பானைத் தோற்கடிப்பதற்கு அமெரிக்காவிற்கு உதவி செய்தயூதர்களுக்கு செய்ந்நன்றியை கௌரவபடுத்துவதற்கு அமெரிக்கா நிர்மாணித்த இஸ்ரேலின் சனாதிபதிப் பதவியை பெறும்படி அயின்ஸ்டயினுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அவர் அதனை ஏற்றுக்கொள்ளமறுத்து விட்டார். ஆனாலும் அவர் இஸ்ரேலுக்குச் சென்று ஜெரூசலேமின் ஹிபுறு பல்கலைக்கழகத்தை உண்டாக்குவதற்கு அவர் பிரயாசைப் பட்டார்.

1879 மார்ச் 14ஆம் திகதி ஜேர்மனியில் பிறந்தும் 1940இல் அமெரிக்காவின் குடியுரிமை கிடைத்த அயின்ஸ்டயினின் பற்றி இன்று அமெரிக்கர்கள் பெருமையாகப் பேசிக்கொள்கின்றார்கள். F.B.I உளவாளிகள் அயின்ஸ்டயின் வாழ்க்கையில் குறுக்கிட்டது பற்றி அவர்கள் எந்த அளவிற்கு மகிழ்ச்சியின்றி இருந்தார்கள் என்பது பற்றி அறிந்து கொள்வதற்கு பிரெட் ஜெரோம் தனது புத்தகத்தின் மூலம் F.B.I உளவாளிகள் மீது குற்றச் சாட்டுக்களைச் சுமத்தியதன் மூலம் அறியமுடிகிறது.

இரண்டாயிரமாம் ஆண்டு அண்மித்த போது சர்வதேச ரைம் (TIME) சஞ்சிகை இந்த நூற்றாண்டின் சிறந்த மனிதர் (PERSON OF THE CENTURY) என அயின்ஸ்டயின் அவர்களைத் தேர்ந்தெடுத்ததன் மூலம், அயின்ஸ்டயினுக்கு உலகத்தவர்களிடையே இருக்கும் வரவேற்பினைத் தெரிந்துகொள்ளமுடிகின்றது.

TIME சஞ்சிகையினால் இறுதியாகத் தெரிவு செய்யப்பட்ட அமெரிக்காவின் புகழ்வாய்ந்த சனாதிபதியான பிராங்ளின் ருஸ்வேல்ட், மற்றும் மகாத்மாகாந்தி ஆகிய இருவரோடு தான் அயின்ஸ்டயின் முன்னணிக்கு வந்துள்ளார். தற்போது உலகில் உயிர்வாழ்ந்துகொண்டிருக்கும் சிறந்த பௌதீக விஞ்ஞானியாக மதிக்கப் படும் ஸ்ரீவன் ஹோகின் "இன்னமும் ளங்களில் யாராலுமே அயின்ஸ்டயின் அறிவு ஒளியினைக் கடந்து போக முடியாமல் உள்ளது" என குறிப் பிட்டுள்ளதும் கவனத்தில் கொள்ளத் தக்கதே.

**வல்வையூரான்**

---

# கெனடியின் கொலைக்கு திட்டமிட்டது யார்?

'நாடு உனக்கு என்ன செய்ததென்று கேளாதே
நாட்டுக்கு நீ என்ன செய் தாய் என்று கேள்"

அந்த அற்புதமான தத்துவத்தை உலகுக்கு அறிமுகம் செய்தவர்தான் ஜோண் கெனடி. ஆக இளம் வயதில் அமெரிக்காவின் சனாதிபதியானவர். குறுகியகாலத்தில் அமெரிக்க மக்களை, உலகத் தலைவர்களை, உலக மக்களை கவர்ந்தவர். ரெக்ஸாஸ் மாநிலத்தில் திறந்த காரில் நின்றபடி சென்றுகொண்டிருக்கும் பொழுது தொலை தூரத்தில் இருந்து லீஹார் வி ஒஸ்வோல்ட் என்பவனால் ஸ்னைப்பர் துப்பாக்கி மூலம் சுடப்பட்டு, காரில் தன்னுடன் இருந்த மனைவி ஜக்குலினின் மடியில் விழுந்து உயிர் துறந்தவர்.

அமெரிக்க அரசைப் பொறுத்த வரை லீஹார் வி ஒஸ்வோல்ட் இன்னொருவரால் கொல்லப்பட்டதோடு கெனடி கொலை வழக்கு கோவை மூடப்பட்டுவிட்டது.

ஆனாலும் மெலிதான குரல்களில் சந்தேகங்கள் எழுப்பப்பட்டுக் கொண்டு இருந்தன.

கெனடி கொல்லப்பட்ட தினமான 1963 நவம்பர் 22ம் திகதிக்கு 40 வருடங்களுக்கு பின், பிரான்ஸ்சைச் சேர்ந்த இரண்டு புலனாய்வு - ஊடகவியலாளர்கள், கெனடியைத் தொடர்ந்து வெள்ளை மாளிகையில் பதவியேற்ற லிண்டன் பி ஜோண் சனும், ரெக்ஸ்ஸாஸ் எண்ணெய் தொழில்துறையும் இக் கொலையின் பின்னணியில் இருந்ததாக குற்றம் சாட்டியிருக்கிறார்கள்.

ரெக்ஸ்ஸாஸ் எண்ணெய் தொழில்துறையின் நலன்களை ஜோண்சனே பிரதிநிதித்துவப்படுத்தி வந்தார். மூன்று வருடங்களாக அவர்கள் மேற்கொண்ட புலனாய்வுகளின் பெறுபேறுகள், "ஜே.எப்.கே - கடைசி சாட்சி" என்ற நூலில் தரப்பட்டுள்ளன.(**JFK- The LAST witness**)

வில்லியம் றேமண்ட், பேணாட் நிக்கலஸ் ஆகிய இருவரும் பிரான்ஸ்சில் தீர்க்கப்படாமல் இருந்த பல மர்மக்கொலைகளைத் தீர்த்து புகழ்பெற்றவர்களாவர். இவர்கள் கெனடி படுகொலையை ஆராய முன்வந்தார்கள். அமெரிக்காவிலான தமது பயணங்களின்போது முன்னைய விசாரணையாளர்களால், பெரும் தொகையான சான்றுகளும் அனுகூலமாக பயன்படுத்தப்படாமல் விடப் பட்டிருப்பது கண்டு ஆச்சரியமடைந்தனர்.

லீஹார் வி ஒஸ்வோல்ட் ரெக்ஸ்ஸாஸின் பாடசாலை நூல்கள் காப்பகத்திலிருந்துதான் கெனடியைச் சுட்டிருந்தான். அந்தக் காப்பகத்தில் வெற்றுப் பெட்டியொன்றில் இருந்த விரலடையாளங்களுடன் இந்த புலனாய்வு -ஊடகவியலாளர்கள் தங்கள் பணியை ஆரம்பித்தார்கள். இவர்களது விசாரணைகள் இந்தப் பெட்டியை இதுவரை அறியப்படாதிருந்த மக்வலஸ் என்ற நபருடன் தொடர்புபடுத்தின. தொழில்சார் கொலைஞான இவன், FBI இன் பாதுகாப்புக்கு உட்படுத்தப்பட்டு இருப்பவன். ஒஸ்வோல்ட்டின் பணிக்கு இவர் உதவியதாக இந்த விசாரணையாளர்கள் கூறுகிறார்கள்.



கெனடியை கொல்வதற்கு அப்போது அமெரிக்க உப சனாதிபதியாக இருந்த லிண்டன் பி ஜோண்சன், இந்த நபரைத்தான் அமர்த்தியிருந்தார் என இந்த இருவரும் கூறுகிறார்கள்.

ஜோண்சனுடன் அடிக்கடி தொடர்புகொள்பவர் என்று இந்த இருவரும் நிறுவியிருக்கும் இந்த நபருக்கு வேறு ''ஊருணர்வு கொண்ட" பணிகளும் ஜோண்சனால் வழங்கப்பட்டுள்ளன. கெனடி கொல்லப்பட்டால், வெள்ளைமாளிகையில் பதவியேற்கப்போகும் நபராக இந்த ஜோண்சனே இருந்தார்.

லிண்டன் ஜோண்சனுக்கும், மக்வலஸ்சுக்கு மிடையேயான தொடர்பை நிறுவுவதற்கு அவர்கள் ரெக்ஸாஸ் எண்ணை தொழில் துறையின் இதயப்பகுதிக்கூடாக செல்லவேண்டியிருந்தது. ஆர்வமூட்டும் விடயமாக இந்த விசாரணையாளர்களுக்கு இருந்திருக்கிறது.

கடந்த இளவேனிற் காலத்தில் ஈராக் மீதான அமெரிக்க தாக்குதல்களை தூண்டியதற்கு பொறுப்பானது என இந்த தொழில்துறை மீதே குற்றம் சாட்டப்பட்டிருந்தது தான் இந்த ஆர்வத்திற்குக் காரணமாகும். இதே தொழிற்றுறையினர், 40 வருடங்களுக்கு முன்னதாக, மக்வலஸ் மூலமான கெனடியின் மரணத்துக்கு எதிர்ப்பின்றி இணங்கியதற்கு, கெனடியை செயலிழக்கச் செய்யவேண்டும் என்று அத்தொழிற்றுறையினர் விரும்பியதே காரணம் என்று இந்த ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

இப்படி விரும்பியதற்கு வலுவான காரணமும் இருந்தது. எண்ணெய் தொழிற்றுறைக்கான வரி மற்றும் நிதித்துறை சலுகைகள் என்ற வகையில் கிடைத்துவந்த 300 மில்லியன் டொலர்கள் அளவான சலுகைகளை இரத்துச் செய்ய கெனடி முடிவெடுத்திருந்தார்.கெனடி படுகொலையோடு தொடர்புபட்ட சகல மர்மங்களையும் தீர்த்துவிட்டோம். என்று நாம் கூறமாட்டோம். ஆனால் 1963 நவம்பர் 22ம் திகதி நிகழ்ந்த வரலாற்றுப்புகழ் பெற்ற நிகழ்வுகள் தொடர்பான முற்றிலும்புதிய கோணத்தில் ஆராய்வதற்கான திறவு கோல்களை நாம் வெளிப்படுத்தியி ருக்கிறோம் என்று இந்த புலனாய்வு - ஊடகவியலாளர்கள் முடிவாக கூறியிருக்கிறார்கள். ஈராக்கிய பேரழிவு ஆயுதங்கள் என்ற வாதம் இன்னொரு முறை தோலுரிக்கப் பட்டிருக்கிறது.

மொழியாக்கம்:- வின்சென்ற் புளோறன்ஸ்
ஆதாரம்: சண்டேஐலண்ட்

(15ஆம் பக்கத் தொடர்ச்சி)



இந்தியப்படையினரின் தேடுதல் பன்குளக் காட்டுப் பகுதியில் அடிக்கடி இடம்பெறுவதால் இறுக்கமான நிலையேற்பட்டது. இவ் வேளையில் டெக்காரில், தவராசா, ஹொசான் ஆகிய போராளிகள் சங்கிலித் தொடர் ரனைற் பொறி வெடியை விதைத்திருந்தார்கள். இதில் சிக்கி ஏழு படையினருக்கு குறையாது மாண்டுபோயினர்.

விஜயண்ணனை குடும்பத்தோடு பாதுகாப்பாக தம்பலகாமம் ஊர்ப்பக்கம் போய்ச்சேர போராளிகள் உதவினார்கள். அங்கு சுஜனின் தாயின் வளவினுள் அவர் தன் குடும்பத்தோடு குடியமர்ந்தார். அத்தாயின் அரவணைக்கும் இனிய குணம் பாலைவனத்தில் கடுஞ்சூட்டில் வெந்து மாயும் ஒருவருக்கு, அங்கே பசுந்தரை சந்திப்பதுபோல அவருக்கு அப்போது ஆறுதல் அளித்தது.

போர் அமைதி 1990இல் ஏற்பட்டு சில மாதகால இடைவெளிகளுக்குப் பின் புதிய போர்க்காலச் சூழலுக்குள் போக அமைதி கலந்து போயின.

அவர் மீண்டுமொரு இடப்பெயர்வைச் சந்தித்தார். தனக்கு நெருக்கமான மாணிக்கம்ஐயா குடும்பம் உப்பாற்றில் இருப்பதனையறிந்து அக்குடும்பத்தோடு சேர்ந்தார். அங்கு மாணிக்கம் ஐயா, மனைவி, பிள்ளைகள் என அனைவரும் போராளிகளுக்குச் சமைத்துக் கொடுக்கும் பணிகளில் முழுமையாக மூழ்கிப்போய் இருந்தார்கள். அவர்களுக்கு பக்கத்துணையாக விஜயண்ணனின் குடும்பமும் இருந்து உப்பாறில் அவர்களது வாழ்க்கை நகர்ந்தது. .

சிங்களப்படையினரின் அழுத்தங்கள் எல்லாவகையிலும், எல்லாவழிகளிலும் ஆரம்பித்ததும், இனியும் குடும்பத்தை அங்கு வைத்திருப்பதில் ஆபத்துக்கள் இருபதனையுணர்ந்த அவர், குடும்பத்தை வன்னிக்கு அனுப்பிவிட்டு இறைவடி முகாம் போராளிகளின் பணிகளுடன் தன்னைக் கலந்தார்.

அக்காலத்தில் மட்டக்களப்பு போராளிகள் நூற்றுக்கணக்காக யாழ்ப்பாணப் போர்க்களத்தை நோக்கிப் பயணித்தார்கள். அப்போராளிகள் இறைவடி மணலாறு கூறு பகுதியில் வந்து சேரும்போது சமையற்பணி ஒழுங்குகள் செய்த முன்னணிப் போராளிகளான றெஜி, விஜய், ரவி, செல்வண்ணன் ஆகியோருடன் விஜயண்ணன் இணைந்து உழைத்தார்.

சொற்ப காலத்துக்கு பின்னர் அவர் கடவாணை எழுச்சி முகாம் போராளிகளிடம் போய்ச் சேர்ந்து, வேவுப்பணிகளிலும், பாதை வழிகாட்டும் பணிகளிலும் தன்னை ஈடுபடுத்தினார். அப்போது அவர் 849 ஆயுதமொன்றை தன் பாதுகாப்புக்கு என வைத்திருந்தார்.

எழுச்சிகாட்டு மரங்கள் நீண்ட வரலாற்றைக் கொண்டவை. மரங்கள் நிமிர்ந்து சோலையாகவும், கெரில்லா வீரனுக்கு அரணாகவும், எதிரிக்கு சவால்களாகவும் இருந்தன.

காட்டில் மரங்கள் காற்றில் அசையும் ஒலியும், மரக்கிளைகளில் அமர்ந்து தூங்கிக்கொண்டிருக்கும் பல்வேறு வகையான பறவைகள் சிறகடிக்கும் ஓசையும்.

இரம்மியமான காலைப் பொழுது பல்வேறு வகையான சிறு பறவைகளின் இன்னிசைக் கானமும், பொழுது போக்கும் சம்பவங்களும் உள்ள காட்டு வாழ்வில் இதுபோன்ற உயிர்த் துடிப்புள்ள விசயங்கள் அவர்களின் மன வெற்றிடங்களை நிரப்பின.

மான், மரை, உடும்பு வேட்டைகள் எனப் போராளிகள் சென்று பலனுடன் முகாம் திரும்புகையில், அவர்களைப் பரிவோடு அரவணைக்கும் முகாம் போராளிகள் இறைச்சி வாட்டத்தொடங்கினால் நெருப்பின் தாக்கம் பரவுமாறு புரட்டிப் புரட்டி வாட்டுவார்கள். நெருப்பு வெப்பம் காட்டக் காட்ட கல கல வென்று இறைச்சி கல்லாய் இறுகத் தொடங்கியதும், திருப்தி அடைவார்கள். அவ் முகாம் பொறுப்பாளராக மது இருந்தார். சுஜன், கெங்கா. அன்சார், கோபி, அண்ணாச்சி, திலகண்ணாச்சி, சபா, ஜெயன், திலகன், மண்டேலா, றொசான், கிறேசன், சூட்டி, கண்ணன், றொகான் ஆகிய போராளிகளுடன் இன்னும் பல போராளிகள் முகாமில் இருந்தார்கள். அப்பிரதேசத் தளபதியாக விக்கி இருந்தார்.

மது தலைமையில் பன்குள வீதியில் சிங்களப் படையினரின் வாகனம்மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு, 15க்கு மேற்பட்ட படையினர் இறந்தார்கள். AKLMG உட்பட பல ஆயுதங்களும் போராளிகளால் கைப்பற்றப்பட்டன. அதில் திலகன் வீரச்சாவடைந்தார்.

விஜயண்ணன் நெஞ்சத்து பசுமையில் நிலைத்துவிட்ட போராளி திலகனின் இழப்பு அவரின் நெஞ்சை அமுக்கும் துயரச்சுமையாகவே அவருக்கு இருந்தது. அப்போராளியுடன் விஜயண்ணன் காட்டில், கல்லிலும் முள்ளிலும் கால்கடுக்க நடந்திடும் துன்பத்தைக் கூட தாங்கும் அவரின் மனத்திற்கு கவலை ஊடுருவவேசெய்தது.

சிலவாரங்களின் பின்பு ஒரு நாள் குரங்குப்பாலம் (மங்கிபிறிச்) சிங்களப்படை முகாமிலிருந்து ஏவப்பட்ட நூற்றுக்கணக்கான செல்களால் எழுச்சி முகாம் பகுதி அழிக்கப்பட, இன்னொரு புறம் சிங்களப்படையினர் முகாமைச் சுற்றிவளைத்துத் தாக்கினார்கள். போராளிகளால் எதிர்த்துச் சண்டையிடப்பட்டும் பலன் அளிக்கவில்லை.முகாமைக் கைவிட்டு விட்டு, அண்மையில் உள்ள சிரட்டைக் கிணறு பகுதியில் மீள முகாம் அமைத்தார்கள். அவ்வேளை எதிரியின் மிதிவெடியில் சிக்கி திலகண்ணாச்சி வீரச்சாவு அடைந்தார்.

அடர்ந்த மரச்செடிகளிற்கிடையே வெள்ளி உருக்கினாற் போன்ற நீர்த்தேக்கம். அதுவே வெள்ளைக்கல் ஊற்று போராளிகளின் தாகம் தீர்க்கும் தாய். அங்கிருந்து அன்சார்,மண்டேலா ஆகியோருடன் விஜயண்ணன் வேவுப் பணிகளுக்காகச் சென்று வந்தார். பன்குளம் முதலாம் கண்டம் கண்ணி வெடித்தாக்குதல் முயற்சியின்போது அன்சார் வீரச்சாவு அடைந்தார். எந்த இடர்களையும் நகைச்சுவையாக மாற்றிப் போராளிகளை உற்சாக மனோநிலையில் வைத்திருக்கும் சிறந்த பண்புள்ள, நீண்ட போராட்ட அனுபவம் பெற்ற போராளியின் இழப்பு என்பதனால் விஜயண்ணன் உட்பட அனைவரையும் சோகத்தினுள் ஆழ்த்தியது.

இப்படியாக நாட்கள் நகர பன்குள வீதியில் வரலாற்று முக்கியத்துவம் மிக்க கண்ணிவெடித் தாக்குதலொன்று சூட்டி தலைமையில் மேற்கொள்ளப்பட்டது. அதில் பிரிகேடியர் லக்கி விஜயரட்ண (இறந்த பின்னர் மேஜர் ஜெனரல்) திருமலை மாவட்டப் பொலிஸ் அதிகாரி உட்பட உயர்படை அதிகாரிகள் கொல்லப்பட்டார்கள்.

இவ் வெற்றித் தாக்குதல் செய்தி விஜயண்ணன், போராளிகள் என அனைவருக்கும் புதுத்தெம்பூட்டியது. அத்தோடு தமிழீழ தேசமும் பெருமையடைந்தது.

இப்படி நாட்கள் ஓடிக் கொண்டேயிருந்த சமயத்தில்தான் விளாங்குளம் பகுதியில் எதிரி புதைத்த கண்ணி வெடித்ததில் விஜயண்ணன் காயங்களுக்குள்ளாகினார்.அவர் பயணக்களைப்புடன் மிகவும் களைப்பாகவே அப்போது காணப்பட்டார். முகத்தில் மரணபயம் துளியளவுகூடத் தென்படவில்லை. சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்.

காயங்கள் சுகம் பெற்றதும் செம்மலையிலுள்ள தன் குடும்பத்தோடு சேர்ந்து கொண்டதும் பாச உணர்ச்சியின் ஆனந்தக்கூத்தில் குடும்பத்தினர் அனைவரும் திளைத்தார்கள். அவர்கள் ஒன்றுசேர வேண்டுமென்கிற எதிர்பார்ப்பு அன்றுதான் நிறைவேறியது.

செம்மலைக் கரையோர விநியோகத்தளம் திருமலை மாவட்ட நிர்வாகத்தினரால் நிர்வகிக்கப்பட்டு வந்தது. நியூமன், சின்னண்ணன், ராஜேஸ் என பொறுப்பாளர்கள் மாறி மாறி இருந்த 18 மாதங்கள் விஜயண்ணன் குடும்பமும் நெருப்புடன் இணைந்து அயராது சமைத்துக் கொடுத்து உதவினார்கள். செம்மலை சிவலிங்கம் அண்ணன் குடும்பத்தாரும் பக்கத்துணையாக அக்காலப் பகுதியில் இருந்தார்கள்.

இதன் பிற்பாடு வள்ளியுனம் கணேஸ் திட்டக் குடியிருப்பில் குடும்பமாக வாழ்ந்து வரும் காலத்தில் அவர்களது குறிக்கோள் பிள்ளைகளிலும் படர்ந்து செழித்து விடுகின்றது. மூன்று பிள்ளைகளும் தம்மை முழுமையாக இயக்கத்தில் இணைத்துக்கொண்டார்கள். மீண்டும் தனிமை இருவரையும் வருத்தியது. எத்தனை எத்தனையோ இன்னல்களையெல்லாம் ஏற்றுக்கொண்டு இல்வாழ்க்கையில் ஏற்றத்தாழ்வுகளில் எல்லாம் இணைபிரியாது வாழ்ந்தார்கள்.

அவரின் பிள்ளைகளான மேகன்,சுடர்சேரன் தமிழ் இனத்தின் விடிவுக்காகவும், உயர்ச்சிக்காகவும், பாதுகாப்பதற்காகவும் கடினமாக உழைத்து உயிரை அர்ப்பணித்து இத் தாய் மண்ணுக்கே உரமாகினார்கள்.

இரு பிள்ளைகள் வீரச்சாவு அடைந்த நாட்களின்போது தன் மனைவியின் சோகத்தை அவரால் கண்கொண்டு பார்க்க முடியாமல் அவரும் கவலையில் மூழ்கியிருக்கும் சந்தர்ப்பத்தில் கதறி அழவேண்டும் போல வேதனை வருடியது, வதைத்தது.அவரின் கண்கள் கண்ணீரைக் கருக்கட்டி முட்டிக்கொள்ளும்போது தன் கையால் துடைத்துக் கொள்வார். அவர்களது வாழ்வின் எந்த நிலையிலும் உடைந்து போகாதவர்கள் நொருங்கியே போனார்கள்

சோகத்திற்கு மட்டுமல்லாமல் துணிவிற்கும் நிரம்ப இடமுடைய நெஞ்சங்களுக்கு தாங்கள் சொந்தக்காரர்கள் என்பதை நிரூபிப்பதுபோல, வழமையான வாழ்க்கையை வாழத் தொடங்கினார்கள். சில ஆண்டுகள் இயக்கத்தில் சேவையாற்றிய பின் மகன் சுரேந்திரன் வீடு வந்து சேர்ந்தார்.

அவரும் மனைவியும் சேர்ந்து வைத்த மண்சுவர் வீட்டில் இப்போதும் வாழ்ந்து வருகின்றார்கள். ஏழ்மையான என்றாலும் தம் தனித்துவத்தை இழக்காது நற்பெயருடன் வாழ்கின்றார்கள்.

தமிழரின் நியாயபூர்வமான உரிமைகள் வென்றெடுக்க விடுதலைப்புலிகள் இன்று மரபுவழிச் சமரணியாக விரிவாக்கம் பெற்றுள்ளனர். இவ் விடுதலைப் பயணத்தில் விஜயண்ணன் போன்ற தமிழ்த் தேசப்பற்றாளர்களது அர்ப்பணிப்பு நிறைந்த வாழ்வும், வரலாறும் தமிழீழ இலட்சிய உறுதிக்கு உரமேற்றுபவையாக அமையும்.

பிறக்கும்போது யாருமே இலட்சியத்துடன் பிறப்பதில்லை. சந்தர்ப்பங்கள், சூழ்நிலைகள்தான் வழிநடாத்திச் செல்கின்றன. அத்தகையதொரு சூழ்நிலையில் தான் விஜயண்ணனின் இலட்சிய தியாக வாழ்வு இருந்துள்ளது. அக்குடும்பத்தைக் கௌரவிப்பதில் தமிழீழ தேசம் பெருமை கொள்கின்றது. ●

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –46



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –46

.............................................................
.............................................................
.............................................................
.............................................................

பெயர் : .........................................
முகவரி : .........................................
.........................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –45



ம.பாலன்-மரியதாசன்,
புதிய
புன்னைநீராவி நகர்,
விசுவமடு -03.

## பரிசுக்குரிய வரிகள்

மண்மீட்கத் துணை நின்ற மாவீரன் நீயானாய்
விண்நின்று களிகொள்ளும் தியாகத்தின் சுடரானாய்
உன் சிலைகண்டு நெஞ்சுருகும் உன் அருமைத் தாயானேன்
மலர்மாலை கொண்டுன்னை நிலைமாறி அழுகின்றேன்.

## பாராட்டுக்குரிய வரிகள்

*விழி மூடி துயில்கின்ற வீர மகளே(னே)*
*விடிவெள்ளி பூத்ததம்மா ஈழமதில் - உன்*
*தணியாத தாகம் பணியாது - என்றும்*
*தலைவணங்கும் எம் தேசம்.*

பூ.நளாயினி,
புதுக்குடியிருப்பு.

*எத்தனை குழிகளில் விதைத்தோம்*
*எங்கள் விழிகளை நனைத்தோம்*
*அத்தனை குழிகளும் உயிர்க்கும்*
*உங்கள் ஆசைக்கனவுகள் பலிக்கும்.*

த.பாபு,
பளை.

*தாயகம் காத்த வீரர்களை - நினைத்திடும்*
*நன் நாள் இன்று தாயே,*
*கலங்காதே உன்மகன் - எம்*
*தேசத்தின் செல்வங்களில் ஒன்று.*

ப.அகிலன்,
மல்லாவி.


*கருவறையில் நீ சுமந்தவரை*
*கல்லறையில் தழுவவில்லை - தமிழ்*
*ஈழத்தாயின் கருவறையிலேயே*
*ஆரத் தழுவுகிறாய் - அம்மா.*

செ.நந்தன்,
பருத்தித்துறை.

*தாயே உன் கருவறையில் சுமந்த சேயைய்*
*கல்லறையில் கண்டு களங்காதே,*
*இவள் வீரியம் உள்ள வித்து*
*நாளை ஈழமதில் முளைவிடுவாள்.*

ர.சுயான்,
மல்லாவி.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை
அருச்சுனா புகைப்படக் கலையகம் வழங்குகின்றது.
புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.











மேல், அவுஸ்ரேலியாவில் இடம்பெற்ற மாவீரர் நாள் நிகழ்வுகளின் கலைநிகழ்வுகளின் காட்சிகள்.

மேல் வலது, மாவீரர் நாளை ஒட்டி முல்லைத்தீவு நகரப்பகுதியில் காட்சிப்படுத்தப்பட்ட கடற்கலம் ஒன்று.

மாவீரர் நாளையொட்டி மாங்குளம் முகாம் அமைந்த பகுதியில் திறக்கப்பட்ட கரும்புலி லெப்.கேணல் போர்க் அவர்களின் உருவச்சிலை.












இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு டிசம்பர் மாதம் 05 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.